நெல்லை மாவட்டம்

நெல்லை மாவட்டம்

ஐந்தாண்டின் சாதனைகள்

(1951-56)

முதற் பதிப்பு : செப்டம்பர் 1956.

விலை அணா : 4

சென்னை அரசாங்க செய்தி விளம்பரத்துறை
வெளியீடு.

ஸ்ரீ ஸ்ரீபிரகாசா

சென்னை மாநில கவர்னர்

திரு காமராஜ்

முதலமைச்சர்





திரு எம்.பக்தவத்ஸலம்

திரு ஏ.பி.ஷெட்டி

திரு S.S. ராமசாமி படையாச்சி



திரு சி. சுப்ரமண்யம்

திரு சண்முக ராஜேஸ்வர சேது





பொருளடக்கம்

	பக்கம்
நூல் முகம்	5
வளமார் நெல்லை	11
நீர் பெருக	17
நிலம் கொழிக்க	35
தொழில் வளர	57
அறிவு வளர	81
நாடு உயர	91
தாழ்வு நீங்க	119
அமைதி நிலவ	133
நலம் சிறக்க	141
எல்லோரும் கூடி இன்புற்றிருக்க	153
முன்னேற்றப் பாதையிலே	163



நூல் முகம்

வானத்திலே வட்டமிட்டுத் திரியும் வண்ணப் பறவைகளும் காட்டிலே கவலையற்று வாழும் விலங்குகளும், "நாளை என்ன?" என்பதையே நினையாது வாழ்பவை. இன்று என்ன? என்பதுதான் அவைகளின் முதல் எண்ணம். ஆனால் மனிதன் அவ்வாறு வாழமுடியாது. அவ்வாறு வாழ நினைப்பதும் அறிவுடைமையாகாது.

இன்றைய நாளையும், வரப்போகும் நாளையும் எண்ணி அதற்கேற்ப வாழ்வை வகுப்பதில்தான் மனிதனின் உயர்வும், அமைதியும், பண்பும் விளங்குகின்றன. அப்போதுதான் அவன் கழிந்த நாட்களுக்காகக் கழிவிரக்கம்கொள்ளாமல் அமைதியான வாழ்க்கையை வாழமுடியும். இதனை நம் முன்னோர்கள் நமக்கு நன்கு வலியுறுத்திக் காட்டியுள்ளனர்.

துன்பம் வருவதற்கு முன்னர் அதனை அறிந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளாதவனின் வாழ்வு, எரிகின்ற தீயின் முன்னே இடப்பட்ட வைக்கோல் போரைப்போன்று அழிந்துபோய்விடும் என்னும் பொருளுடன் வள்ளுவரும்,

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்று கூறியுள்ளார்.

வள்ளுவன் வகுத்த அறநெறியிலே நிகழ்காலத்தையும், வருங்காலத்தையும் எண்ணி, நாடு முழுவதும் நலம் பெறும் வகையில் முதல் ஐந்து ஆண்டுத் திட்டம் நம் அரசாங்கத்தால் தீட்டப் பெற்றது.

1951-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்பட்ட இத் திட்டம் 1956-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தோடு முடிவடைந்தது. இத் திட்டத்தில் குறிப்பிட்டிருந்த எல்லாப் பணிகளையும் நாம் குறிப்பிட்டிருந்த காலவரையறைக்கு முன்பே முடித்துவிட்டோம். மக்களின் ஒன்றுபட்ட ஒத்துழைப்பினாலும், அரசாங்க ஊழியர்களின் ஆர்வத்தாலுமே நாம் இத் திட்டத்தை வெற்றிகரமான முறையில் சாதிக்க முடிந்தது.

இத் திட்டத்தின் தொடக்க காலத்தில் நம் மாநிலத்திற்குக் கிடைத்த மொத்த தொகை 86·43 கோடி ரூபாயாகும்.

தனித்தனியே ஒவ்வொரு துறைக்கும் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆகிய செலவின் விவரத்தைச் சுருக்கமாகக் கீழே காணலாம்.

சென்னை மாநிலம்

முதல் ஐந்தாண்டுத் திட்டம்

(1951 ஏப்ரல் முதல் 1956 மார்ச் முடிய)

ஒதுக்கப்பட்ட தொகை சுமார் ரூ. 86 கோடி.

செலவாகிய தொகை சுமார் ரூ. 84 கோடி.

துறைகள்.	ஒதுக்கப்பட்டது (லட்சத்தில்). ரூ.	செலவானது (லட்சத்தில்). ரூ.
வேளாண்மை ...	902	857
கால்நடை வளர்ச்சி	56	43
பால் பெருக்கம் ...	13	16
காடுகள் ...	75	29
கூட்டுறவு ...	17	11
மீன் துறை ...	49	35
கிராம வளர்ச்சி ...	30	77

துறைகள்.	ஒதுக்கப்பட்டது (லட்சத்தில்).	செலவானது (லட்சத்தில்).
	ரூ.	ரூ.
நீர்ப்பாசனம் ...	2,019	2,086
மின்சாரம் ...	3,086	3,068
குடிசைத் தொழில்கள் ...	44	52
ஏனைய தொழில்கள் ...	128	113
பாதைகள் ...	358	297
கல்வி ...	494	406
மருத்துவம் ...	248	248
சுகாதாரம் ...	518	475
மனையிடம் ...	190	152
பின் தங்கிய வகுப்புக்கள்	416	440
மொத்தம் ...	8,643	8,414

நீர்ப்பாசனத்திற்கும் மின்சாரத்திற்கும் மட்டும் நூற்றுக்கு அறுபது ரூபாய்மேனியில்செலவழித்துள்ளோம். இதன் பயனாய் நாலு லட்சம் ஏக்கருக்கு இப்போது நீர் பாய்கிறது. பல கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கி அவைகளை ஒளியுடைய ஊர்களாக்கி உள்ளோம். மற்ற மாநில அரசாங்கங்களை விட இத் துறையில் நமது சாதனை மிகவும் பெருமைபடக்கூடிய முறையிலே உள்ளது.

முதல் திட்டத்தோடு நம்முடைய லட்சியங்கள் நிறைவெய்தவில்லை, நாட்டிலே இன்னும் உணவுக்குறைவும் தொழிலிலே பிற்போக்கும், மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டமும் நிலவி வருகின்றன. இவை அனைத்தும் நீங்கினலொழிய நாடு நலம் பெற்றுவிட்டது என்று கூறமுடியாது. மக்களின் வாழ்வும் மேனிலை எய்திவிட்டதாக அமைதி அடையமுடியாது.

இவை அனைத்தையும் போக்குவதற்குத்தான் முதல் ஐந்து ஆண்டுத் திட்டம் முடிந்தவுடனே, இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டம் தொடங்க பெற்றுள்ளது. இத் திட்டத்தால் நாடு பெரும் அளவுக்கு வளமடையும். பெரிய பெரிய தொழில்கள் தொடங்கப் பெறும். மக்களின் ஏழ்மையும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியும். பஞ்சமும், பிணியும், துன்பமும், துயரமும் அடியோடு அழியும்.

இப் பெரும் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற மக்கள் அனைவரும் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பார்களாக! அரசாங்கம் வேறு, மக்கள்வேறு என்று யாரும் எண்ணக்கூடாது. மக்களின்

நல்வாழ்வே அரசாங்கத்தின் இனிய வாழ்வு. அரசாங்கத்தின் பயனே மக்களின் பயன். மக்களின் அரசாங்கம் தழைக்க மக்கள் அனைவரும் ஒத்துழைப் பார்களாக!

வளமார் நெல்லை

‘ வானரங்கள் கனிகொடுத்து
மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு
வான்கவிகள் கெஞ்சும் ’

வளமார்ந்த பொதிகை. அப் பொதிகையிலே கருவுயிர்த்து, வெள்ளி யுருகியோடுவது போல் தத்திக் குதித்து ஆர்ப்பரித்து இழிதரும் தண்பொருநை, பசிய வயல்களின் ஊடே நெளிந்தோடி, நிலவு தழுவிய எக்கரை நோக்கியபடியே கடலோடு கலந்து குலாவுகிருள். அவள் தன் வழிநெடுகக் காணும் இன்பக் காட்சிகள்தாம் எத்தனை, எத்தனை!

அதோ ஒரு மந்தி! அம்மந்தி குந்தி யிருக்கும் கிளைக்கு நேராக ஒரு தெள்ளிய சுனே. சுனையின் கண்ணுடி போன்ற தெளிந்த நீரிலே தன் நிழலைப்

பலமுறை அது உற்று உற்றுப் பார்க்கிறது. தலையை நன்ருகக் கோதி விடுகிறது. முகத்தைப் பன்முறை துடைத்துத் தடவிக் கொள்கிறது. முழியையும் மோவாயையும் மற்றுமொரு முறை நீரினுள் கூர்ந்து பார்த்துக் களிக்கிறது. உற்சாகமாக எழுந்து வாலை உதறி நீவுகிறது. எதற்காக இந்த அலங்கார மெல்லாம்? இறுதியாகச் சுனைக்குள் ஒரு பார்வை பார்த்து விட்டுத் தன் செவ்விய முகம், பச்சரிசியன்ன பல்லால் அழகு பெறத் தாவியோடும் அம்மந்தி ஒரு மணமாகாத குமரி. தான் காதலிக்கும் ஒரு கடுவனோடு சிறிது நேரத்திற்கு முன்புதான் மறைவாக விளையாடிக் கொண்டிருந்தது. அதை அன்னை அறியாமல் மறைப்பதற் காகத்தான் இத்தனை முன்னேற்பாடுகளும். இக்காட்சியிலே தன்னை மறந்து சென்ற தண்பொருநை வெண்பாறை யொன்றிலே மோதி வெட்கித் தலைகுனிந்தோடும் கோலமே கோலம்!

பொன்னிக்கு நிகரான பொருநை, அடக்கமே உருவாக, மணற்பரப்பிலே ஊர்ந்து செல்கிருள். அப்பரப்பிலே சிற்றில் இழைத்தும், சிறுசோறு அட்டும், கடலாடியும், பரதவமகளிர்.

மகிழ்ந்திருக்கும் காட்சியைக் கண்டு களிக்கிருள். மகளிரின் ஆர்ப்பரிப்பு கடலலைகளின் இரைச்சலோடு போட்டி யிடுகிறது. பைந்தமிழ்த் தென்றல் தவழ்ந்தாட, வான்முகடு முட்டிய பசிய முடியணிந்த பொதிகை, கடலலைகளின் ஆர்ப்பரிப்பையும் அக்கடலிலே ஆடும் கன்னியரின் எக்களிப்பையும் நோக்கிய வாறே இறுமாந்து நிற்கிறது. அப் பொதிய மலையைச் சுற்றிலும் பசிய கழனிகள் சூழ்ந்திருப்பது, தன் பசுந் தாவணியைப் பரப்பி ஒரு நடனமாது முழந்தா ளிட்டிருப்பதைப் போலத் தோற்ற மளிக்கிறது.

மலைவளமும், வயல்வளமும், கடல் வளமும் ஆகிய முப்பெரு வளங்களும் கொழித்தது வளமார் நெல்லை. மலை மீதுள்ள தினைப் புனத்திலே காவல் மகளிர் கவண்வீசினுல், வயலில் மேய் கின்ற பறவைகள் ஒன்ருக எழுந்து ஆர வாரிக்குமாம். வயலிலும் கானலிலும் இரை தேடித் திரியும் நாரை, தூங்கு வதற்கு மலைச் சாரலை நோக்கிச் செல்லு மாம். இத்தகு வளநாடும் இடையில் வறிய நாடாகியது; வெறுக்கை மிக் கோர் வெறுங்கையைப் பிசைவோ ராயினர். உருக்குலையாது—கட்டிளமை மாருது இருந்த விளைநிலங்கள் எல்லாம்,

வாழ்த்திய உழவர் வசைபாட, காதல் புரிந்த கன்னியரும் காளையரும் கடிய உழைப்பால் கண்சோரத் தன் வளப்பத்தை இழந்தது. அதன் அழகு பாழாகியது.

மறைந்த பழமை மீளவும், சுருங்கிய வளமை பெருகவும், ஒடுங்கிய செல்வம் ஓங்கித் தழைக்கவும் வேண்டும். அதற்கான முயற்சிகளில் தலைப்பட்டு பல அரிய செயல்களை இதுவரையில் அரசாங்கம் ஆற்றியிருக்கின்றது. ஆற்ற விருப்பன இன்னும் மிகுதி. அதை நோக்க, இதுவரையில் செய்திருப்பவை மிகச் சாதாரணம். மக்களின் மனமுவந்த ஒத்துழைப்புடன் நம் நாட்டின் பழம் சீர்த்தியினை விரைவில் காணுவோம் என்பது உறுதி.

4,337 சதுரமைல் பரப்புடைய நெல்லை மாவட்டத்தின் மக்கள் தொகை 2,445,967. வேளாண்மை, நெசவு முதலிய தொழில்களோடு முத்துக் குளித்தலும் சங்கெடுத்தலும் இங்கு நடைபெறும் குறிப்பிடத்தக்க தொழில்களாகும். முத்துக் குளித்தல் ஏனைய மாவட்டங்களுக்கு இல்லாத ஒரு தனிச் சிறப்பு. அதற்குக் காரணம் இம் மாவட்டத்திற்கு வாய்த்துள்ள கடல்வளமே. 85 மைல் நீளமுள்ள

இதன் கரையோரக்கடல், வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு வளப்பம் மிக்கதாகவும் உலகின் முத்து அளங்களுள் ஒன்ருகவும் இருந்து வருகின்றது.



CONNEMARA PUBLIC LIBRARY
10 FEB 1957
MADRAS

"தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள்தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தோறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாயதன்றே"

—கம்ப ராமாயணம்.

நீர்... பெருக!

புறநானூற்றிலே உள்ள ஓர் அழகான பாடலைக் கேளுங்கள். ஓர் அரசனுக்கு அறிவுரை கூறுவதற்காகப் பாடப்பட்ட பாடல் அது. நமக்குத் தேவையான அடிகளை மட்டும் இங்கே கூறுவோம்.

' உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே '

உணவினால் உண்டாக்கப்பட்ட இந்தப் பிண்டமாகிய உடல், உணவையே நம்பி வாழ்கிறது. நம்மையெல்லாம் சோற்றுப் பிண்டம் என்கிறார். மெய்யான வாக்கு ! உடம்புக்கு அடிப் படையாக வுள்ள அந்தஉண்டி எதனால் ஆகியது? உணவுக்கும் அடிப்படையாகஉள்ளது எது ? நிலமும் நீருமே. இதைத்தான் நாம் மனதில்பதித்துக் கொள்ளவேண்டும்—நிலமும் நீரும். நிலம்இருக்கிறது. அதை உழுது பண்படுத்த உழவனும் இருக்கிறான். அவனுக்கு வேண்டிய பிற பொருள்களும் இருக்கின்றன. ஆனால் நீர் ?அது ஒன்றுக்குதான் பஞ்சம்.

பருவம் என்றும் எங்கும் ஒரே நிலையில் இருப்பதில்லை. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு பருவம் பொய்யாது வெள்ளம் பெருக்கெடுத்த எத்தனையோ பள்ளங்களும் சிற்றோடைகளும் இன்று பாழடைந்து கிடக்கின்றன. நம் பாதத்தைக் குத்தித் துளைக்கும் பரல்கற்கள் அங்கெல்லாம் பரவியிருக்கக் காண்கிறோம். நீர் நிரம்பித் ததும்பி வழிந்த ஏரிகளும் பலவிடங்களில் முட்செடிக் காடுகளாக மாறிவிட்டன. இவ்வாறு இயற்கை நமக்கு இடுக்கண் பல விளைவித்தபோதிலும் ' இயற்கை சூழ்ச்சி செய்கிறது, என்ன செய்வது ?', என நாம் ஏங்கி உட்கார்ந்து விடவில்லை.

மக்களாட்சி மக்களின் கைக்கு வந்ததும் நம் மாநில அரசாங்கம், பயிர்த் தொழிலுக்கு மூலமாக விருக்கும் இந்த நீரைப் பற்றித்தான் முதலில் எண்ணமிட்டது. ' நிலனொடு நீரே ' என்பதை அது மறக்கவில்லை. எனவே அரிதில் முயன்று பல திட்டங்களை உருவாக்கியது. அரசாங்கத்தின் முழு நோக்கமும் நீரைத் தேக்குவதிலும் நிலத்தைப் பண்படுத்துவதிலுமே சென்றது. இப்பணிகளில் நேர்ந்த இடர்களும் பொருளைத் திரட்டுவதில் ஏற்பட்ட தொல்லைகளும் ஒருபுறமிருக்கட்டும். சாதித்தவை என்ன என்பதைத் தானே முதலில் காணவேண்டும் ?

இந்தியாவின் வடக்குப் பகுதியில் ஓடும் ஆறுகளைப்போன்ற பெரிய ஆறுகள் தென்னகத்தே கிடையாது. இங்கு பெரிய நதிகள் எனக் கூறத்தக்கவை ஒன்றிரண்டே உள்ளன. இவற்றைக் கொண்டே பாசனத்தைப் பெருகச் செய்வது எளிதான காரியமல்ல. இருப்பினும் ஒரு சொட்டு நீரைக்கூட வீணாகக் கழியவிடாமல் செய்தேனும் நீரைப் பெருகச்செய்யும் முயற்சியில் அரசாங்கம் தலைப்பட்டது. புதிய திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றியதோடு, ஏற்கனவே உள்ளவற்றைப் பழுதுபார்க்கும் வேலைகளையும் மேற்கொண்டது.

நீர்ப்பாசனத்திற்கென முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெற்ற தொகை 2,019 லட்ச ரூபாய். ஆனால், தேவையின் காரணமாக, மேலும் 69 லட்சம் கூடுதலாகவே இதற்குச் செலவிடப்பட்டது. ஆங்கில ஆட்சியின்போது இருந்த சென்னை மாநிலத்தின் நீர்ப்பாசனச் செலவு சுமார் 18 கோடி ரூபாயாகும். ஓர் ஆண்டிற்கு அல்ல ; 150 ஆண்டுகளாகச் சிறுகச் சிறுக ஆங்கில அரசாங்கம் அருள் பாலித்ததால் ஆகியுள்ள மொத்தச் செலவே இவ்வளவுதான் ! ஆனால், நாம் உரிமையடைந்து நான்கைந்து ஆண்டுகளுக்குள் இத்துறையில் ஏறக்குறைய 20 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதுபோக முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் ரூ. 21 கோடி செலவிடப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தின் நீர்ப்பாசனம் சிறப்பாகத் தாம்பரபரணி நதியைச் சார்ந்ததே. இந்த நதியும் இதன் துணை ஆறுகளான (உப நதிகள்) மணிமுத்தாறு, வராகநதி, கடனு நதி, சித்தாறு முதலியவைகளும், தென்காசி, சங்கர நயினார்கோயில், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர் ஆகிய வட்டங்களிலுள்ள (Taluk) விளை நிலங்களை வளம்பெறச் செய்கின்றன. இவை அல்லாமலும் கோயில்பட்டி வட்டத்தில் வைப்பாறு, உப்போடு என்னும் அருவிகளும் நாங்குனேரி வட்டத்தில் பச்சையாறு, நம்பியாறு, கருமனையாறு ஆகிய ஆறுகளும் பாய்கின்றன.

மணிமுத்தாறுத் தேக்கம்

தண்பொருநையின் துணை ஆறுகளுள் முதன்மையானது மணிமுத்தாறு. அகத்திய மலையின் வட சரிவில் 6,000 அடி உயரத்திலிருந்து இந்த அருவி கிளம்புகிறது. இவ்வாற்றில் பருவ காலங்களில் பெருகும் பெரு வெள்ளம், நீண்ட



திசை கெட்டுப் பரவிய நீர்

காலமாக வீணாகிக்கொண்டே வந்தது. அம்பாசமுத்திரத்திற்குத் தென் கிழக்கே நான்கு கல் தொலைவில் மணிமுத்தாற்றின் குறுக்கே ஓர் அணையைக் கட்டி இந்நீரைப் பயன்படுத்த முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இவ்வருவி கன்னடியன் அணைக்கட்டுக்கு மேலே தாய்நதியுடன் கலக்கிறது. கலக்கும் இடத்திற்குமேலே மூன்று கல் தொலைவில் மணிமுத்தாறுத் தேக்க அணை எழும்பி வருகிறது. 1957-ஆம் ஆண்டு எப்ரல் மாதத்தில் இத்திட்ட வேலைகள் முடிவடையலாம். இப்பொழுது விரைந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் இத்திட்டத்தை 1950-ஆம் ஆண்டு நவம்பர் மாத இறுதியில் தொடங்கினர்.

இந்த அணையின் நீளம் 9,820 அடியாகும். நடுவில் கல்கட்டிடமும், இருமருங்கிலும் மண்ணாலாகியகட்டிடமும் இருக்கும்,



நிலைப் பட்டுப் பாய்கிறது

கெட்டியான கல் கட்டிடத்தின் நீளம் 1,230 அடி. மீதமிருப்பது மண் கட்டிடம். மண் கட்டிடத்தில் 5,460 அடி கல்லணையின் இடது புறத்திலும், 3,130 அடி கல்லணையின் வலது மருங்கிலும் இருக்கும். இவ்வணையால் தேங்கும் நீரின் பரப்பு 3·3 சதுர மைல்களாகும். தேக்கத்தின் கொள்அளவு 4,059 கோடி கன அடியாகும். 15 அடி உயரக் கதவு உயர்த்தப்பட்டதும் தேக்கம் 5,500 கோடி கன அடி நீரைக் கொள்ளும்.

கல்லணையின் உயரம் 150 அடி. அதன் நீளவாட்டில் அது பதினான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கல்கட்டிடத்தின் வேலை முழுவதும் முடியும் தருவாயி லிருக்கிறது.

நூற்றுக்குச் சுமார் 92 பங்கு வேலை நிறைவேறி விட்டது. எட்டு விழுக்காடுதான் பாக்கியுள்ளது. அங்கும் மிக விரைவாக வேலை நடைபெற்றுவருகிறது.

மண்ணணையின் அதிக உயரம் தரை மட்டத்துக்குமேல் 110 அடி. சில பகுதிகளில் வேண்டிய உயரத்திற்கு அணை எழும்பி விட்டது. இவ்வணையில் நூற்றுக்கு சுமார் 60 பங்கு வேலை முடிந்துவிட்டது. முடியாமல் மீதமிருக்கும் பகுதி 40 விழுக்காடே.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி வரையில், அதாவது 1956-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் இதற்கு ஆகியுள்ள செலவு 344·3 லட்சம் ரூபாயாகும். இத்திட்டம் முழுவதற்குமாக எதிர் பார்க்கப்படும் மொத்தச் செலவு ரூ. 505 லட்சமாகும்.

அணைகட்டுவதில் ஈடுபட்டு உள்ளோருக்குப் பலவகை வசதிகளும் குடியிருப்பு ஏற்பாடுகளும் செய்துதர வேண்டியது மிகவும் இன்றியமையாத அடிப்படை வேலையாகும். அவ் வேலைகள் பலவும் சிறப்புற நடந்தேறிவிட்டன. அங்குள்ள அலுவலாளர், உழைப்பாளர் முதலியோரின் நலனுக்காக கருதிச் மருத்துவவசதி செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் தாம்பர பரணியின் ஆயக்கட்டான 83,000 ஏக்கருக்கு இன்றுள்ள நீர் வசதியைப் பெருக்கும். அம்பா சமுத்திரம், திருநெல்வேலி, ஸ்ரீ வைகுண்டம், நாங்குனேரி, திருச்செந்தூர் ஆகிய வட்டங்களில் உள்ள 321 ஆயக்குளங்களை நிரப்பி. அவைகளுக்கு நிலையாக நீர் கிடைக்குமாறுச் செய்யும். அதற்காக 30 கல் நீளமுள்ள ஒரு மூலக்கால்வாயும்,

பன்னிரண்டு கிளைக் கால்வாய்களும் வெட்டப் பட்டிருக் கின்றன. இன்னும் பத்து விழுக்காடு வேலையே பாக்கியிருக் கின்றது. நீர் பெறும் குளங்களின் விவரம் :—

வட்டம்			குளங்களின் எண்ணிக்கை
அம்பாசமுத்திரம்	..	..	75
திருநெல்வேலி	..	..	32
ஸ்ரீ வைகுண்டம்	..	..	18
நாங்குனேரி	..	..	122
திருச்செந்தூர்	..	..	74
			321

புதியதாக நீர் பாயவிருக்கும் நிலம் 2,000 ஏக்கராகும். இங்கு குறிப்பிட்டுள்ள ஆயக்குளங்களால் நிலையான நீர்வசதி பெறவிருக்கும் நிலப்பரப்பும் ஏனைய பகுதியுமாகச் சேர்ந்து 20,000 டன் தானியத்தைக் கூடுதலாகத் தருமென எதிர் பார்க்கப்பட்டுள்ளது. 1957-ஆம் ஆண்டில் முழுப்பயனும் கிடைக்கும்.

மணி முத்தாறு தேக்கம் ஒன்றுதான் இந்த மாவட்டத்தில் பெரியது. எனினும் மற்றவையும் புறக்கணித்து விடத்தக்கவை அல்ல. அநேக ஆண்டுகளாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த எத்தனையோ ஆயக்குளங்கள் திட்ட காலத்தில் பழுது பார்க்கப் பட்டுள்ளன. 150 ஆண்டுகளாகச் சீர்கெட்டுக் கிடந்த சீவலப் பேரிக்குளம் புதுப்பிக்கப் பட்டுள்ளது. 4 லட்சம் செலவில் செப்பனிடப்பட்ட இதன் ஆயக்கட்டில் 550 ஏக்கர் நிலம் உள்ளது. ஆண்டுக்குச் சுமார் 275 டன் நெல் இங்கு விளைகிறது.

சங்கரன்கோயில் வட்டத்தில் வயலிமலையடிப்பட்டி கிராமத்தி லுள்ள உடைந்த கண்மாய்கள் குறிப்பிடத் தக்கவை.

காகநதி அணைக்கட்டிலிருந்து வாத்துக்கால்களும் இவைகளுக்கு உள்ளன. இவைகளைப் புதுப்பித்தும், கால்வாய்களையும் கண்மாய்களையும் மராமத்துச் செய்தும், சுமார் 600 ஏக்கர் நிலத்தை நம் அரசாங்கம் விளைச்சலுக்குக் கொண்டு வந்துள்ளது. இதற்கான செலவு ரூ. 6 லட்சம்.

கோயில் பட்டி வட்டத்தில் விளாத்திகுளம் ஏரி மராமத்தும், திருச்செந்தூர் வட்டத்தில் சடையனேரி மராமத்தும் நடந்தேறியிருக்கின்றன. 9 லட்சம் ரூபாய்ச் செலவில் ஆயக்குளங்களைப் பழுது பார்க்கும் திட்டமொன்று வகுக்கப்பட்டு, அதன்படி 304 குளங்கள் இதுவரை பழுது பார்க்கப்பட்டுள்ளன.

உணவைப் பெருக்கும் இயக்கத்தின் கீழ் இரண்டு வேலைகள் நடந்தேறின. அவைகளுக்கான செலவு ரூ. 3,57,480. அவற்றால் பயன்பெறும் நிலம் 760 ஏக்கர். கூடுதலாகுமென எதிர்பார்க்கப்பட்ட விளைச்சல் 285 டன்கள்.

ஆயக் குளங்களை விரிவாக்கும் திட்டத்தின் கீழ் 168 பணிகள் நடந்தேறியுள்ளன. 49,821 ஏக்கர் நிலம் இவற்றால் பயன் பெறுகின்றது. 6,010 டன் தானியம் கூடுதலாகியிருக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவைகளுக்கான செலவு ரூ. 3,71,576.

சிறப்பாக மேற்கொள்ளப்பட்ட சிறிய பாசனத் திட்டத்தின் கீழ் 46 வேலைகள் முடிவு பெற்றுள்ளன. 11,189 ஏக்கர் நிலம் நீர் வசதி பெற்றுள்ளது. 1,539 டன் தானியம் கூடுதலாகியிருக்கிறது. 1,23,514 ரூபாய் இவற்றிற்காகச் செலவிடப்பட்டது.

மொத்தத்தில் சென்ற ஐந்து ஆண்டுகளில் மராமத்துத் துறையைச் சேர்ந்த 98 ஆயக் குளங்களும் மற்றும்

683 குளங்களும் பழுது பார்த்து புதுப்பிக்கப் பட்டுள்ளன. இவற்றிற்கு முறையே ரூ. 5,37,778-ம், ரூ. 13,87,403-ம் செலவாகியுள்ளது.

அரசாங்கத்தைச் சேர்ந்த மொத்த ஆயக்குளங்கள் 2178. கால்வாய்கள் 504. இம்மாவட்டத்தின் மழையளவு சராசரி ஆண்டுக்கு 28·76″.

ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இம்மாவட்டத்தில் நான்கு வடிமுனைக் குழாய்களும் 185 இறைப்புக் குழாய்களும் அமைக்கப்பட்டன. இப்பணியினை வேளாண்மைத்துறை மேற்கொண்டது.

வடிமுனைக் குழாய்



மின்சாரம்

மின்சாரம் இன்றைய நாகரிக வாழ்க்கையின் மையமாக இருக்கின்றது. அண்மையிலேதான் மனிதன் மின்சாரத்தைக் கண்டுபிடித்தான் என்ருலும், மின்சாரமே இல்லாத ஒரு காலம் இருந்திருக்கும் என்று, இன்று நாம் நம்புவது கூட அருமை. அந்த அளவுக்கு அது நமது அன்ருட வாழ்க்கையில் பின்னிக் கலந்துவிட்டது.

எனினும் நம்மைப்பற்றிக் கொஞ்சமும் கவலை கொள்ளாத வெள்ளையன் ஆட்சி நீண்ட காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வந்ததன் பயஞக, நம் நாட்டுப்புற மக்கள் மின்சாரத்தைப் பார்த்தறியாத நிலையில் வாழ்ந்தனர். அடுப்பு முதல் அகில உலகத் தொடர்பு வரை மின்சாரம் பயன்பட்டு வரும் இந்தக் காலத்திலும் நாம் இவ்வாறு வாழ்வது, நம் முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாகிவிடும் என்பதை யுணர்ந்தே நமது அரசாங்கம், மின்சாரத்தின் வளர்ச்சியில்—அதுவும் சிறப்பாக நாட்டுப்புறத்தில் மின்சாரத்தைப் பரப்புவதில்—நல்ல கவனம் செலுத்தி வருகிறது.

சென்னை மாநிலமே நாட்டுப்புறத்திற்கு மின்சாரமிடுவதில் முன்னணியில் நிற்கின்றதென்ற செய்தி நமக்கெல்லாம் பெருமை தருவதாகும். சென்னை மாநில அரசாங்கம் இதன் முன்னேற்றத்தில் கொண்டுள்ள ஆர்வம் நன்கு புலஞகின்றது. சுமார் 31 கோடி ரூபாயை இதன் வளர்ச்சிக்குச் செலவிட்டுள்ளது. 1951-ஆம் ஆண்டில் மின்சாரம் பெற்ற ஊர்களின் எண்ணிக்கை—நகரங்கள் உள்பட—1,613. திட்டத்தின் இறுதியில் மின்சார வசதி பெற்றிருக்கும் ஊர்கள் 3,543. திட்டகாலத்தில் மின்சாரமிடப் பட்டவை பெரும்பாலும் கிராமங்களே. 2,900 கிராமங்கள் முதல்திட்ட காலத்தில் மின்சாரஒளி பெற்றன. மேலும் 3,000 கிராமக் கைத்

தொழில்களுக்குப் புதிதாக மின்சாரம் தரப்பட்டது. 30,000 மின்சாரஇறைப்புக் குழாய்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன என்பதும் குறிபபிடத்தக்கது.

திருநெல்வேலி மாவட்டம் இத்துறையில் நன்கு வளர்ந்துள்ளது. நாட்டுப்புற மின்சார வளர்ச்சியைப் பொறுத்தமட்டில், திருநெல்வேலி மாவட்டம் மிகவும் முன்னேறியுள்ளது.

பாபநாசம் மின்சார உற்பத்தி நிலையத்தின் உற்பத்தியளவு ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்க காலத்தில் 21,000 கிலோவாட்டாக இருந்தது. திட்டத்தின் இறுதியில் 28,000 கிலோவாட்டாக இது அதிகரித்தது. எனவே ஐந்தாண்டுக் காலத்தில் கூடுதலாகியுள்ள உற்பத்தியளவு 7,000 கிலோவாட் ஆகும்.

நாட்டுப் புறத்திலே மின்சாரமிடும் பணி சிறப்பாக நடைபெற்றது என முன்னரே கூறினோம். திருநெல்வேலி மாவட்டத்தில் 1951-ஆம் ஆண்டில் 72 ஊர்கள் மின்சாரவசதி பெற்றுஇருந்தன. இன்றோ 244 ஊர்களில் கண்ணைப்பறிக்கும் மின்னொளியைக்காண முடியும். எளிதிலே கைகூடிவிட்ட காரியமல்ல இது. இதற்கு ஆகியுள்ள செலவு 1 கோடியே 45 லட்சம் ரூபாயாகும்.

மின்சாரம் போடப்பட்டுள்ள ஊர்களின் பெயர்கள் ஆண்டு வாரியாகக் கீழே தரப்பட்டுள்ளன.

1951-52

கோயில்பட்டி வட்டம் (Taluk).—பறம்புக்கோட்டை, இளைய ரசனெந்தாள், ஐயனேரி, வெங்கடாசலபுரம், தேவர்குளம், சன்னதி புதுக்குடி, சித்தார்சத்திரம்.

தென்காசி வட்டம்—ஊர்மேலழகியான், நைஞுநகரம், கடயநல்லூர், பௌகாடவாளே, கிருஷ்ணபுரம், மாவடிக்கால், முத்துக்கிருஷ்ணபுரம், குழுண்டாபுரம், அடிகள்உண்கலம், ஆறுமுகம்பட்டி, சின்னப்டணையான்குளம், டணி முத்தாறுத் தேக்க மறுகு.

அம்பாசமுத்திரம் வட்டம்—சின்னடணையான்குளம்.

சங்கரன்கோயில் வட்டம்—சங்கரன்கோயில், புலியான் குளம்.

1952-53

கோயில்பட்டி வட்டம்—ஆலம்பட்டி, சத்திரம்பட்டி, தொனுகல், அப்பனேரி, படந்தபுளி.

அம்பாசமுதிரம் வட்டம்—ரெங்காசமுத்திரம், சாட்டுப் பத்தூர், சிங்கம்பத்தூர்.

திருநெல்வேலி வட்டம்—கமூகுமலே, சத்திரம், குடியிருப்பு.

1953-54

தென்காசி வட்டம்—மேலாப்பலூர், கீழாப்பலூர், சுந்தர பாண்டியபுரம், பாவூர்ச்சத்திரம், தொரைசாமிபுரம், தட்டான் குளம், பட்டாக்குறிச்சி.

அம்பாசமுத்திரம் வட்டம்—சேர்வைக்காரன்பட்டி, கடய நல்லூர்.

1954-55

கோயில்பட்டி வட்டம்—சினிவெல்லபுரம், சித்ரம்பட்டி, அவல்நத்தம், பழைய அப்பனேரி, வேளையுதையபுரம், கிளயீரல், அருணுசலபுரம், பாலகிருஷ்ணபுரம், அழகப்ப புரம்.

தென்காசி வட்டம்.—வெள்ளக்கால், ராஜபாண்டி, வீர கேரளம்புதூர், சிரந்தை, சொக்கன்பட்டி, திருக்குண்டபுரம், காசிதர்மம், கோடிக்குறிச்சி, சிவராம்பேட்டை.

அம்பாசமுத்திரம் வட்டம்.—தேசமாணிக்கம், நரியான் குளம், கீழச்சேவல், பண்ணஞ்சடை, கருத்தபிள்ளையார்.

திருநெல்வேலி வட்டம்.—ராமாயணப்பட்டி, வாகைகுளம்.

சங்கரன்கோயில் வட்டம்.—நலுவசங்கோட்டை, வடக்குருவி குளம், தென்குருவிக்குளம், ராமலிங்கபுரம், ஆட்டுப்பட்டி, வாசுதேவநல்லூர், கீழநலந்தலா, நாய்க்கன்பட்டி, மேல நலந்தலா, பழம்கோட்டை, வடக்குப்பட்டி, பிச்சத்தனவன் பட்டி.

நாங்குனேரி வட்டம்.—களக்காடு பத்தை, சுடலயன்குளம், சிதம்பரபுரம் (சீவல்பேரி), வடமலைச்சமுத்திரம், படலையார் குளம், கீழ்க்கருவேலாங்குளம், மேலக்கருவேலாங்குளம், நாங்குனேரி, நம்பிநகரம், சங்கர்நகரம், புளியக்குறிச்சி, செங்களக்குறிச்சி, எருவடி, சிவஞானபுரம்.

திருச்செந்தூர் வட்டம்.—ஆழ்வார்திருநகரி, அழகி மணவாளபுரம், சாத்தன்குளம், திருச்செந்தூர், தென்திருப் பேரி.

ஸ்ரீவைகுண்டம் வட்டம்.—ஸ்ரீவைகுண்டம், பிச்சன்தோப்பு, பெரும்பத்தூர், கோவில்பட்டி.

1955–56

அம்பாசமுத்திரம் வட்டம்.—நமச்சிவாயபுரம், வெள்ளி குளம், பாபக்குடி, தெற்குமாடத்தூர், வளுதூர், செங்குளம், சிவனந்தனூர், செல்லப்பிள்ளையார்குளம், அணைந்தபெருமா ளன்தன்னூர், பண்டாரகுளம், தேத்தரப்பாபுரம், சங்கர லிங்கபுரம், செக்கடியூர், முப்புலியூர்.

நாங்குனேரி வட்டம்.—தெற்கு நாங்குனேரி, முறுகல் குறிச்சி, வடக்குச்சிமெதில், தளபதிசமுத்திரம், ராஜகல் மங்கலம், திருவேங்கடநத்தம், திருக்கருங்குடி, நம்பித்தள வார்பட்டி, கவண்டனேரி, பனகுடி, வடக்கு வள்ளியூர், ராதா புரம், வடக்கன்குளம், பழவூர், அவரிகுளம், அம்பலவாண புரம்.

கோவில்பட்டி வட்டம்.—அலங்காபுரம், ஊத்துப்பட்டி, இல்லுப்பயூரணி, வெளுக்குண்டபுரம், குமாரெட்டயபுரம், நாச்சியார்பட்டி, குமாபுரம், ஷோலாப்புரம்.

திருச்செந்தூர் வட்டம்.—நாசரத், பிரகாசபுரம், முகப்பேரி, குறும்பூர், அலந்தலை, காயல்பட்டினம், மெய்ஞானபுரம், ஆறுமுகனேரி, உடங்குடி, செட்டியபட்டி, செட்டியபத்து, சமயபுரம், மண்டு—தொண்ருபட்டி.

தென்காசி வட்டம்.—திருவியாநகர், பான்போலி, வடகரை, வாவநகரம், திருமலைக்கோயில், திரிபுரசுந்தரபுரம், குலசேகரன்பட்டி, மேலவீரனம், அகரம், இஞம் (இடரங்குளம்), அருணசலபுரம், மேட்டூர், கோசி லுவைத்தான், அலங்குளம், நத்தம், ராஜகோபால்பேரி, பொய்கை.

சங்கரன்கோயில் வட்டம்.—வாகைக்குளம், சின்னவாகைக் குளம், கல்லிகுளம், குறிஞ்சிகுளம், கணபதிப்பட்டி, பிள்ளை யார் நத்தம், நகரம், பெரும்பத்தூர், மண லூர், கரிவலம் வந்தநல்லூர், கீழநிலித்தன்னல்லூர், வெங்கடாசலபுரம், மகேந்திரவாடி, ரெங்காசமுத்திரம், ராயப்பபுரம், புதூர், புதுக்குளம், அவுடியபுரம்.

திருநெல்வேலி வட்டம்.—தாலயூது.

ஸ்ரீவைகுண்டம் வட்டம்.—புதுக்குடி.

1951—52-ல்	22 ஊர்கள்.
1952—53-ல்	10 ஊர்கள்.

1953—54-ல்	..	9 ஊர்கள்.
1954—55-ல்	..	60 ஊர்கள்.
1955—56-ல்	..	88 ஊர்கள்.
மொத்த ஊர்கள்	..	189

சிறப்பாக வேளாண்மை வசதிக்குத்தான் மின்சாரம் பயன் படுத்தப்பட்டது. இறைப்பு வசதியளிப்பதை மட்டுமே கருத்தில் கொண்டுதான் பெரும்பாலும் திட்டங்கள் யாவும் மேற்கொள் ளப்பட்டன.

மின்சாரவசதி பெறும் வேளாண்மைத் தொழில்களின் எண்ணிக்கை விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

1-4-1951	360
1-4-1952	507
1-4-1953	595
1-4-1954	670
1-4-1955	900
1-4-1956	1,212

1951-ஆம் ஆண்டில் 360 இடங்களில் மட்டுமே மின்சார உதவி பெற்றுவந்த வேளாண்மை, சென்ற ஐந்தாண்டுகளில் கூடுதலாகப் பெற்றிருக்கும் மின்சார வசதி குறிப்பிடத்தக்க தாகும். சுமார் மூன்று மடங்குக்கு அதிகமாக சென்ற ஐந்தாண்டுகளில் உழவுக்கு மின்சார வசதி யளிக்கப்பட் டிருப்பதைக் காணலாம்.


நிலம்...
கொழிக்க!

“ நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே ”

— புறநானூறு 187.

நிலம் கொழிக்க!

பருவம் பொய்த்தது ; மக்களின் வறுமையோ மிகுந்தது ; எனவே நாட்டுப்புற மக்கள், காடுகளின் உயிரையே உறிஞ்சத் தலைப்பட்டனர். அதன் விளைவாக வளமிழந்து பாழடைந்த காடுகளே இந்த மாநிலத்தின் நில வளத்திற்கு நேர்ந்த முதற் பெருங்கேடு எனலாம். ஆயிரமாயிரம் ஆண்டுகள் உழுது உழுது, நிலத்தின் உரத்தையெல்லாம் உறிஞ்சி விட்டமையால் வளங்குன்றிப் போயிருக்கின்ற விளை நிலங்கள், நமது மாநிலத்தின் நிலக் கொழுமைக்கு நிகழ்ந்துள்ள மற்றொரு பெருங்கேடு. இவ்விரு இடர்களையும் போக்கி, மீண்டும் நம் மண் வளங்கொழிக்க முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நிலச் செழிப்பிற்குச் சீரிய உழவும், உழவிற்கு மாடும் காரணமாக இருப்பதால், கால்நடை வளர்ச்சி குறித்தும் அரசாங்கம் ஆவன செய்துள்ளது.

காடுகள்

வையத்தின் வனப்பும் வறுமையின் கோலமும்.

காடுகள் இயற்கையின் அருட்கொடை. உலகம் தோன்றிய காலந்தொட்டு, அதன் வளப்பத்திற்கும் அழகிற்கும் மங்காத

ஊற்ருக இருப்பவை காடுகளே. தென்றல்காவும், தேனிய நறுஞ் சுனைகளும் நல்கும் தெவிட்டாத இன்பத்தை நுகர மறுக்கும் விலங்கைக்கூட இம்மண்ணில் காண்பதரிது. என்னும் மனிதனின் வறுமை அவன் கண்களைக் குருடாக்கி விட்டது; காதுகளைச் செவிடாக்கிவிட்டது; நாசித்துவாரங்களைத் தூர்த்துவிட்டது. அந்த நச்சுத்தீ அவன் உடல் உணர்ச்சியைக் கூட மரத்துப் போகும்படிச் செய்துவிட்டது. காடுகள் நல்கிய செல்வத்தை மட்டுமே பயன் படுத்திய மனிதன், பற்ருக்குறையினுல் அதன் உயிரையே வெளவத் தொடங்கினுன். பல செறிந்த இளமரக்காக்களின் பச்சைப் பசேலென்னும் துதைந்த தூறுகள் வான்முகட்டை அளந்து கொண்டிருந்த வளமார் இடங்களெல்லாம், இன்று, வளங்குன்றி பொட்டல் வெளிகளாகவும் கொடிய பாலைகளாகவும் நிலைகெட்டு

பொட்டல் வெளி பொன் கொழிக்கும் புலமாகிறது.



வருகின்றன. ஆடல் பாடல் அழகு அனைத்தாலும் சிறந்து, பண்புடன் இணைந்து வாழ்ந்த மாதவி என்னும் கலை மங்கை, யாவற்றையும் நீத்து துறவுக்கோலம் பூண்டதினும் கொடியதல்லவா இந்த நிலை ?

நம்முடைய ஆட்சி

இக்கொடிய நிலையைக்காணப்பொறுக்குமோ மக்களாட்சி ? இதைப் புறக்கணித்துவிட்டு மேற்செல்லத்தான் இயலுமோ ? இரண்டுமே முடியாது. மண்ணுக்கடியில் ஒளிந்து உறையும் செல்வத்தையே 'வீணாக விடோம்' எனப்புகன்று வெளிக் கொணரும் அரசாங்கம், கண்ணுக்கெதிரே காடுகள் அழிவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 75 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப் பட்டது. இரண்டாவது திட்டத்திலோ இதைப் போல இரண்டு மடங்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இருதலைக் கொள்ளி

'மீசையில் ஒட்டாமல் கூழைக்குடி' யென்றால் எவ்வாறு குடிப்பது ? காடுகளுக்கு உயிரூட்டுவதைப் பொறுத்த மட்டில் அரசாங்கத்திற்கு இத்தகைய இக்கட்டுத்தான் நேர்ந்தது. காடுகளின் அழிவால் விறகு விலை ஏறும்; விறகு கிடைப்பதும் அரிதாகும். அவற்றைத் சரிக்கட்டிக் கொண்டே காட்டை வாழவைக்க வேண்டும். வளப்பமிழந்த வனங்களுக்கு உயிரூட்டி அவற்றை தழைக்கச் செய்ய வேண்டும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள காடுகளின் மொத்தப் பரப்பு 522·8 சதுர மைல்களாகும். முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஊர் மன்றங்களிட மிருந்த காடுகளில் 1,339

ஏக்கர், காட்டிலாகாவின் கீழ் பாதுகாப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. எஸ்டேட் காடுகளையும் அரசாங்கமே மேற் பார்த்தது.

1,339 ஏக்கரிலும் காடுகளை மீண்டும் செழிக்கச் செய்வதற் கான முயற்சி கீழ்க்கண்டவாறு மேற்கொள்ளப்பட்டது :—

1953–54-ல்	..	150 ஏக்கர்
1954–55-ல்	..	1,064 ஏக்கர்
1955–56-ல்	..	126 ஏக்கர்

மேலும், வறண்டு கிடந்த 3,115 ஏக்கர் காட்டு நிலத்தைப் பண்படுத்தி, வளம் கொழிக்கும் சோலையாக மாற்றுவதற்கு ஆவன செய்யப்பட்டன. அதன் விவரம் :—

1953–54-ல்	..	750 ஏக்கர்
1954–55-ல்	..	1,765 ஏக்கர்
1955–56-ல்	..	600 ஏக்கர்

50 ஏக்கரில் மெல்லிய மரவகைகள் நடப்பட்டுள்ளன. நெருப்புக்குச்சி செய்வதற்கு இவை மிகவும் பயன்படும். துங்கை கொண்டான் சாரலில் இவை மிகுதியாக உண்டாக்கப் படுகின்றன.

அம்பா சமுத்திரம் சரிவில் 56 ஏக்கரும், குத்தாலம் சரிவில் 34 ஏக்கரும், தேக்கு முந்திரி ஆகியவற்றால் பயிரிடப்பட்டிருக் கின்றன. இங்கெலாம் காடுகள் செழித்தோங்கி வளர்ந்து வரும் காட்சியை, இன்று காணலாம்.

சிறு குன்றுகளில் காடுகளை வளரச் செய்யும் முயற்சி வெற்றிகரமாக நடை பெற்றுள்ளது. கொத்தங்குளம், கொளுந்து மலை ஆகிய இரண்டிடங்களிலுமாகச் சேர்த்து 100 ஏக்கர் நிலத்தில் பலவகை மரங்கள் நடப்பட்டுள்ளன.

குத்தாலம் பகுதியில் $4\frac{1}{2}$ ஏக்கரில் சவுக்கு விளைவிக்கப் பட்டுள்ளது. விறகின் தேவையைப் பூர்த்தி செய்ய இது ஓரளவு துணைபுரியும்.

சங்கரன் கோயில், திருநெல்வேலி, குத்தாலம் ஆகிய பகுதிகளிலிருந்த எஸ்டேட் காடுகள் அளக்கப்பட்டு, எல்லைகள் தெளிவாகக் குறிக்கப் பட்டுள்ளன.

இத்துறையில் முதல் திட்ட காலத்தில் செலவிடப்பட்டுள்ள தொகையின் விவரம் கீழ் வருமாறு :—

	ரூ.	அ.	பை.
ஊர்மன்றங்களைச் சார்ந்த காடுகளின் நிர்வாகம்	15,647	12	0
வறண்ட பகுதியில் மரங்களை செழிக்கச் செய்தல்	80,508	1	4
மெல்லிய மரவகை பயிரிடுதல் ..	2,896	0	0
செயற்கை முறைகளைக் கையாண்டு மண்ணை வளமாக்குதல்	7,592	8	0
சிறு குன்றுகளில் காடு வளர்த்தல் ..	5,681	7	10
சவுக்கு வளர்ப்பு	724	6	0
காடுகளைக் காத்தல்	791	0	0

வேளாண்மை

‘ நாஞ்சில் அல்லது படையும் அறியார் ’

—குறுங்கோழியூர் கிழார்

கவிஞர்கள் கனவிலே கண்ட புஷ்ப விமானமும் மயிற்பொறியும் இன்று நமது கைக்கெட்டும் பொருள்களாகி விட்டன. மின்னல் இடி முதலியவற்றைக் கூடப் படைக்கும் திறன் இன்றைய மனிதனிடம் உள்ளது. மழை, ‘பெய்’யென்றால்,

பெய்கிறது. 'நில்' லென்றால் நிற்குமோ என்னமோ நமக்குத் தெரியாது. இந்த உலகிலே இருக்க இடம் போதவில்லை யென்று, நிலாமண்டலத்துக்குச் செல்வேன் என்கிறான் விஞ்ஞானி. இத்தனை முன்னேற்றமும் ஏற்பட்ட பிறகும் மனிதன் ஒரு துறையில் மட்டும் பழைய மனிதனாகவே இருக்கிறான். மனிதப் பறவையின் சிறகை யொடிக்கும் ஆற்றல் அதனிடம் மட்டும் தான் இருக்கிறது. அதுதான் உணவு.

நிலமும் நீரும் வாழ்க்கைக்கு என்றும் வேண்டியவை. இவை இரண்டுங் கலந்ததே உண்டி. நீரைத் தேக்கிப் பயன் படுத்துவதில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நாம் தலை சிறந்து விளங்கியது போலவே, நிலத்தை உழுது பண்படுத்திப் பயிரிடுவதிலும் கைதேர்ந்தவர்களாக இருந்திருக்கிறோம். உலகிலேயே உழவுத்தொழிலை முதல் முதலில் நன்கு கற்றறிந்தவர்கள் நம்முடைய முன்னோர்தாம் என்பது அறிஞர்களின் கருத்து. எப்படியும் நாம் மிகப் பழங் காலத்திலேயே இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தோம் என்பதில் கொஞ்சமும் சந்தேகமேயில்லை.

'நாஞ்சில் அல்லது படையும் அறியார்' என்னும் தொடரே இதனை மெய்ப்பிக்கும். நாஞ்சில் என்பது இன்று ஒரு நாட்டைக் குறிக்கிறது. பழங்காலத்திலும் நாஞ்சில் நாடு இருந்தது. ஆனால் அன்று இந்தச் சொல்லுக்கு மற்றொரு பொருளும் உண்டு. கலப்பைக்கு நாஞ்சில் என்பது பெயர். ஒரு நாட்டு ஆடவரைப் பற்றிக் கூறும் புலவர் குறுங்கோழியூர் கிழார், 'அவர்களுக்குக் கலப்பையைத் தவிர வேறு படைக் கருவியே தெரியாது' என்று கூறுகிறார். அப்படி யென்றால் அவர்களெல்லாம் கோழைகள் என்று கூறுவதாகப் பொருள் செய்துகொள்ளக்கூடாது. மன்னன் பகையின்றி நாட்டைக் காப்பதால், மக்கள் தம் உழவைத்தவிர வேறெதைப்பற்றியும் கவலைப் படுவதில்லை. அவர்கள் கண்ட போர்க் கருவி யெல்லாம்

அந்தக் கலப்பைதான். இப்படியொரு காலம் வராதா! என்று தானே நாமெல்லாம் ஏங்குகிறோம். நம் மூதாதையர் பயிர்த்தொழிலை மிகவும் வளர்த்து, சிறப்பு மிக்க வாழ்க்கையை நடத்தியுள்ளனர் என்பது தெரிகிறது.

இன்றும் நம்மில் நூற்றுக்கு எண்பது பேர் உழவர்களாகத் தான் உள்ளனர். எனினும் போதிய அளவுக்கு விளைவிக்க முடியாத நிலையில் இருந்தோம். நிலம் அந்த அளவுக்குத் தன் வளப்பத்தை இழந்திருந்தது. ஆனால் இன்றைக்கு ஒன்பதாண்டுகளுக்கு முன்பு இருந்ததைக் காட்டிலும், இன்று விளைச்சல் உயர்ந்திருக்கிறது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

நெல் கொழிக்கும் நெல்லை.



ஜப்பானிய முறையில் சாகுபடி.

புதிய உழவு முறை, பொறுக்கு விதைகளைப் பயன் படுத்துவது, ரசாயன உரம், தழையெரு ஆகியவற்றைத் தக்க அளவறிந்து போடுவது, ஜப்பானிய நடவுமுறை, முதலிய பல முயற்சிகளின் பயனாகத்தான் இந்த அளவுக்கு உற்பத்தியை அதிகரிக்க முடிந்தது. குறிப்பாக முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், தரிசாகக் கிடந்த பல நிலப் பகுதிகள் சாகுபடிக்குக் கொண்டுவரப் பட்டுள்ளன. வேளாண்மையைச் சிறப்பாக நடத்த, அங்கங்கே பயிற்சி பெற்ற அலுவலாளர்கள் இருந்து குடியானவர்களுக்குத் தக்க உதவி செய்து வந்துள்ளனர்.

திட்டமிட்டுத் தொடங்கப்பட்ட நமது நாட்டின் ஆக்க வேலைகளுள் வேளாண்மை சிறப்பிடத்தைப் பெற்றது. நம் மாநிலத்தைப் பொறுத்த மட்டில் எல்லா மாவட்டத்திலும் இதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தைப் பற்றி இங்கு விளக்கமாக காணுவோம்.

இங்குள்ள நஞ்சை 238,723 ஏக்கராகும். இதில் 222,640 ஏக்கர் நிலப் பரப்பே விளைச்சல் நிலமாக இருக்கிறது புஞ்சையின் பரப்பு 1,706,886 ஏக்கர். இதில் விளைவாகும் நிலம் 950,868 ஏக்கராகும்.

எப்பொழுதும் சாதாரணமாக நெல் விளைச்சலாகும் நிலம் 3·6 லட்சம் ஏக்கர். சோளம், ராகி முதலியவை விளைவாகும் நிலப்பரப்பு 3·83 லட்சம் ஏக்கர். பருத்தி, மிளகாய், எள்ளு போன்றவை விளைவாகும் பரப்பு சுமார் 3·23 லட்சம் ஏக்கராகும்.

தரிசாகக் கிடக்கும் நிலப்பரப்பு இந்த மாவட்டத்தில் மிகுதியாக இருப்பினும், நீர் போதாக் குறையால் அவை இன்னும் வறிய நிலமாகவே இருக்கின்றன. யந்திரக் கலப்பையின் துணைகொண்டு மிகவும் முயன்று 7,323 ஏக்கர் நிலம், முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பண்படுத்தப்பட்டது.

நிலவளத்திற்குச் சிறப்பாக இன்று பயன்பட்டு வருவது ரசாயன எரு. ரசாயன உரத்தின் சிறப்பு மாநிலமெங்கும் உழவருக்கு எடுத்துச்சொல்லப்பட்டு வருகின்றது. உழவரும் அதன் பயனை ஓரளவு உணரத் தலைப்பட்டுள்ளனர். பல இடங்களில், இந்த உரத்தைப் பயன் படுத்தி, அதன் விளைவை மெய்ப்பித்துக் காட்டிய பின்னரே உழவர் இதில் ஊக்கங் காட்டத் தலைப்பட்டுள்ளனர். இந்த மாவட்டத்தில் மட்டும் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உழவருக்குத் தரப்பட்டுள்ள ரசாயன உரத்தின் அளவு, இருபதினாயிரத்து முந்நூற்று எண்பத்தி மூன்று டன்கள் ஆகும்.

ரசாயன உரத்தைப்போலவே குப்பை உரத்தையும் தழையுரத்தையும் குடியானவருக்கு வழங்கும் பணியையும் இத்துறை மேற்கொண்டது. குப்பை எருவின் பயனை நமது உழவர் அறிந்துதான் உள்ளனர். என்றாலும் அதனை மக்கச் செய்யும் புதிய முறைகளை அவர்கள் அறியார். குப்பையிலே குண்டுமணி மட்டுமல்ல—வைரமணியும் கிடைக்கும். உழவர்

அதற்காகப் பெரும் பொருளைச் செலவழிக்க வேண்டுவதும் இல்லை. அளவான குழிகளில் முறையாகக் குப்பையை மக்கவைக்கத் தெரிந்து கொண்டால் போதுமானது. இக்காரியத்திலே ஈடுபடும் உழவருக்கு உறுதுணை புரிந்த வேளாண்மைத் துறை தானுகவே அத்தகைய எருவைத் தயாரித்தும் வதங்கியுள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் இம்மாவட்டத்தில் இவ்வாறு வழங்கப்பட்ட குப்பை எரு 25,921 டன்களாகும்.

நம் அரசாங்கம் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் விளைவாக, தழையுரத்தின் அருமைகள், நிறைய வெளிவந்துள்ளன. செஸ்பேனியா என்னும் சீமை அகத்திச் செடி எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்பது, இன்று நமது நாட்டுப்புறத்தைச் சென்று காண்பவர்களுக்கு நன்கு புரியும்.

தன்னிகரற்ற தழையுரம்.



அதன் பயனை உழவர்கள் நன்கு உணர்ந்து வருகின்றனர். தழையுரம் அளிக்கும் வேலையையும் அரசாங்கம் மேற்கொண்டது. 53,423 டன் தழையுரம் சென்ற ஐந்தாண்டுகளில் குடியானவர்களுக்கு உற்பத்தி செய்து வழங்கப் பட்டுள்ளது.

எருப்போட்டு நிலத்தை வளப்படுத்துவது—ஆழ உழுது அதனை ஆரப்போடுவது—போன்ற முறைகளிலாவது ஓரளவு நம் உழவர் தேர்ந்திருந்தனர். விதையின் தன்மையை உயர்த்தும் வகைகளோ அவர்களுக்கு அறவே தெரியாது. பூச்சிகளால் தாக்குறா வண்ணம் விதைகளை முன்கூட்டியே ரசாயன மருந்துகளால் பக்குவப்படுத்துவது போன்ற முறைகள் விஞ்ஞானம் நமக்கு நல்கிய அருட்கொடைகளாகும். கலப்புச் சேர்க்கையின் மூலமும், வேறு பிறவகையாலும் வளமான வித்துக்கள் உண்டாக்கப்பட்டு, உழவருக்கு அளிக்கப்பட்டன. பொறுக்கு விதைகளைப் போடுவதன் மூலம் விளைவு அதிகரிக்கின்றது என்பது கண்கூடு. திருநெல்வேலி மாவட்டத்தில் சென்ற ஐந்தாண்டுகளில் வித்திய பொறுக்கு விதைகளின் விவரம் :—

			டன்கள்
நெல் சோளம் முதலியவை	..	..	1,130
நிலக்கடலை	..	..	4

உயர்தரத் தென்னங்கன்றுகள் 5,795-ம், பழ வகைச் செடிகள் 13,711-ம் வழங்கப்பட்டுள்ளன. இவையன்றியும் 1,687 பவுண்டு எடையுள்ள காய்கறி வகை விதைகள் வேண்டுவோருக்குத் தரப்பட்டன. மேலே குறிப்பிட்ட பழ வகைச் செடிகள் வேளாண்மைத் துறையைச் சேர்ந்த ஆராய்ச்சிப் பண்ணைகளில் வளர்க்கப் பட்டனவாகும்.

மிளகு ஒரு சிறந்த வருவாய் நல்கும் பண்டமாக நம் நாட்டில் இருந்து வருவது யாவருமறிந்ததே. இதன்

விளைச்சலைப் பெருக்க நம் மாநில அரசாங்கம் பல மலைச் சரிவுகளில் தக்க முயற்சிகள் எடுத்துள்ளது. இவற்றில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தென்காசி வட்டமும் ஒன்று. பயிற்சித்துப் பார்ப்பதற்காக, மிளகுக் கொடித் துண்டுகள், அங்குள்ள வேளாண் மக்களிடம் வளர்ப்புக்காக அளிக்கப் பட்டுள்ளன.

பூச்சிகளைக் கொல்லுவது, காளான் முதலியவற்றை அழிப்பது ஆகியவற்றிற்காக, ரசாயன மருந்து வகைகள் பெருவாரியாகப் பயன் படுத்தப் பட்டுள்ளன. சுமார் 253 டன் மருந்து உழவர்களால் பெற்றுக்கொள்ளப் பட்டது.

பொருளாதார நெருக்கடி நம் நாட்டு உழவர்களின் குரல்வளைகளை நெரிக்கும் பொல்லாமை இன்று நீங்கிவிட்டது. பல புதிய முறைகளை உழவருக்குப் போதிக்கும் அரசாங்கம், அவைகளைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய பணம் சிலரிடம் இல்லை யென்பதையும் உணராமல் இல்லை. எனவேதான் உழவருக்குக் கடன் கொடுக்கும் முறையையும் மேற்கொண்டது. குறைந்த வட்டிக்குக் கடனைப் பெற்றுப் பின்னர் திருப்பிக் கொடுப்பது உழவருக்கு எளிதே. இதனால் அவர்களது வாழ்வும் தொழிலும் வளம்பெறும் என்பது திண்ணம். தீவிர உரமிடு திட்டத்தின் (Intensive Manuring Scheme) கீழ் உழவுக்கருவிகள், விதை, ரசாயன எரு முதலியவை வாங்குவதற்காகக் கடன் உதவி செய்யப்பட்டது. திட்டகாலத்திற்குள் திருநெல்வேலி மாவட்டத்தில் உதவப்பட்டுள்ள கடன்தொகை ரூ. 28·8 லட்சங்க ளாகும்.

இந்த மாவட்டத்தில் வேளாண்மைத் துறையின் குறிப்பிடத் தக்க ஒரு முயற்சி அரிசி யாராய்ச்சி யாகும். கோயில்பட்டியில் ஒன்றும், அம்பாசமுத்திரத்தில் ஒன்றுமாக இரண்டு ஆராய்ச்சி நிலையங்கள் இங்கு இருக்கின்றன. வேளாண்மை வளர்ச்சிக்கு இவை பெரிதும் துணைபுரிந்துள்ளன.

" நிலம் என்னும் நல்லாள் "

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன் இந்த மாவட்டம் பற்றுக்குறைப் பகுதிகளுள் ஒன்றாகவே பொதுவாகக் கருதப் பட்டு வந்தது. அந்நிலை இப்பொழுது மாறி வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் சுமார் ஒரு லட்சம் டன் விளைச்சல் கூடுதலாகியிருக்கிறது. ஐந்து ஆண்டுகளில் நான்கு ஆண்டுகள்

பருவம் பொய்த்தும் தானியம் கூடுதலாக விளைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ரசாயன எரு இதற்கு ஒரு முக்கிய காரணமாகும். ஐந்தாவது ஆண்டில் மட்டும் இதில் 9,000 டன்கள் செலவழிந்துள்ளது. சிறப்பாக அம்மோனியம் சல்பேட்டே பயன்படுத்தப் படுகிறது.

ஆராய்ச்சி நிலையங்களைப் பற்றிச் சிறிது அறிந்துகொள்ளுவது நலம். அம்பாசமுத்திரத்திலுள்ள அரிசியாராய்ச்சி நிலையம் 1937-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதாகும். அன்றிலிருந்து இன்றுவரை பல ஆராய்ச்சி உண்மைகளை இந்த நிலையம் வெளியிட்டுள்ளது. நான்கைந்து முளைகளை ஓரிடத்தில் இடுவதைக் காட்டிலும் ஒன்று அல்லது இரண்டு முளைகளைப் போடுவது சிறப்புடைய தென்பதும், நெல்வயலுக்குப் பனை ஓலையும் சிறந்த பசுந்தழை உரமாகப் பயன்படும் என்பதும் போன்ற பல அரிய உண்மைகள் அங்கு கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

கோயில்பட்டியிலுள்ள ஆராய்ச்சி நிலையம் அரிசி ஆராய்ச்சிக்காக அமைக்கப்பட்ட தல்ல. அங்கு பலவகை தானிய ஆராய்ச்சிகளும் நடைபெறுகின்றன. பல பயனுள்ள ஆராய்ச்சி உண்மைகள் இங்கிருந்தும் வெளியாகி யிருக்கின்றன.

இறுங்கிச் சோளத்திற்குப் பிறகு அதே நிலத்தில் பயிராகும் பருத்தியின் விளைச்சல் கெட்டு விடுகிறது. இதைத் தடுக்க மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி வெற்றிதந்தது. அதாவது இறுங்கிச் சோளத்தை விளைவிக்கும்போது, ஏக்கருக்கு 100 பவுண்டு சூபர் பாஸ்பேட்டை எருவாகப் போடவேண்டும். அடுத்து வரும் பருத்திக்கு, ஏக்கருக்கு 200 பவுண்டு அம்மோனியம் சல்பேட்டு எருவாக இடப்படவேண்டும். இவ்வாறு செய்வதால் பருத்தி விளைச்சல் பாதிக்கப் படுவதில்லை.

இங்கு மேற்கொள்ளப்பட்ட மற்றொரு ஆராய்ச்சியும் குறிப்பிடத்தக்கது. பெரிய மஞ்சள் சோளத்தையும், இறுங்குச்

61437 Y2:1133 'N51C5 31J6

சோளத்தையும் கலந்து புது இனம் ஒன்று உண்டாக்கப் பட்டுள்ளது. இப் புதுப் பயிருக்கு "பெரிய மஞ்சள் இறுங்கு" என்று பெயரிட்டுள்ளனர். இந்தச் சோளக்கதிர் கண்கவர் மஞ்சள் மணிகளைத் தருகின்றது. மற்றைய சோளத்தைக் காட்டிலும் இதில் விளைவும் கூடுதலாகக் கிடைக்கிறது. 100-க்கு 40 பங்கு அதிகமாக விளைகிறது. தீனியும் 40 விழுக்காடு அதிக மாகவே விழுகிறது. இந்தச் சோளம் உணவுக்கும் பயன்படும்.

கால்நடை வளர்ச்சி

உழவுத் தொழில் இன்று எவ்வளவோ மாறிவிட்டது. கால்நடைகள் இருந்த இடத்தை யந்திரங்கள் கைப்பற்றி விட்டன. எனினும் நமது நாட்டைப் பொறுத்தமட்டில்,



கால்நடை நமது செல்வங்களுள் சீரிய ஒன்றாக இன்னும் திகழ்கின்றது. உழவுக்கும் இறைப்புக்கும் அவைகளே சிறப் பாக பயன்படும் நிலை இன்னும் இங்கு நிலவி வருகின்றன. எருதுகளோ வேளாண்மையின் உயிராக இருந்து நம்மை வாழ்வித்து வருகின்றன.

உழுகின்ற எருது பிணிப்புற்ற தென்றால் உழவன் நெஞ்சம் துணுக்குறுகின்றது. அதுவும் விதைப்புக் காலமா யிருந் தால் அவன் அடிவயிற்றில் நெருப்பைக் கொட்டியதுபோல் இருக்கும். அவன் உயிரே அந்த எருதினிடம் தானே உள்ளது ?

மக்கள் அரசாங்கம் பல அரிய காரியங்களைக் குறுகியகால அளவில், வேறு துறைகளில் செய்திருப்பது போலவே இந்தத் துறையிலும் ஆற்றியிருக்கின்றது. ஆற்ற விருப்பன இன்னும் மிகுதி. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 56 லட்சத்தை இத்துறைக்கு ஒதுக்கிய அரசாங்கம், இரண்டாவது ஐந் தாண்டுத் திட்டத்தில் 236 லட்சம் ரூபாயை இதற்கு ஒதுக்கி யுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளைச் சுருக்கமாகக் காணுவோம்.

திட்டத்தின் தொடக்க காலத்தில், இம்மாவட்டத்தி லிருந்த கால்நடை மருத்துவ சாலைகள் நாண்கே நான்கு தான். நடமாடும் மருத்துவ சாலைகள் ஐந்தும் இருந் தன. ஆனால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், வட்டத் திற் கொரு மருத்துவ சாலையும், நடமாடும் கால்நடை மருத்துவ சாலையும் அமைக்கப்பட்டன.

மாவட்டத் தலைமைக் கால்நடை மருத்துவ சாலையில், மருந்தாய்வுக்களம் (Clinical Laboratory) ஒன்று 1955-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. திருநெல்வேலி,

ராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலிருந்து கால்நடைகள் நல ஆய்வுக்காக இங்கே வரும். இந்த ஆய்வுக்களம் நிறுவப்படுவதற்கு முன்பு இவையாவும் சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரிக்கே அனுப்பப்பட்டு வந்தன. அதனால் ஏற்பட்டு வந்த பல போக்குவரத்துத் தொல்லைகள் இப்பொழுது நீங்கியுள்ளன.

திட்டத்தின் இறுதியாண்டில் தான் இது தொடங்கப்பட்டது. இந்த ஓராண்டில் இங்கு நடைபெற்றுள்ள வேலைகளின் விவரம் கீழே தரப்படுகிறது.

பார்வைக்கு வந்தவற்றின் எண்ணிக்கை **1,282.** இவற்றில் தேறியவற்றின் தொகை **467.**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து வந்தவை ..	151
மதுரை மாவட்டத்திலிருந்து	91
ராமநாதபுரம் மாவட்டம்	285
திருநெல்வேலி மாவட்டம்	763

இதுவரையில் இதற்கு மட்டும் தனியே ஆகியுள்ள செலவு :—

	ரூ.	அ.	பை.
1954—55	327	1	6
1955—56	2,684	15	9

நடமாடும் **மருத்துவ சாலை** (Touring Billet)

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் திருச்செந்தூரில் இத்தகைய சாலையொன்று அமைக்கப்பட்டது. அதன் விளைவாகப் பல கால்நடைகளுக்கு அவ்வப்போது நேரிலே சென்று பிணியை நீக்கவும், நோய் பரவுவதை உடனே தடுக்கவும் முடிந்தது.

அதன் கீழ் நடந்தேறியுள்ள வேலைகளின் விவரம் :—

	1954—55	1955—56
மருத்துவம் செய்யப்பட்டவை	294	1,402
காயடிக்கப்பட்டவை	129	887
கொள்ளை நோய் நீக்க—		
பார்வையிடப்பட்டவை		33
அம்மை குத்தப்பட்டவை—		
பிணியுள்ள பகுதியில்		7,208
பிணியற்ற இடத்தில்		5,117

செலவு விவரம் :—

	ரூ.	அ.	பை.
1954—55	691	5	0
1955—56	2,402	10	3

கால்நடை மருத்துவ சாலைகள்

வட்டத்திற்கொரு கால்நடை மருத்துவசாலை நிறுவும் திட்டத்தின் கீழ், முதன் முதலாகக் கடைய நல்லூரில், 1955-ஆம் ஆண்டில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஆண்டில் அங்கு நடைபெற்ற வேலைகளின் விவரம் :—

மருத்துவம் செய்யப்பட்டவை	1,401
காயடிக்கப்பட்டவை	321

செலவு விவரம்—

	ரூ.	அ.	பை.
1954—55	1,647	6	0
1955—56	4,838	1	6

இது வரையில் மேலே தரப்பட்ட செலவினங்களில் முதலாண்டைக் காட்டிலும் இரண்டாவதாண்டில் செலவு அதிகரித்திருப்பதும், அதற்கேற்பவே மருத்துவ வசதிகளும் அதிகமான கால்நடைகளுக்குத் தரப்பட்டிருப்பதும் கருத்தில் கொள்ளத்தக்கன. இத் திட்டம் விரிவடைந்து வரும் வேகத்தையும், அரசாங்கம் இதில் கொண்டுள்ள ஆர்வத்தையும் இவை காட்டுவனவாகும்.

கடைய நல்லூரில் நிறுவப்பட்டது போன்றே சேரன்மாதேவியிலும் ஒரு கால்நடை மருத்துவசாலை நிறுவப்பட்டுள்ளது. 6 முதலுதவி நிலையங்கள் திட்டகாலத்திற்குள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கால்நடைச் செல்வம்

இந்த மாவட்டத்திலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 17 லட்சம். இச் செல்வத்தைப் பேணுவதற்கு மருத்துவம் மட்டும் போதாது. வளமான வகையில் அவை தம் இனத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புகளை அமைத்துத் தருவதும் இன்றியமையாததாகும். அதற்காக 19 பொலிக் காளைகள் கால்நடை வளர்ச்சி அலுவலகங்களுக்கு வழங்கப் பட்டன. இவை நூற்றுக் கணக்கான மாடுகள் பலம் படுவதற்கு பயன் படுகின்றன. திட்டகாலத்திற்கு முன்பே இருந்த பொலி காளைகள் 24.

பொலிகாளைகளைப் போலவே செம்மறியாட்டுக் கடாக்களும் இங்கு உள்ளன. திட்டகலத்தில் மட்டும் 15 இனவளர்ச்சி பெற்ற செம்மறியாட்டுக் கடாக்கள் வாங்கப்பட்டன. 344 இன வளர்ச்சி பெற்ற கோழி முதலிய பறவைகளும் இவ்வாறே வாங்கப்பட்டன. இவையாவும் இன வளர்ச்சியின் வளப்பத்திற்கும், கால் நடைச் செல்வத்தின் பெருக்கத்திற்கும், பெருந்

துணை புரிவனவாகும். சேரன்மாதேவியில் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் நிலையமொன்று ஏற்படுத்தப் பட்டது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

கால் நடை வளர்ச்சியைக் கவனிப்பதற் கெனவே இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் உருவாயின. இரண்டில் ஒன்று ஆடு வளர்ப்புச் சங்கமாகும். இச் சங்கம் 654 ஆடுகளை வாங்கியுள்ளது.

—:o:—



10 FEB
MADRAS

“ ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்,
ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்,
ஓயுதல் செய்யோம், தலை சாயுதல் செய்யோம்,
உண்மைகள் சொல்வோம், பல வண்மைகள் செய்வோம் ”

—பாரதியார்.

தொழில்...
வளர!

நில வளம் நீர்வளம் மிக்க நெல்லை மாவட்டம், தொழில் வளத்திலும் மிக்கது. பல்கிக் கிடக்கும் தொழில்கள் பலவற்றுள்ளும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை மீன் பிடித்தல், சங்கெடுத்தல், முத்துக் குளித்தல் ஆகிய மூன்றுமாகும். இவற்றுள்ளும் முத்துக் குளித்தலும் சங்கெடுத்தலும் இந்த மாவட்டத்துக்கே உள்ள தனிப் பெரும் தொழில்கள் எனலாம்.

தொழிலை வளர்ப்பது என்பதன் உண்மையான பொருள், தொழிலாளர் நலனை வளர்ப்பதே. தன் உழைப்புக்கேற்ற வருவாய் கிடைத்தால் தான் உழைப்பாளி அந்த தொழிலில் ஆழ்ந்த நோக்கம் செலுத்த முடியும். அதனால் தொழிலும் சிறக்கும். அவன் வாழ்வு தொழிலின் வளர்ச்சியைப் பொறுத்தது; தொழிலின் வளப்பமும் நேர்த்தியும் அவன் வாழ்வு நிலையைப் பொறுத்தது. ஒன்றையொன்று தழுவி நிற்கும் இயல்பின. எனவே தான் அரசாங்கம் தொழிலாளர் வாழ்விலே தனி நோக்கம் செலுத்துகின்றது.

தொழில்கள்

தொழில் துறையைப் பொறுத்த மட்டில், ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முதற் பாதியில், நீரிறைப்பதற்கான குழாய்கள் வழங்குவது, குழி போடுவது (boring work) ஆகிய வேலைகளே இம்மாவட்டத்தில் சிறப்பாக நடை பெற்று வந்தன.

இங்கு இன்றுள்ள குழிக்கும் கைக்கருவிகள் (Hand boring sets) எட்டு ; மின்சாரத்தால் இயக்கப்படும் கருவி ஒன்று ; பாறையைத் தகர்க்கும் பொறி (Rock blasting unit) ஒன்று.

பனைமரத்தை **பண** மரம் என்றுதான் அழைக்கிறோம் !



மொத்தம் 97 குழி போடும் வேலைகள் நடந்தேறியுள்ளன. அவற்றுள் தொழில் தொடர்பானவை 7; குடி நீருக்காகச் செய்யப்பட்டவை 47; வேளாண்மைக்காக 12; துறைமுகத்தை விரிவுபடுத்தும் ஆராய்ச்சியில் 5; பாலம் கட்டுவதற்காக அடியிலிருக்கும் மண்ணின் தன்மையை அறியும் வகையில் 26; ஆகமொத்தம் தொண்ணூற்றேழு.

இவற்றுள் 59 குழிகள் தரையில் போடப்பட்டவை; மீத முள்ளவற்றில் 33 குழிகள் கிணற்றிலும்; எஞ்சிய ஐந்து கடலிலும் போடப்பட்டவை. குழிக்கப்பட்டுள்ள யாவும் சேர்ந்தால் அதன் மொத்த ஆழம் 2,944 அடிகளாகும். பாறையைத் தகர்க்கும் பொறியினால் ஒரு பாறை அகற் றப்பட்டது. அப்பாறை 677 கன அடிப் பருமனுள்ளது. இதன் விளைவாக ஒரு கிணறு 15 அடிக்கு ஆழமாக்கப்பட்டது. 462 இறைப்புக் குழாய்கள் தொழில் துறை வசமிருக் கின்றன.

சாத்தன் குளச் சிறு வட்டம் குடிநீரின்றி வாடும் ஒரு பகுதி யாகும். அங்கு குடி நீர் வசதி செய்து தருவதற்கான வழி வகைகள் ஆராயப்பட்டன. திருச்செந்தூர் நாங்குனேரி வட்டங் களில் 20,000 ரூபாய்ச் செலவில் குழாய்க் கிணறுகள் (Tube wells) நிறுவப்பட இருக்கின்றன. அப்பகுதிகளில் தரை மட்டத்தின் கீழிருக்கும் நீரோட்டத்தின் தன்மையை அறிவ தற்காகவே இது மேற்கொள்ளப் படுகின்றது.

திட்டகாலத்தின் பிற்பகுதியில் சிறிய தொழில்கள், பெரிய தொழில்கள், கைத் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக் கானவற்றில் இத்துறை முயன்று உழைத்தது. அதனால் விளைந்த பயன்களையும் இம்மாவட்டம் தொழில் துறையில் அடைந்துள்ள முன்னேற்றங்களையும் இனிக்காணுவோம்.

கடிகாரங்கள், பேனுக்கள், பலவகைப்பட்ட ஊசிகள், பூட்டு கள், உழவுக்கருவிகள் முதலிய பெரிய அளவுத் தொழில் களைத் தனிப்பட்டவர் தத்தம் பொறுப்பில் செய்ய வேண்டு மென்பது நம் அரசாங்கத்தின் திட்டம். அதற்காகத் திருநெல் வேலி மாவட்டத்தில் தொழில்மய நகர் ஒன்றை நிறுவப் போகின்றது. பேட்டையில் அதற்குரிய இடம் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளது. முதலில தச்சு, கொத்து வேலைகள் பயிற்சிக் கான நிலையம் ஒன்று தொடங்கப்பட இருக்கின்றது. அதற் குத்தேவையான கருவிகளெல்லாம் வாங்கப்பட்டு விட்டன. ஆண்டுக்கு 30 நாட்டுப்புறத்தார்க்கு, புதிய முறைகள், புதிய கருவிகளை ஆளுதல் ஆகியவற்றில் போதிய பயிற்சியை இது கொடுக்கும். நடமாடும் அமைப்பொன்றும் இதனோடு இணைந் திருக்கும்.

காய்ந்த ஓலை கலைப்பொருளாகி..

பத்தமடையில் ஒரு மாதிரித் தச்சுப்பண்ணை (Carpentry unit) அமைக்கப் பட்டுள்ளது. அங்கு ஒரே சமயத்தில் எட்டுபேர் பயிற்சி பெறுவர்; புதிய கருவிகளை ஆளுவதற்கு அவர்கள் கற்றுக்கொள்ளுவர். தற்காலிக மனை ஒன்றில் இப்பொழுது இது தொடங்கப் பட்டுள்ளது. நிலையான கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

தொழில் வளர்ந்து ஓங்குவதற்கு இன்றைய நிலையில் இன்றியமையாது வேண்டப் படுவது கூட்டுறவு. எனவே இந்த மாவட்டத்தில் 8 தொழிலகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப் பட்டன. முத்துகிருஷ்ணபுரத்தில் எண்ணெய்த் தொழில் கூட்டுறவுக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதிலுள்ள பங்குத் தொகை ரூ. 5,000; கடன் ரூ. 85,000. பல்துறை (multi-purpose) தொழிற் கழகம் ஒன்று குலசேகரன

..கண்ணுக்கு விருந்தளிக்கிறது.



பட்டணத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. திருச்செந்தூரில் கைப் பொறியால் நெல்குத்தும் (Hand pounding machine) தொழிற்கழகம் ஒன்று உள்ளது. தெற்குக்கல்லிகுளம், திசையான்விளை ஆகிய இடங்களில் அதுபோன்ற மேலும் இரண்டு கழகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடையநல்லூர், தெற்குக்கல்லிகுளம், திசையான்விளை ஆகிய ஊர்களில் மூன்று நெருப்புக்குச்சித் தொழிற்கழகங்கள் உள்ளன.

தூத்துக்குடியில் ஒரு பெரிய நெருப்புக்குச்சித் தொழிற் சாலை நிறுவும் எண்ணம் உள்ளது. சிறிய அளவுத் தொழில்களுக்குத் தக்க உதவி அளிக்கப்படுகின்றது. இது வரையில் அத்தகைய உதவிகள் முப்பதுக்கு மேல் தரப் பட்டுள்ளன.

நெருப்புக்குச்சி தயாரிப்பு.



பத்தமடையில் ஒய்யாரப் பைகள் (Fancy bags) செய்வதற்கான நிலையமொன்று திறக்கப்பட்டுள்ளது.

குடிசைத் தொழில்களுக்குள் தேன் கூடுகள் மிகவும் பயன் நல்கவல்ல சிறந்த ஒன்ருகும். ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்த மாவட்டத்தில் மட்டும் 2,552 தேன்கூடுகள் அமைக்கப் பட்டன.

மீன் அளம் (Fisheries)

தண்புனல் பரந்த பூசல் மண்மறுத்து
மீனிற் செறுக்கும் யாணர்ப்
பயன்திகழ் வைப்பில்......அகன்றலை நாடே.

—கருங்குழலாதனர்

மனிதன் வேளாண்மையையே உணராத தொல் பழங் காலந் தொட்டு நாளது வரையில், அவனது உணவுப்பொருள் களுள் மீன் சிறப்பான ஓர் இடத்தைப் பெற்று வருகிறது என்பதற்கு ஐயமில்லை. அதிலும் சில நாடுகள் மீனையே நம்பி வாழ்வனவாகத்தான் இன்றும் உள்ளன. நம் இந்திய நாட்டிற்கு அத்தகைய இக்கட்டு இல்லையெனினும், நமது பற்றுக்குறையைப் போக்குவதற்கு இது பெருந்துணை புரியும் என்பது திண்ணம். எனவே இத்துறையில் நோக்கம் செலுத்த வேண்டுவது மிகவும் இன்றியமையாத ஒன்று என நம் அரசாங்கம் நினைக்கிறது. மீன் உணவைப் பெருக்குவதற்கு நமக்குள்ள வாய்ப்புகள் மிகுதி என்பதும் இங்கே நாம் நினைவுகொள்ளத் தக்கது.

* வெள்ளம் பரந்து நிற்கும் எரியின் கரை, வெள்ள மிகுதியைத் தாங்கும் வலிவின்றி உடைப்பட்டது, அவ்விடத்தில் மண்ணை இட்டுக் கட்டுவதை விடுத்து, மீனைக்குவித்து உடைப்பை அடைத்தனராம் வளம் கெழுமிய அந்நாட்டு மக்கள் !

சென்னை மாநிலத்தின் கடற்கரை நீளம் சுமார் 800 மைல்களாகும். உள்நாட்டிலுள்ள நீர் நிலைகளின் பரப்பு 4 லட்சம் ஏக்கர். எனவே மீன்வளர்ப்புக்குச் சிறப்பாகச் சென்னை மாநிலத்தில் நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. அதிலும் குறிப்பிடத்தக்கது திருநெல்வேலி மாவட்டமே.

இம்மாவட்டத்திற்குக் கிடைத்துள்ள வளமான கடலோரமே இதற்கு முக்கிய காரணம். இதன் கடற்கரை நீளம் 85 மைல். மீன் மட்டுமல்லாது, சங்கு, முத்து ஆகியவற்றிற்கும் பேர்போன கடல் இங்குதான் உள்ளது. முதலில் மீன்வளம் குறித்துப் பேசுவோம்.

கடலில் மட்டுமன்றி உள்நாட்டிலுள்ள நீர் நிலைகளிலும் மீன் வளர்க்கும் முயற்சி இந்த மாவட்டத்தில் சென்ற ஐந்து ஆண்டுகளிலும் நடைபெற்று வந்துள்ளது. கடலில் ஆழமாகச் சென்று மீன் பிடிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட புதிய வழிகள் வெற்றி தந்துள்ளன. திட்டகாலத்தில் மட்டும் 92 டன் ஈரல் எண்ணெய் ஷார்க் என்னும் ஒரு வகை மீனிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த எண்ணெய் குழந்தைகளுக்கும், உணவுத் தெம்பு (போஷாக்கு) குறைந்தவர்களுக்கும் தெம்பூட்டவல்ல நல்ல உணவாகும்.

நம்பிக்கை ஏரியிலும், கடம்ப குளத்திலும் நிறைய மீன் குஞ்சுகள் வளர்ப்புக்கு விடப்பட்டன. 52 லட்சம் மீன் குஞ்சுகள் இங்கு வளர்க்கப்பட்டு, குடியானவருக்குத் தத்தம் நீர் நிலைகளில் வளர்ப்பதற்காக அளிக்கப்பட்டுள்ளன. நீர் சுத்தப்படுவதோடு, உழவருக்கும் இவற்றால் நல்ல வருமானம் கிடைக்கும்; மக்களின் உணவுத் தேவையும் ஓரளவு பூர்த்தியாகும்.

உள்நாட்டு நீர்நிலைகளில் தேசீய வளர்ச்சித்திட்டம், சமுதாய வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழிருக்கும் பகுதி

களில் தான் இவ்வேலைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இவ் வேலைகளை அம்பத்தூரில் இதற்காகவுள்ள அலுவலர் கவனித்துக் கொள்கிறார். கேனேஸ், லேபியோ, எட்ரோ பிளஸ் ஆகிய வகைகள் உழவருக்கு வளர்ப்புக்காகத் தரப்பட்ட வகைகளாகும்.

சேரன்மாதேவி வட்டாரத்திலுள்ள குளங்களிலும் நீர் நிலைகளிலும் மீன் வளர்க்கும் வேலை முறையாக நடைபெற்றுள்ளது. திலேபியா என்னும் வகையே இங்குச் சிறப்பாக வளர்க்கப்படுகிறது.

பொதுமக்களுக்கு வளர்ப்புக்காக மீன்குஞ்சுகளை அளிக்கும் பொறுப்பை மீன் துறையே ஏற்றுக் கொண்டதென்பதை முன்னரே கூறினோம். கோபால சமுத்திரத்தில் இதற்காக நான்கு நீர் நிலைகளை, மீன் துறை தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிறது.

எத்தொழிலும் சிறப்புடன் நடக்க வேண்டுமானால் அத் தொழிலில் ஈடுபட்டிருப்போருக்கு அதில் போதிய ஊக்கம் இருக்கவேண்டும். அத்தகைய ஊக்கத்திற்கு அடிப்படையாக உள்ளது அத்தொழிலில் அவர்கள் பெறும் வருவாயே ஆகும். உழைப்புக்கு வேண்டிய வருவாய் கிடைப்பதைப் பொறுத்தே எந்தத் தொழிலாளியும் தன் தொழிலைச் செம்மையுடனும் ஆர்வத்துடனும் செய்கின்றான். நம் அரசாங்கம் இதனை நன்கு உணர்ந்து செயல்பட்டு வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நம் மாநிலத்தில் முளைத்துள்ள கூட்டுறவுச் சங்கங்களும் தொழிலாளர் நலச் சங்கங்களுமே இதனை மெய்ப்பிக்கும். திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு கூட்டுறவு மீனவர் சங்கங்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளன.



சங்கு அறுத்தல்.

சங்கு

கரிய திருமாலின் ஒரு பெருங்கை சங்கேந்திய கையே அல்லவா ? கண்ணபிரானின் சூழ்ச்சிகளுள் சங்கும் ஒரு சிறப்பிடத்தைப் பெறுகிறது. இடையர்கோன், பாரதப்போரில் சங்கை முழங்கியல்லவோ தருமனின் வாய்ச் சொற்களுக்குப் பிறிதுபொருள் கற்பிக்கின்ருன் ? இத்தகைய சிறப்பு மிக்க சங்கு, பண்டுதொட்டு, மன்னர் தாம் போரில் வெற்றி பெறுங் காலங்களில் முழங்குவதற்கேற்ற வெற்றிச் சங்காகவும்இருந்து வருகிறது.

சங்கினை அறுத்துச் செய்யப்படும் பால்போலும் தூய வெள்ளிய வளைகளைத் தம் கைகளிலே அணிந்து மகிழ

விரும்பாத பாவையரும் உளரோ ? சங்கிலிருந்து வளையல்கள் அறுக்கும் தொழில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே தமிழகத்தில் நிலவிவந்த ஒரு தலைசிறந்த தொழிலாகும். அன்று தோன்றிய தமிழ்ப்பாடல்களில் இதுபற்றிய குறிப்புகள் நிரம்ப இருக்கின்றன. சங்கறுப்போர் குடியென்றே ஒன்று அந்தக் காலத்தில் இருந்து வந்தது என்று எண்ணுவதற்கும் இடமுண்டு. சிறந்த பழந்தமிழ்ப் புலவர்களுள் ஒருவராகிய நக்கீரர் அந்தக் குடியைச் சேர்ந்தவரே என்று கூறுகின்றனர்.

இன்று சென்னை மாநிலத்தில் இத்தொழில் நடைபெறும் இடங்களாவன :—

தூத்துக்குடி, கீழக்கரை, மண்டபம், ராமேசுவரம், பாம்பன், நம்புதலை, முள்ளிமுனை, அதிராமபட்டினம்.

இவ் விடங்களுள் மிகப் பெரியதும், புதிய முறைகளில் சிறப்பாகத் தொழில் நடைபெறும் இடமாக விருப்பதும் தூத்துக்குடியே யாகும். சென்னை மாநிலத்தில், கடல்வளம் கொழிக்கும் ஊர்களுக்குத் தலைமை தாங்குவது, திருநெல்வேலி மாவட்டத்திலிருக்கும் தூத்துக்குடியே. முந்நீரில் நாவாயோட்டி வெள்ளையனின் தனியாட்சியை ஒடுக்கிய சிதம்பரனாரைப் பெற்றெடுத்த பெருமை போதாதென்று, கடல் வளம் கொட்டிக் கிடக்கும் கிடங்கு என்று சொல்லத்தகும் புகழையும் இந்த நகரமே தாங்கிக் கொண்டுள்ளது.

கடலுள் சுமார் எழுபது அடி ஆழம் சென்று சங்கு எடுக்கின்றனர். மூழ்குவோருக்குக் 'குளியர்' என்று பெயர். குளியரைச் சங்கு படிந்து கிடக்கும் இடங்களுக்கு இட்டுச் சென்று காட்டும் ஆட்களை 'பரமந்தடி' என்று கூறுவர். பரமந்தடி எனப்படும் இத் திசை காட்டுவோர் கடலில் நன்கு பயிற்சி பெற்றவராயிருப்பர். சங்கு எடுக்கும் தொழில், முத்தெடுக்கும் தொழிலைப்போலவே அரசாங்கத்தின் நேர்ப்

சங்குத் தொழிலில் மகளிர்.

பார்வையின் கீழ் இருப்பதால், ‘பரமந்தடி’யருக்கு அரசாங்கம் நாளுக்கு இவ்வளவு என்று கூலி கொடுத்து விடும்.

குளியர் ஒருவரின் அன்றுடைய சராசரி வருவாய் சுமார் 10 ரூபாயாகும். சிறந்த குளியருக்குச் சுமார் இருபது ரூபாய் வரையிலும் கிடைக்கும். குளியரின் வாழ்வு துன்பம் நிறைந்தது. கடலினுள் மூழ்கிப் பின் மேலே வருவதற்குள் அவர்கள் உயிருக்கு எத்தனையோ இடர்கள் நேரலாம். உயிரைப் பொருட்படுத்தாது தொழில் செய்தும் ஏற்ற வருவாய் இல்லாமை காரணமாக இத் தொழிலில் ஈடுபடுவோர் தொகை குறைந்து கொண்டே வந்தது. ஆனால் நாட்டின் விடுதலைக்குப் பின்னர் நிலை மாறிவிட்டது.

உயிரற்ற சங்குகளின் மீது குறியாக இருப்பதை விடுத்து, உயிர்ப் பிண்டங்களான குளியரின் மீதும் அரசாங்கம் நாட்டம் செலுத்தியது. அவர்கள் வருவாயை அதிகப்படுத்திய தோடு, உடல் நலம் குடியிருப்பு இவைகளில் சென்ற ஐந்தாண்டுகளில் அரசாங்கம் நல்ல கவனம் செலுத்தியிருக்கிறது. அதன் விளைவாக இன்று சுமார் 340 குளியர்கள் வேலைசெய்கின்றனர். 1953-54-ஆம் ஆண்டில் மட்டும் திருநெல்வேலி, இராமநாதபுரம் கடலோரங்களில் சுமார் 10 லட்சம் சங்குகள் எடுக்கப்பட்டுள்ளன. அரபிக்குளியர்கள் பேசும் தமிழ் கேட்பதற்கு வேடிக்கையாக இருக்கும்.

சங்கறுக்கும் தொழிலுக்கு நல்ல ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது. சிறந்த வளையலறுப்போன் ஒரு நாளைக்கு 100 வளையல்கள் அறுக்கமுடியும்.

முத்துக் குளித்தல்

ஒரு உலகின் ' அழகு ராணி ' யாக காலத்தில் செல்வச் செறுக்கிலே மிதந்தது ரோமநாடு. அந் நாட்டு மகளிரின் ஆசையைப் பூர்த்தி செய்வதற்காகக் கடல் கடந்து, அந்த நாட்டு இளைஞரும் வணிகரும் பாண்டிய நாட்டுக்கு அந்தக் காலத்தில் ஓடோடியும் வருவார்களாம். தான் பெற்ற கடல் வளத்தால் அன்றிலிருந்து இன்றுவரை உலகின் முத்துக் கிடங்காக விளங்கும் பேறு, மன்னார் வளைகுடாவிற்கு இருந்து வருகிறது. இன்று முத்து வாணிபத்தில் உலகிலேயே தலை சிறந்த இடமாகக் கருதப்படுவது லண்டனிலுள்ள ஹத்தன் தோட்டம் (Hatton Garden). உலகின் பலவேறு பகுதிகளிலும் குளிக்கப்படும் சிறந்த முத்துக்கள் அங்கு வருகின்றன. நமது முத்தும் அங்கு செல்கிறது. இங்கிருந்து அனுப்பப்படும் முத்து மிகவும் உயர்தரமானது என்றும், உலகின் வேறு பகுதிகளிலிருந்து வரும் எந்த முத்துக்கும் இது இளைத்ததல்ல என்றும் அங்குள்ள வணிகர்கள் ஒருமுகமாகக் கருதுகின்றனர்.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, கிளியோபெட்ரா என்னும் ரோம நாட்டு அரசியின் உள்ளத்தைக் கொற்கை முத்து கொள்ளை கொண்டதாம். இந்தச் செய்தியைக் கூறும் அந்தக் காலத்து வரலாற்று ஆசிரியன் பிளினி என்பான் முத்து வாணிபத்தைப் பற்றிப் பொதுவாக எழுதியிருப்பவை, இந்திய நாட்டுக்கே பெருமை தருவனவாகும். ரோம நாட்டு மங்கையருக்கு முத்துப் பைத்தியமே பிடித்திருக்கிறது என்கிறான். அதன் காரணமாக அந்த நாட்டின் செல்வம் கொள்ளைபோகிறது என்று அந்த ஆசிரியன் அங்கலாய்க்கிறான். ' நாடு மொட்டையடிக்கப்படுகிறது, இந்த நிலை மாறவேண்டும்,' என்று அவன் அன்று கூக்குரலிட்டது இன்றும் நமக்குப் படிப்பதற்குப் இன்பமாகவுள்ளது. நம் நாட்டுக் கட்டாணி முத்தல்லவா அந்நாட்டுக் கன்னியரை இப்படி ஆட்டிவைத்திருக்கிறது ! இன்றுவரை தன் தரம் குறையாமலிருக்கும் நமது முத்தின் பெருமையே பெருமை !!

மிகப் பழங்காலத்தில் எழுதப்பட்ட தமிழ்ப் பாடல்களில் முத்தைப் பற்றி ஏராளமான குறிப்புகள் உள்ளன. மதுரைத் தெருக்களிலெல்லாம் முத்துக்கள் சிந்திக்கிடந்தன என்றால் பாருங்களேன் ! ' முக்தா ' என்ற வடமொழிச் சொல் முத்து என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து பிறந்ததே. கால்டுவெல் காலந் தொடங்கி இன்று வரையுள்ள மொழி நூல் வல்லுநர்கள் யாவரும் இதை ஒத்துக் கொள்ளுகின்றனர். மேலும் அர்த்த சாத்திரம் என்னும் நூலை எழுதிய சாணக்கியன் கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலே வாழ்ந்தவர். அவர் முத்தைக் குறிக்கத் தாம்ரவர்ணிகா (Tamravarnika) என்ற சொல்லை ஆண்டுள்ளார். தாம்பரபரணியிலே இருந்து தான் முத்துக்கள் வருவதாக அன்று வடக்கே இருந்தவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள் போலும். சந்திரகுப்தன் அவையிலேயிருந்த மெகஸ்தனிஸ் என்ற கிரேக்க தூதரும்

நமது முத்தின் வனப்பும் வளமும் கண்டு வியந்துள்ளார். நமது முத்தைக் குறிப்பிடும் மேல்நாட்டு அறிஞர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் பிளினியும் தாலமியுமே. தாலமி குறித்துள்ள கோஓறை (Kourai) பழங்காலத்துக் கொற்கையே என்று அறிஞர் ஆராய்ந்து முடிவு செய்துள்ளனர்.

கொற்கையும் காயலுமே அன்றிருந்த சிறந்த முத்துத் துறைகள். காவிரிப்பூம்பட்டினம், கோட்டயம் முதலிய பகுதிகளிலும் முத்து வாணிபம் நடந்து வந்தது. இன்றோ எல்லாப் புகழையும் சேர்த்து தூத்துக்குடியே அள்ளிக் கொண்டு போகிறது.

தாலமி வாழ்ந்த காலம் கி.பி. 2-ஆம் நூற்றுண்டு. வான நூல் ஆராய்ச்சியில் வல்ல வராகமிகிரர் தாம் எழுதிய பிருகத் சம்கிதை (Brihat Samhita—கி.பி. 404-ல் எழுதப்பட்டது) என்னும் நூலில் பாண்டிய நாட்டின் முத்துக் குளிப்பு, தண் பொருநை நதி ஆகிய வற்றைக் குறிப்பிட்டுள்ளார். பதின் மூன்றும் நூற்றுண்டில் (கி. பி. 1292) இந்தியாவுக்கு வந்த 'மார்கோபோலோ' வும் இந்திய முத்து, முத்துக் குளிப்புத் தொழில், முத்து வாணிபம் ஆகியவற்றைக் குறித்து எழுதி யுள்ளார். பின் வந்த வாஸ்கோடகாமாவும் (கி.பி. 1499), செயின்ட் பிரேன்ஸிஸ் ஸேவியரும் (கி. பி. 1542) நமது முத்தைக் காணத்தவறிவிட்டனர் என்று நினைத்துவிட வேண் டாம். அவர்கள் குருடர்களுமில்லை; நமது முத்துக்கள் ஒளி குறைந்தவையும் அல்ல. தம் நாட்குறிப்புகளில் தென் பாண்டிய நாட்டின் முத்தைப் பற்றி அவர்களும் எழுதியுள்ள னர்.

இப்படிச் சிறப்பாகத் தொடர்ந்து நம் நாட்டிலே நடை பெற்றுவரும் முத்துக்குளிப்பு என்று தொடங்கியதோ தெரிய

வில்லை. எப்படியும் குறைந்தது 2,500 ஆண்டுகளுக்கு முன்பாவது இத்தொழில் தொடங்கியிருக்கவேண்டும் என்று திட்டமாகக் கூறலாம். விவிலிய நூலின் (பைபிள்) பழம் ஏற்பாட்டில் காணப்படும் வரலாற்றுக் குறிப்பு ஒன்று நாம் அறியத்தக்கது. பாலஸ்தீன மன்னன் சாலமனைப் பார்க்கச் சென்ற ஷீபா இளவரசியார் சில முத்துக்களைப் பெற்றார்கள். அம்முத்துக்கள் கிழக்கேயிருந்து வந்தன என்று குறிக்கப்பட்டுள்ளது. அவை இந்திய நாட்டின் முத்துக்களாகத்தான் இருக்கவேண்டுமென ஆராய்ச்சி அறிஞர் கருதுகின்றனர். இச் செய்தி உண்மையாயின் தமிழகத்தில் இந்தத் தொழில் இன்றைக்கு 3,000 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டது என ஐயத்திற்கு இடமின்றிக் கூறிவிடலாம்.

பழங்காலத்தில் பாண்டியரின் ஏகபோக உரிமையாக இருந்த முத்துக் குளிப்பு, பிற்காலத்தில் சோழரிடம் சென்றது. சோழரிடமிருந்து முகம்மதியர் கைக்கு மாறியது. முகம்மதியர் கையிலும் தங்காது விஜயநகரந்து அரசர்களிடம் விரைந்து தாவிய முத்து அளம் (Pearl Fisheries), கி.பி. 1524-லிருந்து 134 ஆண்டுகள் போர்ச்சுகீசியர் வசப்பட்டு இருந்தது. கி.பி. 1658-ஆம் ஆண்டில் டச்சுக்காரர் அதன்மீது கண்வைத்தனர். அவருக்கும் நீண்ட நாள் கொடுத்து வைக்கவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயர் ஜாதகம் அதனோடு பொருந்தி விட்டது. எப்படியோ கடைசியில் நம் செல்வம் நம்மை விட்டுப் போகவில்லை என்ற ஆறுதலை இன்று நாம் அடைகிறோம்.

முத்துக் குளிப்பு மிகவும் அரிய ஒரு செயல். சங்கு குளித்தலைப் போலவேதான் இதுவும் நடைபெறுகிறது. மூச்சுப் பிடிக்க முடிகின்ற வரையிலேதான் குளியன் உள்ளே இருக்க முடியும் என்ற நிலையை புதிய கருவிகளின் துணையால்



முத்துக்குக் காத்திருக்கும் நாவாய்கள்

மாற்றியமைக்க முடியும். ஆனால் நமது குளியர்கள் பழைய முறையிலேயே பழகிவிட்டது இதற்கு ஒரு பெருந்தடையாக இருந்து வருகிறது.

சென்னை மாநிலத்திலுள்ள மீன்துறையே இந்தியாவில் மிகப்பெரியதும் பழமையானதும் ஆகும். கி.பி. 1907-ல் இது நிறுவப்பட்டது. முத்து அளம் இத்துறைக்கு உட்பட்ட ஒரு பிரிவே.

நாடு விடுதலையடைந்த பிறகு 1955-ஆம் ஆண்டில்தான் முதல் முறையாக முத்துக் குளிப்பு நடைபெற்றது. அந்த ஆண்டு மார்ச் மாதத்தில், 19-ஆம் நாளன்று தொடங்கிய இத்தொழில், பருவம் மாறிவிட்டதால் மே மாதம் 14-ஆம் நாளோடு முற்றுப்பெறாமலே நின்றுவிட்டது. 1949-ஆம் ஆண்டிலே சிப்பிகள் பரவலாக வளர்ந்து வருவது

கண்டறியப்பட்டு, தக்க பாதுகாப்பு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டது. 1952-ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடை பெற்ற ஆராய்ச்சிகளால் சுமார் மூன்று கோடிக்கு மேற்பட்ட சிப்பிகள் கடலடியில் வளர்ந்து பக்குவப்பட்டு வருவது தெரிய வந்தது. உடனே நம் செல்வம் கொள்ளைபோய் விடாமல் கண்ணுங்கருத்துமாக அரசாங்கம் அதைக் காக்கத் தொடங்கி யது. மீன் பிடித்தல், சங்கெடுத்தல் ஆகியவை அந்த இடங் களில் இரண்டு ஆண்டுக்கு நடைபெறக் கூடாதென அரசாங்கம் தடை விதித்தது. இத்தகைய பாதுகாப்பின் விளைவாகத்தான் 1955-ல் நடந்த முத்துக் குளிப்பில் நம் அரசாங்கத்திற்கு 1,36,398 ரூபாய் கிடைத்துள்ளது.

1955-ல் சிலுவதுறையில் இவ்வேலை தொடங்கியது. இந்த இடம் தூத்துக்குடிக்கு இரண்டுமைல் வடக்கே உள்ளது. இதற் கென அமைக்கப்பட்ட பந்தல் ஒரு நவீன நகரமாவே காட்சி யளித்தது. அவ்வளவு வசதிகள் அங்கே செய்யப்பட்டிருந் தன. மூன்று சிறு கப்பல்களும் சுமார் 70 வள்ளங்களும் இப்பணியிலே முனைந்து நின்றன. சுமார் 700 குளியர் முத்துக் குளித்தனர்.

குளியருக்கு வருவாயில் மூன்றில் ஒரு பங்கும், அரசாங்கத் திற்கு மூன்றில் இரண்டு பங்கும் கிடைக்கும். அரசாங்கம் தன் பங்கை ஏலம்போடும். இதற்காக வணிகர் கூட்டம் அங்குக் குழுமியிருக்கும். இந்தத் தடவை கிடைத்த முத்துக்களுள் நூறு ரூபாய் பெறுமான முள்ளவை நிறைய இருந்தன. இரண்டாயிரம் ரூபாயும் அதற்குமேலும் பெறு மானமுள்ள முத்துக்களும் கிடைத்தன. சுமார் 27 ஆண்டு களுக்குப் பிறகு முத்துக் குளிப்பு 1955-ஆம் ஆண்டிலேதான் நடைபெற்றுள்ளது.

முத்துபற்றிய சில சுவையான உண்மைகள்

ஐந்து தானிய எடையுள்ள முத்து சுமார் 1,200 ரூபாய் பெறும். இதுவரையில் எடுக்கப்பட்ட முத்துக்களுள் உலகிலேயே மிகப் பெரியது 1,888 தானிய எடை உள்ளதாகும் என்று கூறுகின்றனர். அதன் விலை என்ன என்பதை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

அலைமோதும் கடல் மடியிலே.

சீனு, எகிப்து, கிரேக்கம், பெர்சியா, ரோம் போன்ற பழம் பெரும் நாடுகளோடெல்லாம் முத்து வாணிகம் செய்த பெருமை நமக்கு உண்டு. ஆனாலும் அத்துறையில் ஆராய்ச்சியை வளர்த்த பெருமை மேனாட்டாரையே சாரும். அவர்கள் தாம் முதன் முதலில் செயற்கை முத்து தயாரிக்கக் கண்டு பிடித்தனர். பிரான்சு நாட்டிலே, 17-ஆம் நூற்றாண்டில் முதன் முதலாகச் செயற்கை முத்து (Artificial Pearl) தயாரிக்கப்பட்டது. வெள்ளி போன்று பளபளப்பாக மின்னும் ஒருவகை மீனின் செதில்களைத் தூள் செய்து, அத் தூளையும் தூய வெண்மையான மெழுகையும் கலந்து, கலவையை மெல்லிய கண்ணாடி உருண்டையில் அடைத்துச் செயற்கை முத்துச் செய்யப்படுகிறது.

இயற்கையான முத்து, செயற்கையான முத்து இவற்றோடு மற்றொரு வகையான முத்தும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அதனை, விளைவிக்கப் படும் முத்துக்கள் (Cultivated Pearls) என்பர். இவைகளை முதன் முதலில் விளைவித்த பெருமை ஜப்பானியருக்கே உண்டு. 1905–ஆம் ஆண்டில் மிகிமோடா (Mickimoto) என்ற ஜப்பானிய ஆராய்ச்சியாளர் முத்தைப்பற்றி ஆராயத் தலைப்பட்டு பல அரிய உண்மைகளைக் கண்டார். ஒரு நுண்ணிய பொருளை நடுவாகக்கொண்டு அதன்மேல் முறையாகப் படிந்து முதிரும் ஒருவகை சங்குப் பொருளே முத்து என்ற உண்மை முதலில் அவரால்தான் கண்டுபிடிக்கப்பட்டது. நடுவாகக் கிடக்கும் சிறு துணுக்கு சிப்பிக்குள்ளேயே கிடக்கும் கல் போன்ற ஏதேனுமொரு சிறு பொருளாகவோ, அல்லது சிப்பியிலேயே உற்பத்தி செய்யப்படும் ஒன்றாகவோ இருக்க வேண்டும் என அவர் எண்ணினார். எல்லாச் சிப்பிகளுக்குள்ளும் முத்துக்கள் ஏன் வளர்வதில்லை என்ற வினாவுக்கு அங்கே அவருக்கு விடை கிடைத்தது. சிப்பிக்குள் சிறிதுணுக்கு ஏதுவும் இல்லாமையே அதற்குக் காரணமாக இருக்கவேண்டும்.

வெளித் துணுக்கு சிப்பிக்குள் சென்றவுடன் சிப்பிக்கு அதன் உட்புறத்தில் ஒருவித எரிவு உண்டாகிறது. அந்த எரிவைத் தணிப்பதற்காக வழவழப்பான பசை போன்ற ஒரு பொருளை அது சுரக்கும். அப்பசை துணுக்கின்மீது முறையாகப் படிந்து இறுகிப் பெருத்து முதிர்கின்றது.

ஓர் உயிர் படுகின்ற வாதையால் உலகுக்கு ஒரு முத்து கிடைக்கிறது. இதுவே முத்து உண்டாகும் விதம். முதிர்வது அல்லது முற்றுவது முத்து. சொல்லே அதன் தன்மையை விளக்குகிறது.

மிகிமோடா என்னும் அந்த ஜப்பானிய அறிஞர் சில வெறுஞ் சிப்பிகளைப் பொறுக்கி அவற்றுள் மிகச் சிறிய கண்ணாடித் துண்டுகளைப் போட்டு அவைகளைப் பாதுகாத்து வந்தார். மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் அவை யாவும் முத்துக்களாக விளைந்தன. இந்த ஆராய்ச்சியின் பயனாக ஜப்பானில் முத்துச் சிப்பிப் பண்ணை ஒன்றை நிறுவி முத்துக்களை விளைவிக்கத் தொடங்கினார்.

1933-ஆம் ஆண்டில் நமது நாட்டிலும் குருசாடைத் தீவில் (Krusadai Island) முத்துச் சிப்பிப் பண்ணை ஒன்று நிறுவப் பட்டது. மீன் துறையின் நெறியாளராக அன்றிருந்த டாக்டர் பி. சுந்தரராஜ் என்பார் ஜப்பானுக்குச் சென்று யாவற்றையும் நேரில் அறிந்ததோடு மிகிமோடோவுடன் உரை யாடிப் பலவற்றையும் நன்கு உணர்ந்து வந்தார். 1947-ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் நம் அரசாங்கம் ஓர் ஆராய்ச்சி நிலை யத்தை அமைத்துள்ளது.

முத்தை ஆராய்ந்த அறிஞர்கள், அதில் நூற்றுக்கு 92 பங்கு சுண்ணம்பும் 6 பங்கு உயிருள்ள பொருள்களும் (Organic substance) 2 பங்கு நீரும் இருப்பதாகக் குறித் துள்ளனர்.


அறிவு
வளர!
CONNEMARA PUBLIC LIBRARY
10 FEB 957
MADRAS

" வீடுதோறும் கலையின் விளக்கம்,
வீதிதோறும் இரண்டொரு பள்ளி,
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்கள் எங்கும் பலபல பள்ளி"

—பாரதியார்.

அறிவு...

வளர!

சென்னை மாநிலத்தில் நூற்றுக்கு எண்பதுபேர் இன்னும் கல்வியறிவு பெறாதவர்களாக இருக்கின்றனர். தொழிற்சாலைக்கு வேண்டிய யந்திரங்களைத் தயாரிப்பதுபோல் தங்களுக்குத் தேவையான குமாஸ்தாக்களைத் தயாரித்துக்கொள்ளுவதோடு ஆங்கில ஆட்சி ஆறுதலடைந்தது.

ஆனால் இன்றைய நிலை வேறு. கல்வியறிவு பெறாத மக்கள் நிரம்பியிருக்கின்ற நாடு சிறந்த நாடாக வாழமுடியாது என்று பலராலும் நம்பப்படுகின்ற காலம் இது. இத்தகைய நிலையில் மக்களுக்குக் கல்வியறிவு புகட்டுவது எவ்வளவு இன்றியமையாத செயல் என்பதை நன்கு உணர்ந்த அரசாங்கம் பல அரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இளைஞருக்கு மட்டுமல்லாது வயது வந்தோருக்கும் கல்வி புகட்டும் பணி வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது.



இவனினும் சிந்தனைச் சிற்பி உளரோ..?

முதல் ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் கல்விக்கென ஒதுக்கப் பட்ட தொகை ரூ. 494 லட்சமாகும். இரண்டாவது ஐந்தாண் டுத் திட்டத்தில் தொழில் கல்விக்கு மிகவும் சிறப்பான இடம் அளிக்கப்பட்டு உள்ளது. கல்விக்கும் தொழில் கல்விக்குமாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பணம் 1,425 லட்சம் ரூபாயாகும். முதல் திட்டத்தில் ஒதுக்கி யதைப்போல மூன்று மடங்கு இரண்டாவது திட்டத்தில் இதற்கு ஒதுக்கப்பட்டு இருக்கின்றது.

மலபாருக்கு அடுத்தபடியாகக் கல்வித்துறையில் முன்னணி யில் நிற்பது, சென்னை மாநிலத்தைப் பொறுத்தமட்டில் திருநெல்வேலி மாவட்டமே. 500-க்கு மேற்பட்ட மக்கள் தொகையை உடைய ஊர்கள் தோறும் இந்த மாவட்டத்தில் பள்ளிகள் எழும்பிவிட்டன.

முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் திறக்கப்பட்ட பள்ளிகளாவன :—

தொடக்கப் பள்ளிகள்	.. ..	142
உயர் நிலைப்பள்ளிகள்	.. ..	13
அடிப்படைப் பள்ளிகள் (Basic Schools)	..	127
பயிற்சிப்பள்ளி	.. .. ..	1
அடிப்படைப் பயிற்சிப் பள்ளிகள்	..	2

மேற்குறித்தவை போக, மலையில் வாழும் குடிகளின் குழந்தைகளுக்காக நான்கு தொடக்கப் பள்ளிகளும், தாழ்த்தப்பட்டோரின் பிள்ளைகளுக்காக 13 பள்ளிகளும், திறக்கப்பட்டுள்ளன. தாழ்த்தப் பட்டோருக்கும் பின் தங்கிய வகுப்போருக்கும் அளிக்கப்பட்டுவந்த தங்குமிடம், உணவு இவற்றிற்கான வசதிகளும் விரிவாக்கப் பட்டுள்ளன.

ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்க காலத்தில் இங்கிருந்த கல்வி நிலையங்களும் இன்று உள்ளவைகளும் :—

		1951.	1956.
பயிற்சிக் கல்லூரிகள்	..	1	2
தொடக்கப் பள்ளிகள்	..	2182	2280
அடிப்படைப் பள்ளிகள்	..	27	103
உயர்நிலைப் பள்ளிகள் :			
ஆண்கள்	.. ..	59	74
பெண்கள்	.. ..	13	16
பயிற்சிப் பள்ளிகள் :			
ஆண்கள்	.. ..	2	5
பெண்கள்	.. ..	7	5
அடிப்படைப் பயிற்சிப் பள்ளிகள் :			
ஆண்கள்	.. ..	2	6
பெண்கள்	.. ..	..	3
கல்லூரிகள் : ஆண்கள்	..	2	2
பெண்கள்	..	3	4

மக்களுக்கு அறிவை வளர்ப்பதற்கான முயற்சிகளில் புத்தக நிலையங்கள் (Libraries) அமைப்பதும், படிப்பகங்கள் நிறுவுவதும், சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவையாகும். சென்ற ஐந்தாண்டுகளில் மாவட்டத் தலைமைப் புத்தக நிலையம் ஒன்றும், கிளை நிலையங்கள் ஒன்பதும், இந்த மாவட்டத்தில் திறக்கப் பட்டிருக்கின்றன. மேலும் உடன் எடுத்துச்சென்று ஓய்வாகப் படிப்பதற்குப் புத்தகம் வழங்கும் நிலையங்கள் (Delivery Stations) எட்டும் புதிதாகத் திறக்கப் பட்டுள்ளன.

சமுதாய நலத்திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம், சமூக வளர்ச்சித் திட்டம் ஆகியவை நாட்டுப்புறங்களின் உயிர்ச்சத்தாக இருந்து அவைகளை ஊக்கி வருகின்றன என்பதை முன்னரே கண்டோம். எவ்வளவுதான் முயன்றாலும் மக்களின் அறியாமை என்னும் கட்டாந்தரையில் எதுவும் விளையாது. எனவே கல்வியறிவைப் புகட்டுவதே முழுமுதல் பணியாக அப்பகுதிகளி லெல்லாம் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இளைஞர்களுக்கான பள்ளிகளைப் பெருக்குவதால் மட்டும் பயன் விளைந்து விடாது. முதியோருக்கும் சிறிது பொது அறிவு ஊட்டும் சமூகக்கல்வியும் (Social Education) உடனடியாக வேண்டுவது. ஆகவே இப்பணி சிறப்பாக இவ் வட்டாரங்கள் எங்கும் மேற்கொள்ளப் பட்டது. சமூகக் கல்வி பலவகையில் அளிக்கப்படலாம். இளைஞர் கழகங்கள், மாதர் சங்கங்கள், கைத்தொழில் பயிற்சி நிலையங்கள், ஓய்வுபெறு சங்கங்கள் (Recreation Clubs), முதியோர் பள்ளிகள் ஆகியவற்றைத் திறப்பதன் மூலம் இப்பணி பொதுவாக ஆற்றப்பட்டு வருகின்றது. திட்டகாலத்தில் இவ்வாறு தோன்றிய முதியோர் பள்ளிகள் 127.

சங்கரன் கோயில் குருவிகுளம் சேரன்மாதேவி ஆகிய வட்டாரங்களில், பலவேறு சமுதாயத் திட்டங்களின் மூலம் நடைபெற்ற கல்வி முன்னேற்றங்களைச் சிறப்பாகக் காணுவோம்.

1951–52-ஆம் ஆண்டில் இங்கிருந்த தொடக்கப்பள்ளிகள் 964. 100,838 பிள்ளைகள் அவைகளில் பயின்று வந்தனர். திட்டகாலத்தில் 23 பள்ளிகள் புதிதாகத் தோன்றின. இன்று படிக்கும் வாய்ப்பு பெற்றுள்ள பிள்ளைகள் 1,25,476.

உயர்நிலைப் பள்ளிகளும் இடைநிலைப் பள்ளிகளுமாகச் சேர்ந்து திட்டத்தின் தொடக்க காலத்தில் இருந்தவை 25. உயர்நிலைப் பள்ளியில் 15,102 மாணவரும், இடைநிலைப் பள்ளிகளில் 245 மாணவரும் இருந்தனர். இன்றோ 28 உயர் நிலைப்பள்ளிகளும் 2 இடை நிலைப்பள்ளிகளும் இருக்கின்றன. இவற்றில் முறையே 16,780 மாணவரும் 399 பிள்ளைகளும் பயில்கின்றனர்.

முதியோர் கல்வி, தேசிய வளர்ச்சிக்கென எடுத்துக் கொள்ளப்பட்ட வட்டாரங்களிலே தான் சிறப்பாகக் சண்காணிக்கப் பட்டது. தொடக்க காலத்தில் இங்கிருந்த பள்ளிகள் பத்தொன்பது. திட்டகாலத்தில் இவை விரைவாக வளர்ந்துள்ளன. அதன் பயனாக இன்று 95 முதியோர் கல்விக் கூடங்கள் பணியாற்றுகின்றன. 529 முதியோர் கல்வி வாய்ப்பு பெற்று வந்த இடத்தில், இன்று 2,848 பேர் அத்தகைய வாய்ப்பைப் பெறுகின்றனர். முதியோர் பள்ளிகளில் நூலகங்களும் நிறுவப்பட்டுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும். 31 முதியோர் பள்ளிகளுக்கு புத்தகங்கள் வாங்கித் தரப்பட்டுள்ளன. 21 பள்ளிகளுக்கு, பள்ளிக்கு ஒன்று மேனியில் அலமேராக்கள் வழங்கப்பட்டன. அலமேரா ஒவ்வொன்றும் 100 ரூபாய் பெறுமானம் உள்ளதாகும்.

1951–ஆம் ஆண்டில் 4 அடிப்படைப் பள்ளிகளும் (Basic schools), 1955-ஆம் ஆண்டில் 5 அடிப்படைப் பள்ளிகளும், குற்றவாளிப் பரம்பரையினரின் சிறுருக்காக சங்கரன் கோயில் வட்டத்தில் திறக்கப்பட்டன. தற்பொழுது அங்கே 69 அடிப்

படைப் பள்ளிகள் இருக்கின்றன. கல்வி வெறும் ஏட்டோடு நின்று விட்டால் அதனால் ஒருபயனும் விளைவதில்லை. மாறாகத் தீங்கு விளைந்தாலும் வியப்படைவதற்கில்லை. எனவே தான் எதிர்காலச் சந்ததிகளை சிறந்த நாட்டுப்பற்றுக் கொண்டவர்களாகவும், உழைப்பாளர்களாகவும், ஆக்குவதற்கேற்ற கல்வியாகிய அடிப்படைக்கல்வியில் அரசாங்கம் ஆர்வம் கொண்டுள்ளது. மனிதனின் சொல்லுக்கும் செயலுக்கும் இன்று தொடர்பின்றியிருப்பது ஏட்டுக்கல்வியால் விளைந்துள்ள பெருங்கேடாகும் என்பது தமிழ்ச்சான்றோர் திரு. வி. கலியாண சுந்தரனாரின் கருத்தாகும்.

பள்ளிகளுக்கெல்லாம் மூலமாக இருப்பவை பயிற்சிப் பள்ளிகளே அல்லவா ? திட்டகாலத்தில் இரண்டு அடிப்படைப்

உழைப்பின் மேன்மையை இவர்களும் உணர்கிறார்கள்.



பயிற்சிப்பள்ளிகள் திறக்கப்பட்டன. இன்று இங்குள்ள பயிற்சிப்பள்ளிகள் **5.** இவற்றுள் அடிப்படைப் பயிற்சிப் பள்ளிகள் மூன்று.

இம்மாவட்டத்திலுள்ள நூலகங்கள் மக்களின் அறிவை வளர்ப்பதில் சிறந்த தொண்டாற்றி வருகின்றன. 1952-ஆம் ஆண்டு, பாளையங்கோட்டையில் மாவட்டத் தலைமை நூல் நிலையம் நிறுவப்பட்டது. மேலும் ஒன்பது கிளை நூலகங்களும், புத்தகம் வழங்கும் நிலையங்கள் (Delivery stations) எட்டும், மாவட்டமெங்கும் நிறுவப்பட்டன என்பதை முன்னரே கூறினோம்.



CONNEMARA PUBLIC LIBRARY
10 FEB 1957
MADRAS

"மழை தொழில் உதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய
நிலனும் மரனும் பயனெதிர்பு நந்த
நோயிகந்து நோக்கு விளங்க"

—மதுரைக்காஞ்சி.

நாடு உயர!

இந்தியாவின் வளர்ச்சி உண்மையிலேயே நாட்டுப் புறங்களில்தான் உள்ளது. சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களைப் பார்த்துவிட்டு இந்தியாவின் முன்னேற்றத்தை எவரும் அளப்பதில்லை. நம் மாநிலத்தைப் பார்ப்போமானால், இங்குள்ள பேரூர்கள் (towns) 293; கிராமங்களோ 19,491. நூற்றுக்கு எண்பது பங்கு மக்கள் இந்தக் கிராமங்களிலேதான் வாழ்கின்றனர்.

ஆங்கில ஆட்சிக் காலத்தில் இந்தப் பேரூர்களில் வாழ்ந்த மக்கள் ஓரளவு நாகரிக வசதிகளும் கல்வியறிவும் பெற்றவர்களாக இருந்தனர். அவர்களில் ஒரு சில வணிகர்கள் போக, ஏனையோர் எழுத்தர்களாகி (Clerks) யந்திர வாழ்வு நடத்தினர். அந்தக்காலத்தில் நம் நாட்டுப்புற மக்கள் புழுக்களினும் கேடாக நெளிந்து நைந்தனர். இறப்பினும் கேடான இழிவாழ்வில் நொந்து அழிந்தனர்.



இறைப்புக் குழாயும் குளிப்பறையும்.

எனவே இந்தியாவை மீண்டும் உயிர்பெற்று உலவச் செய்து நாட்டுப் புறத்தின் நலிவைப் போக்க உதவிய நாட்டுப்புற வளர்ச்சித் திட்டம் மிக முக்கியமானது.

நாட்டுப்புறம் என்னும் பொழுது அது சிறப்பாக உழவரையே குறிக்கும். பிற தொழில்களில் நெசவு குறிப்பிடத் தக்கது. எஞ்சிய தொழில்களில் இருப்போர் மிகக் குறைவே. 1951-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கின்படி நமது மாநிலத்தில் நிலத்தை நம்பி வாழ்வோரின் தொகை மட்டும் 21,990,710 ஆகும். மொத்த மக்கள் தொகையே 35,734,489 தான் என்பது கருதத்தக்கது.

நாட்டுப்புறத்தை முன்னேற்றுவதில், வேறுவகையாகச் சொல்ல வேண்டுமானுல் நமது நாட்டை முன்னேற்றுவதில், இருக்கின்ற பெரிய இடர்கள், மக்களிடம் பரவியுள்ள அறியாமையும் வறுமையுமே.

அவர்களுக்கு வேண்டிய பொருளை உதவுவதோடு அதனைப் பயன்படுத்தும் வழி வகைகளையும் எடுத்துச் சொல்ல வேண்டும். அதுவும் அவர்களோடு கலவாமல் எட்ட நின்று சொன்னால் அது பயன் கொடுக்காது. அதை அவர்கள் நம்பு வதே கடினம். எனவே பயிற்சி பெற்ற அரசாங்க அலுவலா ளர்கள் நாட்டுப்புற மக்களைப் போலவே அவர்களோடு கலந்து உறவாடி, அவர்களது முன்னேற்றத்திற்கு வழி காட்ட வேண்டும். இவ்வேலைகளை யெல்லாம் சிறப்பாகச் செய் யத்தான் சமூக வளர்ச்சித் திட்டம், சமூக நலத்திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம் முதலியவைகள் உருவாயின. உள்ளூர் வளர்ச்சித் திட்டமும் இதற்காக ஏற்பட்டதே. நாட்டுப் புறத்தின் முன்னேற்றத்திற்கான எல்லா காரியங்களிலும் இவைகள் ஈடுபடுகின்றன.

இத்திட்டங்களின் முக்கிய நோக்கங்கள் இரண்டு. ஒன்று நாட்டுப்புற மக்களுக்கு வேண்டிய யாவற்றையும் தேடி யமைத்தல். இரண்டாவது, நாட்டுப்புற மக்கள் நடைபெறு வது நம்முடைய ஆட்சி—முன்னேற்றம் நமது கைகளிலே இருக்கிறது, என்ற உண்மையான உணர்வும் ஊக்கமும் பெறுமாறு செய்வது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மாநிலம் இதில் நல்ல வெற்றி பெற்றது. 30 லட்சம் ரூபாயை இதற்கென ஒதுக்கிய சென்னை அரசாங் கம், 77 லட்சத்தை இத்துறையில் செலவிட்டது. இரண் டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவிடவிருக்கும் தொகையோ ரூ. 1,710 லட்சங்களாகும். இரண்டாவது திட் டத்தின் இறுதியில் நம் நாடு பிற நாகரீக நாடுகளின் வாழ்க்கை நிலையைக் கண்டிப்பாக எட்டிப் பிடிக்கும்.

திருநெல்வேலி மாவட்டத்தில், முதல் ஐந்தாண்டுத் திட் டத்தில், இத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளை விளக்கமாகக் காணுவோம்.



ஊருக்கு உழைக்கும் உத்தமர்கள்

இம்மாவட்டத்தில் மூன்று சமுதாய வளர்ச்சித்திட்ட வட்டாரங்களும், இரண்டு தேசீய வளர்ச்சிப்பணி வட்டாரங்களும் உள்ளன. கோயில்பட்டி, வள்ளியூர் ஆகிய இரு வட்டாரங்களும் தேசீய வளர்ச்சிப்பணிக்கு உட்பட்டன. சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் சேரன்மாதேவி, கருவைகுளம், சங்கரன்கோயில் ஆகிய மூன்றுமாகும்.

உள்ளூர்ப் பணிகளுக்கு ஆர்வமூட்டவும், நாட்டுப்புற வளர்ச்சியைச் சிறப்புடன் நடத்தவும், கடந்த ஐந்தாண்டுகளிலும் இந்த வட்டாரங்களில் செலவான மொத்தத்தொகை ரூ. 22·5 லட்சமாகும்.

உள்ளூர் வளர்ச்சித்திட்டம் இம்மாவட்டம் முழுவதிலும் மேற்கொள்ளபபட்டது. இதன் கீழ் செலவு செய்யப்பட்ட தொகை யளவு சுமார் 25 லட்சம் ரூபாய்க்கும் அதிகமாகும். இதில் பாதித்தொகை மக்களால் மனமுவந்து வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மக்களுக்குத் தோன்றியிருக்கும் ஆர்வத்தையல்லவா இது குறிக்கின்றது?

வள்ளியூர் வட்டாரம்

1955 ஆம் ஆண்டு அக்டோபர் மீ 2 ஆம் தேதியிலிருந்து இந்த வட்டாரம் வேலை செய்யத் தொடங்கியது. எனவே முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆறு மாதங்களே இது பணியாற்றி இருக்கின்றது. ஆனாலும் இக்குறுகிய கால எல்லைக்குள் பல அரிய செயல்களைச் செய்திருக்கின்றது.

458 டன் எரு தயாரிக்கப்பட்டதோடு 3 மணங்கு ரசாயன உரம் இப்பகுதியிலுள்ள உழவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. 227 ஏக்கர் பயிரைக் காப்பதற்காக 1,451 பவுண்டு ரசாயன மருந்து பயன்படுத்தப்பட்டது. 15¾ மணங்கு விதையோடு 1 இரும்புக்கலப்பையும் வேளாண் மக்களுக்குக் கொடுக்கப் பட்டது. யந்திரக்கலப்பையின் உதவியினால் 50 ஏக்கர் நிலம் பண்படுத்தப் பட்டுள்ளது.

சுமார் 15 ஏக்கர் நிலத்தில் 1 500 பழ மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. 2,493 வேறு பல மரங்களும் நடப்பட்டுள்ளன. 37 ஏக்கர் நிலம் கிணற்றுப் பாசன வசதியைப் பெற்றது. 135 ஏக்கர் இறைப்புக் குழாய்களால் நீர்வசதி பெற்று இருக்கின்றது. மரம்நடு விழாவிற்காக ரூ. 105 உதவியாக அளிக்கப் பட்டுள்ளது. யாவற்றிற்கும் மேலாக 9 மாதிரிப்பண்ணைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. குடியானவர் விரைந்து புதிய முறைகளை மேற்கொண்டு பயனடைவதற்கு இவை மிகவும் பயன்படுகின்றன.

ஒரு பொலிக்காளையும், பதினைந்து பொலிக்கடாக்களும் வழங்கப் பட்டிருக்கின்றன. 22 உயர்ந்த சாதிச் சேவல்களும் விநியோகிக்கப் பட்டுள்ளன. 1,380 கால்நடைகளுக்கு ஊசி போடப் பட்டுள்ளது. 1,892 கோழி முதலிய பறவைகளுக்கு அம்மை குத்தப்பட்டன. 87 கால் நடைகள் மருத்துவ வசதி பெற்றுள்ளன.

கூடி விளையாடு பாப்பா

புதிய கிணறுகள் தோண்டவும், இருப்பனவற்றையே ஆழப்படுத்தவும், இறைப்புக்குழாய்கள் அமைக்கவும், 51 பேருக்கு கடனுதவி தரப்பட்டுள்ளது.

சுகாதாரத்தைப் பேணுவதற்காக 105 மலக்கழிவிடங்கள் கட்டப்பட்டுள்ளன. கிருமிகளின் உறைவிடமாக இருந்த இரண்டு குட்டைகள் தூர்க்கப்பட்டன. நீரைப்போக்குவதற்காக 293 ஒதுக்கிடக்குழிகள் தோண்டப்பட்டுள்ளன.

பள்ளிப் பிள்ளைகளுக்கு 20 விளையாட்டுக் கருவிகள் (Park materials) வாங்கித் தரப்பட்டன. பள்ளிக்கட்டிடம் ஒன்று புதுப்பிக்கப் பட்டுள்ளது. ஒரு சமுதாய மன்றம் (Community Hall) கட்டப் பட்டது. பள்ளிக் கட்டிடம் ஒன்று புதிதாக எழும்பி வருகின்றது. 28 மாலை நேரப் பள்ளிக்கூடங்கள் தொடங்கப்பட்டு அவற்றில் 699 மாணவர்கள் பயிலுகின்றனர். 20 சமுதாயக்கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. 7 பொதுமக்கள் ஓய்வு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இரு மாதர் சங்கங்கள் துவக்கப்பட்டு, அங்கு பலவகை கைத்தொழில்கள் கற்றுக் கொடுக்கப் படுகின்றன. இரண்டு வேளாண் இளைஞர் கழகங்கள்

(Young Farmers Club) இங்கு உள்ளன். கோழிப்பண்ணைகளும் அவற்ருேடு இணைந்திருக்கின்றன. கல்விநாள், பிள்ளைகள் நலநாள், பால் மிகுப்புநாள், தாழ்த்தப்பட்டோர் நலநாள் ஆகிய பல நாட்களும் கொண்டாடப்படுவதால் நாட்டுப்புற மக்கள் ஆர்வமும் எழுச்சியும் பெறுவதோடு, பல உண்மைகளையும் உணர்கின்றனர். இந்த வட்டாரத்தில் மட்டும் 30 நூலகங்கள் (Libraries) திறக்கப்பட்டுள்ளன.

இரண்டு கல் தொலைவுக்கு மேல்பாதையும், இரு மதகுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

23 முதலுதவிப் பெட்டிகள் வாங்கி வழங்கப்பட்டன. எண்ணுயிரம் வைடமின் மாத்திரைகளை நாட்டுப்புறத்தாரின் உடல் நலிவைப் போக்கப் பயன்படுத்தினர். உள்ளூர் நிதியால் நடந்துவரும் வள்ளியூர், பனகுடி ஆகிய இடங்களிலுள்ள மருத்துவ விடுதிகளுக்கு ரூ. 475 உதவியாக அளிக்கப்பட்டுள்ளது.

மனைகள் எழுப்ப 20 பேருக்கும், எருப்போட 391 பேருக்கும், கிணறுகள் தோண்ட 19 பேருக்கும் பணம் கடனுகத்தரப்பட்டுள்ளது. இவையே அல்லாமல், வண்டியும் எருதும் வாங்குவதற்காக 11 பேருக்கும், கிணறுகளுக்காக 28 பேருக்கும், தக்காவிக் கடன் தரப்பட்டுள்ளது.

மக்கள் தம் உழைப்பாலும் நிலத்தாலும் செய்த உதவியின் பெறுமானம் முறையே ரூ. 9,854-ம் ரூ. 2,411-ம் ஆகும். பணமாகக் கொடுத்த தொகை ரூ. 994. கடனுதவி நீங்கலாக அரசாங்கம் இந்த வட்டாரத்தில் செலவழித்திருக்கின்ற மொத்தத் தொகை ரூ. 42,050.

கோவில்பட்டி வட்டாரம்

கோயில்பட்டி வட்டத்திலடங்கிய இந்த வட்டாரத்தின் பரப்பளவு 165·64 சதுர மைல்களாகும். இதிலடங்கியுள்ள கிராமங்கள் 49. இவ்வட்டாரத்தின் மக்கள் தொகை

91,727. சுமார் 22,314 குடும்பங்கள் இங்கு உள்ளன. இங்கு விளைவாகும் சிறந்த பயிர்கள் கம்பு, சோளம், பருத்தி, ராகி, மிளகு ஆகியவையாகும். இங்குள்ள விளை நிலத்தின் மொத்தப் பரப்பு 76,372 ஏக்கர்.

இங்குள்ள தொடக்கப்பள்ளிகள் 79 ; உயர்நிலைப்பள்ளிகள் 3 ; மாலை நேரப்பள்ளிகள் 35 ; பேரூர் மன்றங்கள் 2 ; ஊர் அல்லது கிராம மன்றங்கள் 23 ; செய்தி நிலையம் 1 ; கிளை நூலகம் 1 ; கிராம நூலகங்கள் 30.

கடன் நீங்கலாக இந்த வட்டாரத்தில் செலவாகியுள்ள தொகையளவு ரூ. 2,14,716. கடனாகக் கொடுக்கப்பட்டது ரூ. 2,04,200 ஆகும்.

வேலைகளின் முன்னேற்றத்தை இனி விரிவாகக்காண்போம். 360 குப்பைக்குழிகள் தோண்டப் பட்டுள்ளன. அங்கு தயாராகிய எருவின் அளவு 52,584 மணங்காகும். புதுப்பிக்கப் பட்ட எருக்குழிகள் 136. 346,700 மணங்கு குப்பை எரு, 2,400 ஏக்கருக்குப் பயன்பட்டுள்ளது. 2,996 மணங்கு ரசாயன எரு, ஏக்கருக்கு ஒரு மணங்காகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. 63 மணங்கு செஸ்பேனியாவும் 17 மணங்கு வேறு வகையான தழையுரமும் 584 ஏக்கரை வளப்படுத்தியுள்ளன.

நெல், சோளம், பருத்தி இவற்றில் 2,947½ மணங்கு உயர்தர வித்து, 15,387 ஏக்கருக்குப் பயன்படுத்தப்பட்டதில் நல்ல விளைவு கிடைத்துள்ளது.

46 கிராமங்களில் கிராம விதைப்பண்ணைகள் இருக்கின்றன. அவற்றில் பதிவு பெற்றுள்ள குடியானவர் 134 பேர். 472 ஏக்கர், பொறுக்கு விதையினால் நல்லபயனைத் தந்தது.

75 எக்கரில் காய்கறி பயிரிட 23 பவுண்டு விதை கொடுக்கப் பட்டது. 15 எக்கர் பரப்பில் பழவகைகள் உற்பத்தியாயின. 967 பழ மரங்கள் வளர்க்கப் பட்டுள்ளன. எல்லாப் பயிர்களையும் புதிய முறையில் வளர்க்கும் வழி வகைகள் விளக்கிக் காட்டப் பட்டன. 993 எக்கர் நிலத்தோடு 320 குடியானவரும் இதனால் பயன் அடைந்தனர். 112 டணங்கு ரசாயன எரு உதவியாக அளிக்கப்பட்டது. மக்களுக்கு அதன் நன்மை விளக்கிக் கூறப்பட்டது. 151 உழவர் உதவியாக எருவைப்பெற்று பயனுற்றனர். ஜப்பானிய முறையில் 226 எக்கர் நிலம் பயிரிடப்பட்டது. 168 எக்கர் வறுநிலம் வளமுடைய மண்ணாக் கப்பட்டது. இந்த வட்டாரத்திலுள்ள 7,CCO எக்கர் வறிய நிலத்தில், ஆண்டுக்கு 1C0 எக்கர் வேனியில் இவ்வாறு மீட்கப்படும். யந்திரக் கலப்பையால் 83 எக்கர் பயனடைந்தது.

180 எக்கர் பாசன வசதி பெற்றது. 4,586 மரங்கள் புதிதாக நடப்பட்டன. கிருமிகளையும் பூஞ்சைக் காளான்களையும் கொன்று பயிரைக் காப்பதற்காக 133 டணங்கு ரசாயன மருந்து பயன்பட்டது. இதன்மூலம் 2,241 எக்கரிலிருந்த பயிர்கள் நோய்க்கு ஆளாகாமல் பாதுகாக்கப் பட்டுள்ளன.

126 உழவுக் கருவிகளும் 50 தேன் கூடுகளும் உழவருக் குக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. 2C0 மாதிரிப் பண்ணைகள் தொடங்கப் பட்டிருப்பது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும்.

10½ மைல் நீளத்திற்குப் பாதைகளும், 3 மதகுகளும் அமைக்கப் பட்டுள்ளன.

நீரைப் போக்குவதற்கான 240 ஒதுக்கிடக்குழிகள் தோண்டப் பட்டுள்ளன. 90 மலக்கழிவிடங்கள் வட்டார மெங்கும் கட்டப் பட்டுள்ளன. 1,380 அடி நீளத்திற்கு கழிவு நீர்க்கால்கள்

தோண்டப் பட்டுள்ளன. மேலும் 20 குடிநீர்க் கிணறுகள் புதுப்பிக்கப் பட்டும் மூன்று கிணறுகள் புதிதாக வெட்டப்பட்டும் இருக்கின்றன.

கால்நடை வளர்ச்சியிலும் போதிய நோக்கம் செலுத்தப் பட்டுள்ளது. திட்டகாலத்திற்கு முன்பிருந்த பொலி காளைகள் 14; இப்பொழுது இருக்கின்றவை 36. இவை கால் நடைச் செல்வத்தை வளர்க்க பெரிதும் துணை புரிகின்றன.

வில்லிசேரி, எட்டயபுரம் ஆகிய இரண்டு இடங்களிலும் கால்நடை மருத்துவ முதலுதவிச் சாலைகள் உள்ளன. 19 கால்நடை வளர்ப்பு நிலையங்கள் தொடங்கப் பட்டுள்ளன. 214 காளைகள் காயடிக்கப் பட்டன. 1,749 கால் நடைகள் மருத்துவம் பெற்றுள்ளன.

பெருமாள்பட்டி, கீளாசரல், குளத்துள்வைப்பட்டி, உதுப் பட்டி ஆகிய இடங்களில் வேளாண் இளைஞர் மன்றங்கள் இருக்கின்றன.

திட்ட காலத்தில் இந்த வட்டாரத்தில் திறக்கப்பட்ட பள்ளிகள் நான்கு. புதிதாக கட்டப்பட்ட பள்ளிக் கட்டிடங்கள் மூன்று. 35 முதியோர் பள்ளிக்கூடங்களும் தொடங்கப்பட்டன. 18 பொதுமக்கள் ஓய்வு நிலையங்களும் திறக்கப்பட்டுச் செவ்வனே பணியாற்றி வருகின்றன. 25 சமுதாயக் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. புதிதாக நிறுவப்பட்ட 2 மாதர் சங்கங்களும், 3 மாதர் கைத் தொழில் கழகங்களும் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன. 8 இளைஞர் கழகங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. ஐந்து பொதுமக்கள் மன்றங்கள் இங்கு இருக்கின்றன. 76 இடங்களில் கூட்டங்கள் போட்டு மக்களுக்கு நாட்டுப்புற முன்னேற்றங் குறித்து எடுத்து இயம்பியுள்ளனர். 2 பொருட் காட்சிகளும், 1 காய் கறிக் கண்காட்சியும், 14 படக் காட்சிகளும் திட்ட காலத்திற்குள் இந்த வட்டாரத்தில் நிகழ்ந்துள்ளன.



செய்தி அலைகளை எதிர்நோக்கி..

ரேடியோ, நாட்டுப்புற மக்களுக்கு உலக அறிவு புகட்டு வதிலும் அவர்களைப் பல பணிகளிலும் ஊக்குவதிலும் பெருந்தொண்டு புரிந்து வருகிறது. இந்த வட்டாரத்தில் தேசீய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மட்டும் தொடங்கப்பட்ட கிராம ரேடியோ சங்கங்கள் ஐந்தாகும்.

கிராம மக்களுக்கு உதவுவதற்காக வட்டார வளர்ச்சி அலு வலகத்திலேயே ஒரு செய்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. கிளை நூலகம் ஒன்றும் அங்கேயே இருக்கின்றது. மேலும் 30 நூலகங்களும் 20 செய்தி அமைப்புகளும் கிராமங்களெங் கும் நிறுவப் பட்டுள்ளன.

கூட்டுறவின் வளர்ச்சியிலும் இந்த வட்டாரம் பெரிதும் முன்னேறியுள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் மட்டும் திறக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புகள் 81 ஆகும். இவற்றில் 13,479 பேர் உறுப்பினராக உள்ளனர்.

இந்த வட்டாரத்தில் 180 சர்க்காக்கள் பழுது பார்க்கப்பட் டும், 150 புதிய சர்க்காக்கள் வழங்கப்பட்டும் இருக்கின்றன. 12 நூற்புப் போட்டிகள் நடத்தி மக்களை நூல் நூற்பதில் ஊக்குவித் துள்ளனர்.

1,200 பவுண்டு பால் பவுடரும், 20,000 வைட்டமின் மாத்திரைகளும் வழங்கப் பட்டிருத்தலும் குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வாறு நாட்டுப்புற மக்களின் வாழ்வுத் துறைகள் பல வற்றிலும் சிறந்த தொண்டாற்றி, கல்வி, சுகாதாரம், வரு வாய், வாழ்க்கை வசதிகள், பொழுது போக்குகள் முதலிய யாவும் பெருகுமாறு செய்துவரும் தேசீய வளர்ச்சித் திட்டம் மென்மேலும் வளர்ந்துகொண்டே செல்கின்றது. மக்கள் அதன் பயனை உணரத் தலைப்பட்டுள்ளதே அதன் வெற்றிக்கு முக்கிய காரணமாகும்.

நாட்டின் தூய்மை கெடாவண்ணம்..



சமுதாய வளர்ச்சித் திட்டம்

தேசிய வளர்ச்சி வட்டாரங்களில் மேற்கொள்ளப் பட்டது போலவே இங்கும் நாட்டுப்புற மக்களின் முன்னேற்றத்திற் கான பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. 1953-ஆம் ஆண்டில் தேசிய வளர்ச்சி வட்டாரமாகத் தொடங்கிய சங்க ரன்கோயில் வட்டாரம், 1955-ஆம் ஆண்டில் சமுதாய வளர்ச் சித் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது.

சேரன்மாதேவி வட்டாரம் 1953-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ஆம் தேதியிலிருந்து செயல்பட்டு வருகிறது. சேரன் மாதேவி, மேலவாசல் கோட்டங்களிலுள்ள (Firkas) கிரா மங்கள் பூராவும் இவ்வட்டாரத்தில் அடங்கியுள்ளன. மே லும் அம்பாசமுத்திரம் கோட்டத்தில் 6-ம், பாப்பக்குடிக் கோட்டத்தில் 12-ம் ஆக மொத்தம் 55 கிராமங்களை இது கொண்டுள்ளது. 121·12 சதுர மைல் பரப்பும் 106,550 மக்கள் தொகையும் கொண்டது. குருவிக்குளம் வட்டார மும், சேரன்மாதேவி வட்டாரம் நிறுவப்பட்ட அதே காலத் திலேதான் நடைமுறைக்கு வந்தது.

கால்நடை வளர்ச்சி, வேளாண்மை, சமூகக் கல்வி, சுகா தாரம், பொறியியல் (Engineering), கூட்டுறவு முதலிய பல துறையிலும் இந்த வட்டாரங்கள் அடைந்துள்ள முன் னேற்றங்களைத் தொகுதியாகக் காண்போம்.

எருக்குழிகளின் பயனைக்குறித்து முன்னரே கூறியுள் ளோம். இந்த வட்டாரங்களில் முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் அமைக்கப்பட்டுள்ள எருக்குழிகள் 2,977. இவை களில் தயாரிக்கப்பட்ட எருவின் அளவு 14,750½ டன்களாகும். இவற்றோடு 36,399 மணங்கு ரஸாயன உரமும் உழவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

பொறுக்கு விதைகள் உழவருக்குப் பெருமளவில் பயன் பட்டன. 7,363 மணங்கு உயர்தர விதைகளை உழவர் பயன் படுத்தி யுள்ளனர்.

புது முறை உழவுக் கருவிகளும் உழவருக்கு வழங்கப் பட்டன. சுமார் 161 புதிய கருவிகள் இந்த வட்டாரங்களில் வழங்கப் பட்டுள்ளன. கருவிகளை வழங்குவதோ, விதைகளை அளிப்பதோ, அந்த அளவோடு நின்று விட்டால் ஒரு பயனும் விளையாது. நம் உழவருக்கு அவற்றைப் பயன்படுத்தும் முறைகளைக் கற்பிப்பதோடு, அவற்றால் நல்ல பயன் உண்டு என்பதை அவர்கள் கண் முன் மெய்ப்பித்தும் காட்டவேண்டும். எதையும் எளிதில் நம்பி விடுபவர்கள் எனப் பொதுவாக நம்மைப் பற்றிக் கூறப்படும் செய்தி, இதைப் பொறுத்த மட்டிலும் தவறு உடையதே. எனவே மாதிரி முயற்சிகள் மிக மிக இன்றியமையாதன. இந்த வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய முயற்சி கள் 3,436. இவை அனைத்து முதல் திட்டகாலத்திற்குள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன.

உடலுக்குச் சத்தூட்டும் காய்கறிகள், உடல் நலத்துக்கு எவ் வளவு இன்றியமையாதவை என்பது யாவருக்கும் தெரிந்தது. நமது கொல்லைப் புறங்களிலும், வாசல் ஓரங்களிலும் கூட காய்கறிச் செடிகளைப் பயிரிட்டு வளர்ப்பது நல்லது. இந்த வட்டாரங்களில் 6,747·98 ஏக்கரில் காய்கறிச் செடிகள் வளர்க் கப்பட்டுள்ளன. 89,269 ஏக்கரில் பலவேறு மர வகைகள் பயிர் செய்யப் பட்டுள்ளன.

உயர்தரக் கால்நடைகள், கால்நடைச் செல்வத்தை வளர்க் கப் பெரிதும் துணைபுரிகின்றன. எனவே அத்தகைய 15 கால்நடைகள் இந்தப் பகுதிகளுக்கு வழங்கப் பட்டுள்ளன. இங்குள்ள மருத்துவ சாலைகளில் 14,446 கால் நடைகளுக்கு

மருத்துவம் பார்க்கப் பட்டது. 218 கால்நடைகள் செயற்கை முறையில் கருத்தரிக்குமாறு செய்யப்பட்டன. காயடிக்கப் பட்ட காளைகள் 5,619. புழுநீக்கி சுத்தம் செய்யப்பட்ட ஆடுகள் 7,030. மேலும் 6,209 ஆடுகள் பேன் முதலியவை நீக்கிச் சுத்தமாக்கப் பட்டன. புழு நீக்கல், பேன் போக்கல் ஆகிய இச்செயல்கள் மிக மிக இன்றியமையாதன. இவைகளை அப்படியே விட்டுவிடுவதால் ஆடுகள் சரியானபடி வளர்வ தில்லை. அன்றியும் அடிக்கடி நோய்வாய்ப் படுகின்றன. சிலபோது மந்தை மந்தையாக ஆடுகள் மடிவது உழவரைத் துன்பத்துக்கு ஆளாக்கும். அத்தகைய கொடுமைகள் நேரா வண்ணம் தடுப்பதற்கு, அடிக்கடி கால் நடைகளின் உடல் நலத்திலே கருத்தைச், செலுத்துதல் இன்றியமையாதது.

ஊசி போடப்பட்ட கால் நடைகள் 50,406 ; கோழி முதலிய பறவைகள் 8,381.

இனவிருத்திக்காக வழங்கப்பட்ட மீன்குஞ்சுகள் 10,557. கோழிப் பண்ணை ஒன்றும் நிறுவப் பட்டுள்ளது.

ஊருணிகளின் பயன் உரைக்க வேண்டாதது. 46 புதுக் கிணறுகள் தோண்டியும், 70 பழங்கிணறுகளைப் புதுப்பித்தும் உள்ளனர். சுகாதாரத்திற்கு மலக்கழிவிடங்கள் இன்றியமை யாதன அல்லவா ? 144 மலக்கழிவிடங்கள் புதிதாகக் கட்டப் பட்டன. கழிவுநீர் தேங்கினால் என்ன ஆகும் ? அவ் வாறு தேங்காமல் அவை ஓடிச் செல்லுவதற்காக 1,257 அடி நீளத்திற்குக் கழிநீர்க் கால்வாய்கள் தோண்டப்பட்டி ருக்கின்றன. நீர் ஓடிச் சென்று விழுவதற்கான ஒதுக்கிடக் குழிகள் 951 வெட்டப் பட்டுள்ளன.

இவ்வாறு பலவித சுற்றுப்புறச் சுத்தத்தினால் சுகாதாரம் நன்கு பேணப்பட்டது. தொத்து நோய்கள் பரவாம லிருக்க மக்களுக்குத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. திட்ட காலத்

திற்குள் இவ்விடங்களில் 1,845 பேருக்கு ஊசிகள் போடப்பட்டுள்ளன. புதிதாகத் திறக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளும், டிஸ்பென்ஸரிகளும் 6. 631 பேர் இவைகளில் மருத்துவம் பெற்றுள்ளனர்.

கல்விச் சாலைகளும், நூலகங்களும், படிப்பகங்களும், பல்வேறு சங்கங்களும் நிறுவி, மக்களின் அறிவு வளர அரும்பணியாற்றினர். புதிதாகத் திறக்கப்பட்ட பள்ளிகள் 118. முதியோர் கல்விக்காகப் புதிதாகத் தொடங்கப்பட்ட நிலையங்கள் 139. கல்வியறிவு பெற்ற முதியோரின் எண்ணிக்கை 1,222.. இதுபோக 893 முதியோர் பயிற்சியில் உள்ளனர். கிராம நூலகம் ஒன்று நிறுவப் பட்டுள்ளது. இளைஞர் சங்கங்கள் எட்டும், பாலர் சங்கங்கள் பதினொன்கும், வேளாண் இளைஞர் சங்கங்கள் ஏழும் உள்ளன. 15 மாதர் சங்கங்களும் உள்ளன.

முதியோருக்குப் படிக்க வசதி

இவற்றோடு மாதர் கைத்தொழில் பயிற்சி நிலையமொன்றும் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றது. சமூகப் பணி செய்யும் கூட்டமைப்புகள் நான்கு அமைக்கப் பட்டுள்ளன.

கிராம மக்கள் கூடியிருந்து பொழுது போக்குவதற்கும், ரேடியோ மூலம் நாட்டின் நடப்பை அறிவதற்கும் பலவேறு வசதிகள் செய்யப் பட்டுள்ளன. ரேடியோ கேட்கும் குழாங்கள் (Radio listening groups) 26 உள்ளன. மக்கள் கலந்து மகிழ்வுடன் பொழுது போக்குவதற்காகத் திறக்கப் பட்டுள்ள பொது நிலையங்கள் 67.

பாதை போடுதலும் போதிய கவனத்தைப் பெற்றது. 4½ மைல் நீளமுள்ள பக்காப் பாதை (Pucca roads) 23·34 ஏகரில் போடப்பட்டுள்ளது. பாதைகளின் குறுக்கே பாதையை அரிக்காமல் நீர் கடப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள மதகுகள் 41. 29½ மைலுக்குப் புதிதாகக் கச்சாப் பாதையும் போடப் பட்டுள்ளது.

கூட்டுறவு அமைப்புகளால் விளையும் பெரும் பயனை விளக்கத் தேவையில்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவுகள் பெரும் வளர்ச்சி பெற்றுள்ளன. இந்த மாவட்டத்தில் உள்ள சமுதாய நலத்திட்ட வட்டாரங்களில் மட்டும் 30 புதிய அமைப்புகள் தோன்றியுள்ளன. புதிதாகச் சேர்ந்துள்ள உறுப்பினர் 1,969 பேராவர். இக்கூட்டுறவுகளின் மூலம் பெருந் தொகை கடனாக வழங்கப்படுகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2,13,497 ரூபாய் இவ்விதம் வழங்கப் பட்டுள்ளது.

இவ்விதம் பல துறையிலும் முன்னேறிவரும் நாட்டுப்புற வளர்ச்சியை மேலும் விரிவுபடுத்தவும், விரைவு படுத்தவும், அரசாங்கம் விரும்புகின்றது. முன்பு தரப்பட்டதினும் சிறப்பான இடம் இரண்டாவது திட்டத்தில் இதற்குத் தரப்படவிருக்கின்றது.

நாட்டுப்புற மக்களை உலகோடு தொடர்புகொள்ளச் செய்வனவற்றுள் பாதைகளுக்குச் சிறப்பான பங்குண்டு. எனவே இம்மாவட்டத்தில் அத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைக்கண்டு பிறகு மேலே செல்லுவோம்.

போக்கு வரத்தும் பிற தொடர்பும்

தபால் தந்தி போக்குவரத்து ஆகியவை, ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு எவ்வளவு இன்றியமையாதன என்று கூறத் தேவையில்லை. அட்டில்சாலை யன்றிப் புற உலகம் அறியாத எண்ணற்ற பாரத மாதரைப்போல, நமது இந்திய நாட்டின் நாட்டுப் புறங்களும் நலிந்துபோகக் காரணம் பிறவுலகத்தோடு அவைகளுக்குத் தொடர்பின்மையே என்று கூறலாம். எனவே போக்குவரத்து வளர்ச்சியென்பது, நூற்றுக்கு 78 பங்கு நாட்டுப்புறமாகவுள்ள நமது மாநிலத்தைப் பொறுத்த மட்டில், நாட்டுப்புற வளர்ச்சியோடு சேர்த்து எண்ணப்பட வேண்டிய ஒன்றாகும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மாநிலத்தில் இதற்கு ஒதுக்கப்பட்ட தொகை 358 லட்சம் ரூபாயாகும். இரண்டாவது திட்டத்தில் இன்னும் அதிகமாக ஒதுக்கப்படும். 807·50 லட்சம் ரூபாய் இதற்குச் செலவிடப்படலாம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில் இம் மாநிலத்திலிருந்த பாதைகளின் மொத்த நீளம் 23,626 மைல். திட்ட காலத்தின் இறுதியில் 26,400 மைலாக இது அதிகரித்திருக்கிறது. 158 பெரிய பாலங்களும், 241 சிறிய பாலங்களும் இக்குறுகிய கால எல்லைக்குள் கட்டப் பட்டிருக்கின்றன.

திருநெல்வேலி மாவட்டத்தில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில் இருந்த பாதைகளின் மொத்த நீளம் 1,537 மைல்களாகும். திட்ட காலத்தில் புதிதாகப் போடப்பட்ட பாதைகளின் நீளம் 566 மைல்கள். எனவே

இன்று அங்குள்ள பாதைகளின் மொத்த நீளம் 2,103 மைல் களாகும். நூற்றுக்குச் சுமார் 30 பங்குக்கு மேலாக பாதைக ளின் நீளம் மிகுந்திருப்பதைப் பார்க்கலாம். 566 மைல்களுள் 200 மைல்கள் பெரிய பாதைகளாகும். எஞ்சியவற்றுள் 235 மைல்கள் உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ்ப் போடப் பட்டவை. 200 கல் நீளப் பெரிய பாதைகள் போக மீதமிருக்கும் 366 மைல்களும் நாட்டுப்புறத்தில் போடப்பட் டுள்ள பாதைகளே என்பது குறிப்பிடத்தக்கது. சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2 லட்சம் ரூபாயும், உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 4·4 லட்ச ரூபாயும் இவற்றிற் காக செலவிடப் பட்டுள்ளன.

மேலும் இந்த மாவட்டத்தில், வறுமை நீக்க வேலை களில் ரூ. 21·05 லட்சம் செலவாகியது. தொடர்ச்சியாக பருவம் பொய்த்த பகுதிகளிலே தான் இப்பொருள் செல விடப்பட்டது. சிறப்பாகப் பாதைகள் போடுவதற்கும், பாதைகளுக்குக் கப்பிக்கல் இடுவதற்குமே இத்தொகை பயன் படுத்தப் பட்டுள்ளது. திருச்செந்தூர், கோயில்பட்டி, நாங்கு னேரி ஆகிய வட்டங்கள் இதனால் பயன் பெற்றுள்ளன.

தபால் தந்தித் துறையும் இம்மாவட்டத்தில் சென்ற ஐந்து ஆண்டுகளில் மிகவும் விரிவாக்கப் பட்டுள்ளது. உதவித் தபால் அலுவலகங்கள் இருபத்தேழும், கிளைத்தபால் அலு வலகங்கள் நூற்றுத் தொண்ணூற்று ஒன்றும் புதிதாகத் திறக்கப் பட்டுள்ளன. மேலும் இந்த மாவட்டத்தில் ஐந்து தந்தி அலுவலகங்கள் புதிதாக நிறுவப் பட்டுள்ளன. பதி னாறு தொலைபேசி அலுவலகங்களும் திட்ட காலத்தில் புதி தாகத் திறக்கப் பட்டுள்ளன.

இவ்வாறு நாட்டுப்புறங்களைப் பல வகையிலும் புறவுல கோடு தொடர்பு படுத்துவதில், தேசீய வளர்ச்சித் திட்டம், சமுதாய நலத் திட்டம், சமுதாய வளர்ச்சித் திட்டம்,

உள்ளூர் வளர்ச்சித் திட்டம் ஆகியவை முனைந்து நிற்கின் றன. நம் அரசாங்கத்தின் பாதைத் துறையும் விரைந்து பணியாற்றி வருகின்றது. இன்றுள்ள நிலையிலேயே நோக்கி னும் நமது மாநிலமே, இந்தியாவில், இத்துறையில் முதலிடம் வகிக்கிறது என்பது நமக்குப் பெருமையும் சிறப் பும் அளிப்பதாகும்.

இனி, நாட்டுப்புறத்தின் வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குவன ஊராட்சிமன்றங்கள். மக்கள் எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறார்கள் என்பதைக் காட்டும் கண்ணாடி யாக இருப்பவை அவைகளே. எனவே அவைகளைப் பற்றிச் சிறிது விளக்கமாகக் காணுவோம்.

ஊர் ஆட்சி மன்றங்கள்

ஊர்மன்ற ஆட்சி முறையே இந்த நாட்டின் அரசியல் முறையாக நெடுங்காலம் இருந்து வந்துள்ளது. இந்திய வரலாற்றில், பல விடங்களில் அரசியலில் குழப்பம் நிகழ்ந் துள்ள போதும் நாடு அதிகமாகக் கலக்கத்திற்கு ஆளாகாமல் வாழ்ந்துள்ள நிலைகளைக் காணலாம். இதற்குக் காரணம் அக்காலத்தில் ஆட்சி முழுவதும் ஊர்களிலுள்ள மக்கள் கையிலேயே இருந்ததே யாகும். தமிழகத்தில் இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்பே மன்றங்கள் தோன்றியுள்ளன. மன்றம் என்ற இந்தச் சொல்லே மிகப் பழங்காலந்தொட்டு நம் மொழியிலுள்ள ஒரு தமிழ்ச் சொல். தேர்தல் முறை கூட அன்று இருந்துள்ளது என்பது அகநானூறு என்னும் பழந்தமிழ்க் கவிதை நூலிலிருந்து தெரிய வருகிறது. தேர்தல் நடத்தும் அலுவலரை (Election Officers) பழந் தமிழகத்தில் ஆவண மக்கள் என்று அழைத்துள்ளனர்.

இத்தகைய கிராம ஆட்சி அல்லது மன்ற முறையே சிறந்தது ; அதுவே நம் நாட்டுக்கு ஏற்றது என்பதை நமது

அண்ணல் காந்தியடிகளும் வற்புறுத்திக் கூறியுள்ளார். அதற்கேற்பவே அரசாங்கமும் அதில் தனிக்கவனம் செலுத்தி வருகின்றது.

1950-ல் கொண்டுவரப்பட்ட சென்னை ஊர் ஆட்சி மன்றச் சட்டம், 1951-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைக்கு வந்தது. அதன்படி 500-க்குக் குறையாமல் மக்களைக் கொண்டிருக்கின்ற எல்லா கிராமங்களிலும் மன்ற ஆட்சி நிறுவப்படும். இவை இரண்டாந்தர மன்றங்களாகும். 10,000 ரூபாய் வருமானமும் 5,000-க்குக் குறையாமல் மக்கள் தொகையும் உள்ள கிராமங்களில் நடைபெறும் ஆட்சி மன்றங்கள் முதல் தர மன்றங்களாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் முதல் தர மன்றங்கள் முப்பத்தேழும், இரண்டாந்தர மன்றங்கள் இருநூற்று எழுபதும் இன்று இருக்கின்றன. இன்னும் ஓரிரு ஆண்டுகளுக்குள் மாவட்டத்திலுள்ள கிராமங்கள் அனைத்திலுமே மன்றங்கள் ஏற்படுத்தப் பட்டுவிடும்.

நாட்டுப்புறத்தில் மக்கள் தம் முயற்சிகளாலேயே முன்னேறுவதைக் காட்டுகின்ற கண்ணாடியாக இருப்பது மன்ற ஆட்சிகளின் பெருக்கமே. கடந்த ஐந்தாண்டுகளிலும் இம்மன்றங்களில் நடந்தேறியுள்ள பணிகளை விளக்கமாகக் காணுவோம்.

1951–52-ஆம் ஆண்டில்

ஐந்து புதுப்பாதைகள் போடப்பட்டன. அவற்றின் மொத்த நீளம் 348 மைல். 11 மதகுகளும், 3 பாலங்களும் கட்டப்பட்டுள்ளன. இவற்றிற்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 2,22,185. 11 மன்றங்களில் மின்சார மிடப்பட்டது. அதற்காகிய செலவு ரூ. 1,81,707. போடப்பட்ட மின்சார விளக்குகள் 1,255.

இந்த ஆண்டில் 600 பள்ளிகள் இருந்தன. 35 மன்றங்களில் நூலகங்களும், 75 மன்றங்களில் படிப்பகங்களும் இருந்தன. 16,554 புதிய புத்தகங்கள் வாங்கப்பட்டன. சுகாதாரத்திற்காக மன்றங்களில் செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 47,543. குடி நீருக்காகத் தனியே 1,21,510 ரூபாய் செலவாகி யுள்ளது.

1952–53-ஆம் ஆண்டில்

872 மைல் நீளத்திற்குப் பாதையும், ஐந்து மதகுகளும், ஐந்து பாலங்களும், அமைக்கப் பட்டுள்ளன. செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 2,40,345. பன்னிரண்டு ஆட்சிமன்றங்களில் மின்சாரம் போடப்பட்டது. 2,691 மின்சார விளக்குகள் போடப்பட்டுள்ளன. 2,46,096 ரூபாய் இதற்குச் செலவாகியுள்ளது.

இந்த ஆண்டில் 722 பள்ளிகள் மன்றங்களின் கீழ் இருந்தன. 48 ஆட்சி மன்றங்கள் நூலகங்களைப் பெற்றிருந்தன. 94 மன்றங்கள் படிப்பகங்களைக் கொண்டிருந்தன. இவ்வாண்டில் வாங்கப்பட்ட புத்தகங்கள் 21,576 ஆகும்.

சுகாதாரத்திற்காக 41,580 ரூபாய் செலவழிந் துள்ளது. குடிநீர் வசதி செய்வதற்காக ஆகிய செலவு ரூ. 1,62,589. இரண்டு மன்றங்களில் தண்ணீர்த் தாங்கிகள் எழுப்பி அதன் மீது நீர்த் தொட்டிகள் அமைப்பதற்காக 15,938 ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

1953–54-ஆம் ஆண்டில்

இருபத்தினன்கு ஆட்சிமன்றங்களில் பாதை வேலை சிறப்பாக நடைபெற்றது. 872 மைல் நீளத்திற்குப் புதுப் பாதை போடப்பட்டது. 20 மதகுகளும் கட்டப்பட்டன. இவற்றின் செலவு ரூ. 1,98,664.

பதினைந்து ஊர் ஆட்சி மன்றங்களில் முதன் முதலாக மின்சார வசதி கிடைத்தது. 3,414 மின்சார விளக்குகள் போடப்பட்டன. மொத்த செலவு ரூ. 2,91,087.

இந்த ஆண்டில் கிராம ஆட்சி மன்றங்களின் கீழிருந்த பள்ளிகளின் எண்ணிக்கை 811. 66 மன்றங்களில் நூல கங்களும், 117 மன்றங்களில் படிப்பகங்களும் இருந்தன. 25,961 புத்தகங்கள் புதிதாக வாங்கப்பட்டன.

சுகாதாரத்திற்குச் செலவிடப் பட்டுள்ள தொகை ரூ. 51,203. குடிநீர் வசதி செய்வதில் 2,23,766 ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

1954–55-ஆம் ஆண்டில்

நாற்பத்திரண்டு ஆட்சி மன்றங்களில் பாதைபோடும் வேலை நடைபெற்றது. 939 மைல் நீளத்திற்குப் பாதை போடப் பட்டது. 2,80,965 ரூபாய் செலவு செலவாகியது.

மின்சாரம் இவ்வாண்டில் 10 ஊர் ஆட்சி மன்றங்களில் இடம் பெற்றது. 5,879 மின் விளக்குகள் ஒளிவீச, 3,04,256 ரூபாய் செலவாகி யுள்ளது.

ஆட்சி மன்றங்களின் கீழிருந்த பள்ளிகளின் எண்ணிக்கை 838 ஆக உயர்ந்தது. 78 ஊர் ஆட்சி மன்றங்களில் நூலகங்கள் நிறுவப்பட்டிருந்தன. 129 ஊர் ஆட்சி மன்றங் களில் படிப்பகங்கள் இருந்து வந்தன. 27,664 புத்தகங்கள் புதிதாக வாங்கப்பட்டன

சுகாதாரத்திற்குச் செலவிட்டுள்ள தொகை ரூ. 58,891. பத்து ஆட்சிமன்றப் பகுதிகளில், கழிநீர்க் கால்வாய்கள் அமைக்கப் பட்டுள்ளன. குடிநீர் வசதிக்காக ரூ. 1,72,989 செலவு செய்யப்பட்டது.

1955–56-ஆம் ஆண்டில்

திட்டத்தின் இறுதியாண்டில் 42 ஆட்சி மன்றங்கள், பாதைகளும் மதகுகளும் அமைக்கும் பணியில் ஈடுபட்டன. 855 மைலுக்குப் பாதை போடப்பட்டுள்ளது. இதற்கான செலவு ரூ. 1,98,851.

ஒன்பது மன்றங்களில் மின்சார வசதி செய்யப் பட்டுள்ளது. 6,103 மின் விளக்குகள் அப்பகுதிகளில் ஒளி வீசுகின்றன. 3,11,246 ரூபாய் இதில் செலவாகியுள்ளது.

870 பள்ளிகள் இவ்வாண்டில் ஆட்சிமன்றங்களின் கீழ் இயங்கின. நூலகங்கள் 85 மன்றங்களில் இருந்தன. 139 ஆட்சி மன்றங்களில் படிப்பகங்கள் இருந்தன. புதிதாக வாங்கப்பட்ட புத்தகங்கள் 35,619.

கழிவு நீர்க் கால்வாய் முதலிய சுகாதார வளர்ச்சி வேலைகள் 7 மன்றங்களில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. இவற்றிற்கு ஆகியுள்ள செலவு ரூ. 68,371.

1,82,381 ரூபாய் செலவில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

திட்டத்தின் தொடக்க காலத்தில் இருந்த ஆட்சி மன்றங்கள் முதல் ஆண்டில் புதுப்பிக்கப் பட்டன. மேலும் 3 புதிய ஆட்சி மன்றங்களும் அவ்வாண்டில் தோற்று விக்கப்பட்டன. புதுப்பிக்கப்பட்டவை :—

முதல்தர ஆட்சி மன்றங்கள்—37.

இரண்டாந்தர ஆட்சிமன்றங்கள்—168.

1954–55-ஆம் ஆண்டில் 8 புதிய மன்றங்கள் தோற்றுவிக்கப் பட்டன. திட்டக்காலத்தின் இறுதியாண்டில் 91 புதிய ஆட்சி மன்றங்கள் இம்மாவட்டத்தில் துவக்கப்பட்டுள்ளன.

சமுத்தாய நல மன்றம்

பலவேறு சமுதாயத் திட்டங்களாலும், போக்குவரத்துப் பெருக்கத்தாலும், ஊராட்சி மன்றங்களாலும், நாட்டுப்புறம் அடைந்த முன்னேற்றத்தை இதுவரையில் கண்டோம்.

இவையே அல்லாது, சமுதாய நலமன்றம் [Social Welfare Board] இம்மாவட்டத்தில் பல பணிகளைச் செய்திருக்கின்றது. அவைகளைப்பற்றிச் சுருக்கமாக இங்கே காணுவோம்.

அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள சிவசைலத்தில் முதலில் இது தொடங்கப்பட்டது. அவ்விடத்தில் இது நன்கு முளைவிடவே, வேறு பல இடங்களிலும் இப்பணியினைத் தொடங்கினர். பொட்டல்புதூர், ரவணசமுத்திரம், ஆள்வார்குறிச்சி, தேவநல்லூரு, கஸ்தூரிரங்கபுரம் ஆகிய இடங்களில் இவை தொடரப்பட்டன. சுமார் 33,000 மக்களைக் கொண்ட 59 கிராமங்களில் இவை தொண்டாற்று கின்றன.

குழந்தை பராமரிப்பு, அவர்களுக்கு கல்வி புகட்டுதல், கிராமச் சுகாதாரத்தைப் பேணுதல், முதியோர் கல்வி, கைத் தொழில்களை ஊக்குவித்தல், தோட்டம் வளர்த்தலின் மேன்மையைப் புகட்டுதல், மாதர் சங்கங்கள் அமைத்தல் ஆகிய பணிகள், இவைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. மருத்துவ மனைகளும் அங்கங்கே அமைக்கப்பட்டன. மாதர் கல்வி சிறப்பிடம் பெற்றது. 16 பயிற்சி பெற்ற தொண்டர்களும், 6 செவிலியரும், 2 சேவிகைகளும் பிறரும் இப்பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றனர்.

இவை துவங்கப் பட்டதிலிருந்து முதல் ஐந்தாண்டுத் திட்ட கால முடிவுற்குள் 3,05,630 பேருக்கு மருத்துவம் அளித்துள்ளன. 469 பெண்டிற்குக் குழந்தைப் பேற்றின்போது மருத்துவம் செய்யப்பட்டுள்ளது. தெம்பற்ற நிலையில் இருந்த நிறைக் கர்ப்பிணிகள் 4,504 பேரும், புனிறு நீங்காத்தாயர் 2,709 பேரும் நல்ல முறையில் கவனிக்கப் பட்டுள்ளனர்.

அறிவு வளர்ச்சிக்கும் இம்மன்றம் நல்ல தொண்டாற்றி வருகின்றது. 65 முகம்மதிய மாதர், தமிழை எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டனர். சராசரி 55 முதியோர் கல்வி பெற்று வந்துள்ளனர்.

காதி வளர்ப்பிலும் இம்மன்றம் பின்தங்கி விடவில்லை 399 சர்க்காக்கள் இதன் கீழ்வேலை செய்கின்றன. சுமார் 3,000 ரூபாய்க்குக் காதி விற்றதில், 350 ரூபாய் வரையில் லாபம் கிடைத்துள்ளது. பின்னல் வேலை, பூ வேலை ஆகியவைகளில் 246 பேர் தேர்ச்சி பெற்றனர்.

இப்படிப் பல துறையிலும் நுழைந்து பணியாற்றிய சமுதாய நல மன்றம், நாட்டுப்புறத்தின் முன்னேற்றத்தில் பெரும் பங்கு கொண்டு என்றும் பணிபுரியும்.

தையல் தொழில் பயிலும் மகளிர்.





NEMARA PUBLIC LIBR
10 FEB 957
MADRAS

“சாதிக் கொடுமைகள் வேண்டாம்;—அன்பு
தன்னில் செழித்திடும் வையம்;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்;—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்”.

—பாரதியார்.

தாழ்வு . . .
நீங்க !

நிலம் செழிப்பதாலும், நீர் பெருகுவதாலும், வளம் கொழிக்கும் ; நமது வயிறும் கட்டாயம் நிரம்பும். ஆனால் நலம் சிறப்பதற்கு இவை இரண்டும் மட்டுமே போதுமானவை அல்ல. நலம் சிறந்து நாடு உயருவதற்குக் காரணமாக உள்ள மற்றொரு முக்கியத் தேவை, மக்களின் சமன்பாடு. பிறப்பிலே ஏற்றத்தாழ்வு நிலவும் உலகில் மக்கள் பூசலும் பிணக்கும் இல்லாமல் எவ்வாறு வாழமுடியும் ? உள்ளூரக் கலகம் நிகழும் இடத்திலே மேலாக நிலவுவதுபோல் தோன்றும் அமைதி வெறும் கானல் நீரே. இந்த நிலை நீங்கினாலன்றி அமைதி வாழ முடியாது ; அமைதி தவழாத இடத்தில் அறிவு வளராது ; அங்கு எல்லோரும் கூடி இன்புற்றிருக்க நினைப்பது வெறும் குழந்தை நினைப்பு. நமது நாடும் விடுதலைக்கு முன்னர் இத்தகைய நிலையில்தான் இருந்தது. இன்றோ யாவும் பழங்கதை,

தீண்டாமை ஒழிப்பு.

பலவேறு ஏற்றத்தாழ்வுகளுள்ளும் மிகக் கொடியது நமது நாட்டில் நிலவி வந்த தீண்டாமையே. பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் இக்கொடுமை, இந்த நாட்டிலே என்றுதான் தோன்றியதோ தெரியவில்லை. அவ்வப்போது தோன்றிய சான்றோர்கள் இதனை அழித்தொழிக்க எவ்வளவோ முயன்றும், இப்புலை வழக்கம் நீண்டநாள் நம்மிடையே தப்பிப் பிழைத்து வந்தது. வேதாந்தத்தில் திளைக்கின்ற நாம், அறிந்தோ அறியாமலோ தீண்டாமையை நமது நாட்டிலே வாழ விட்டிருந்தோம். பாரத அன்னையின் புனிதக்கைகள் இப்புலை வழக்கால் ஒரு காலத்தில் புலால் நாற்றம் வீசின எனக்கூறலாம்.

இதனை அழித்தொழிக்க முயன்ற முதல்வர் புத்தர்பிரானே. புத்தர் வழி நின்ற அசோகன் இதற்காக அரும் பாடுபட்டான். அதன்பின் தமிழ்மறை தந்த வள்ளுவரைக் காணுகின்றோம். தமக்கேயுள்ள சொல்வன்மையுடன் இவ்வழக்கை வன்மையாக அவர் கண்டித்துள்ளார். அவர் மறைமுகமாகவும் நேரடியாகவும் உயிர்கள் யாவும் ஒப்ப மதிக்கப்பட வேண்டுவன என்று கூறிச் செல்லுகிறார். திருமந்திரம் என்னும் அரும்பெட்டகத்தை உலகுக்கு ஈந்த திருமூலரின் வாக்கு, தமிழறிந்த நாக்கு மறவாத பெருமந்திரம் எனலாம். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும" என்ற தொடர் அறியாத தமிழன் இருக்கமுடியாது. திருமூலருக்குப் பின்னர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஆன்றோர்கள் நாயன்மார்களும் ஆழ்வார்களுமேயாவர்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் செந்நெறி வாழ்ந்து காட்டிய பெரியோர். திருப்பாணாழ்வார்களின் வரலாறு நினைக்க நினைக்க இன்பம் தருவது ; தெவிட்டாத கருத்துக்

கருவூலம். இத்தெய்வச் சான்றோர் இன்னும் நம்மிடையே வாழ்கின்றனர். இவர்களுக்கு விழாவெடுத்துப் போற்று கிறோம்.

இவர்களுக்குப் பின்னரும் பல சான்றோர்கள் இந்த நாட்டிலே—சிறப்பாக தமிழகத்திலே—அவ்வப்போது தோன்றி இந்தக் கொடுமையைத் தொலைக்க முயன்றனர். உத்தரகோச நல்லூர் நங்கை என்ற பெண்மணியார் அத்தகையோருள் ஒருவர். இவர் பாடிய பாட்டுக்கள் சில தமிழ் நாவலர் சரிதை என்னும் நூலில் இருக்கின்றன. “கபிலரகவல்” என்ற தமிழ் நூலும் குறிப்பிடத்தக்கது. பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் முறையை இந்த ஆசிரியர் வன்மையாகக்கிறார்.

அண்ணல் காந்தியின் நெஞ்சத்தில் என்றும் இப்பொல்லாப்பு முள்போல தைத்துக்கொண்டே இருந்தது. இதனை ஒழிக்க அவர் எவ்வளவோ முயன்றார். யாரும் காணாத பெரு வெற்றியும் கண்டார்.

தாழ்த்தப்பட்டோரிடையே காணப்படும் அறியாமையும் வறுமையும், அவர்களின் தாழ்வுக்கு முக்கிய காரணங்களாக இருந்தன. எனவேதான் நமது அரசாங்கம் தாழ்த்தப்பட்டோரின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கெனவே தனித்திட்டம் ஒன்று வகுத்து, அத்துறையில் உழைத்து வருகின்றது. அவர்களின் வாழ்க்கை நிலை உயர உயர, தீண்டாமை அரக்கன் சிறிது சிறிதாக வெந்து, இறுதியில் சாம்பலாகி விடுவான் என்பது திண்ணம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றத்திற்காக நமது மாநிலத்தில் 416 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் 440 லட்ச ரூபாய் திட்டகால

இறுதிக்குள் இத்துறையில் செலவழிந்துள்ளது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் நிறைந்த பலனை நல்கும் என்று திடமாக நம்பலாம். இதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை சுமார் அறுநூறு லட்சம் ரூபாய்களாகும்.

திருநெல்வேலி மாவட்டம் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்துறையில் எய்தியுள்ள முன்னேற்றங்களை மட்டும் இங்கு விரிவாகக் காணுவோம்.

இங்குள்ள பின்தங்கிய வகுப்போரின் மொத்த எண்ணிக்கை **584,704.** இதில் குற்றப்பரம்பரையினர் **(Ex-crimimal tribes) 213,000** பேராவர். தாழ்த்தப்பட்டோரின் கல்விக்கான பள்ளிகள் இந்த மாவட்டத்தில் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன. மாணவர் தொகை 950-லிருந்து 1,008-ஆக உயர்ந்திருக்கிறது. சென்ற ஐந்தாண்டுகளிலும் இப்பள்ளிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ள தொகை விவரம் :—

				ரூ.	அ.	பை.
1951–52	..	..	..	40,958	11	0
1952–53	..	..	..	32,714	15	6
1953–54	..	..	..	41,337	8	0
1954–55	..	..	..	38,410	12	9
1955–56	..	..	..	44,630	8	0

இம்மாணவருக்கான உணவு உறையுள் வசதிகள் குறைவின்றி செய்துதரப்பட்டுள்ளன. திட்டத்தின் தொடக்க காலத்தில், இத்தகைய மாணவரில்லங்கள் 11 இருந்தன. 1953–54-ஆம்



ஆண்டில் அவை பன்னிரண்டாக வளர்ந்து, திட்டத்தின் இறுதியாண்டில் 17 ஆகப் பல்கியுள்ளன. இவ்வில்லங்கள் பண உதவியோடு இயங்கி வருகின்றன. அதன் விவரம் :—

	ரூ.	அ.	பை.
1951–52	54,495	0	0
1952–53	60,840	0	0
1953–54	60,495	0	0
1954–55	58,375	0	0
1955–56	71,328	0	0

முழுவதும் அரசாங்கத்தாலேயே நடத்தப்படும் மாணவ ரில்லம் ஒன்றும் உள்ளது. 1954–55-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த விடுதியில், முதலில் 25 மாணவரைப் பாதுகாத்தனர். அடுத்த ஆண்டில் 70 மாணவர் இவ் வில்லத்தில் பராமரிக்கப்பட்டுள்ளனர். இதற்கு ஆகியுள்ள செலவு :

	ரூ.	அ.	பை.
1954–55	3,594	5	2
1955–56	8,980	11	7

இத்தகைய இல்லங்களில் மாணவரைப் பேணி வளர்ப்ப தோடு நில்லாமல், வீட்டிலேயே தங்கிப் படிக்கும் ஏனைய மாணவருக்கும் பண உதவி, முறையாக அளிக்கப்பட்டு வருகின்றது. ஒதுக்கப்பட்ட வகுப்பினர்க்கென்றும் (Scheduled Castes), பின்தங்கிய வகுப்பினர்க் கென்றும் (Backward classes) தனித்தனியே பொருளுதவி அளிக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் இவ்வாறு தரப்பட்டு வந்த பண உதவியின் அளவைக் கீழே காணலாம் :—

	ஒதுக்கப்பட்ட வகுப்பினர்.			பின்தங்கிய வகுப்பினர்.		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
1951–52	40,630	15	0	34,364	0	0
1952–53	42,675	1	0	34,607	6	0
1953–54	32,081	2	0	10,203	5	0
1954–55	50,299	6	0	28,189	12	6
1955–56	35,489	1	6	23,147	0	0

மறவருக்காக 1952–53-ஆம் ஆண்டில் ஐந்து பள்ளிகள் இருந்தன. இன்று பத்து பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் 761 பிள்ளைகள் கல்வியறிவு பெறுகின்றனர். இப்பிள்ளைகளுக்காக 1952–53-ல் இரண்டு விடுதிகள் இருந்தன. இன்று ஐந்து விடுதிகள் இருக்கின்றன. 219 பிள்ளைகள் இவற்றால் நலம் அடைகின்றனர்.

சுகாதாரம் பற்றி இனிக் காணுவோம். சுகாதாரத்தைப் பற்றி விரிவாக நலம் சிறக்க என்னும் தலைப்பின்கீழ் கூறியிருப்பினும், தாழ்த்தப்பட்டோர் நலத்துக்கெனவே நடந்துள்ள தொண்டுகளை இங்கே காணுவோம்.

நல்ல மனைகள் கட்டித் தந்தமையை முதலில் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். மனிதனின் இன்றியமையாத தேவைகளுள் உணவுக்கும் உடைக்கும் அடுத்தபடியாக உள்ளது உறைவிடமே அல்லவா ? ஒவ்வோராண்டும் நூற்றுக் கணக்கான மனைநிலங்கள் தாழ்த்தப்பட்டோருக்காக வாங்கித் தரப்பட்டுள்ளன. இதன் பயனைக் கடந்த ஐந்து ஆண்டுகளிலும் 1,428 குடும்பங்கள் குடியிருப்பு வசதிபெற்று இனிது உறைகின்றன. இதற்காகச் செலவழிக்கப்பட்டுள்ள தொகை, சுமார் 1,41,190 ரூபாய்களாகும்.

ஒவ்வோராண்டும் வாங்கப்பட்ட மனை நிலங்களும், அதற்காகிய செலவும், தனித்தனியே கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

			மனை நிலங்கள்	செலவு ரூ.	அ.	பை.
1951–52	..	..	195	21,602	10	7
1952–53	..	..	320	34,262	15	4
1953–54	..	..	262	19,597	1	4
1954–55	..	..	302	32,854	13	6
1955–56	..	..	349	32,874	12	2

குடிநீர் வசதி சுகாதாரத்திற்கு மிகவும் இன்றியமையாதது. திட்டத்தின் தொடக்க ஆண்டில் ஐந்து புதுக் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளதோடு, நான்கு பழங் கிணறுகள் செப்பனிடப் பட்டுள்ளன.

பொதுவாக நாட்டுப்புறங்கள் புறவுலகோடு தொடர்பு கொள்வதற்கேற்ற பாதை வசதிகள் இப்பொழுது பெருகி வருகின்றன. சேரிகளுக்கு நல்ல தடம் அமைப்பதில் இந்தத் துறையினர் தம் நோக்கத்தை மிகுதியாகச் செலுத்தினர். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்க ஆண்டில், அதாவது 1951–52-ல், இரண்டு மதகுகளும் ஒரு தடமும் அமைத்துத் தரப்பட்டுள்ளன.

1952–53-ஆம் ஆண்டில் 3 புதுக் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. அதே ஆண்டில் செப்பனிடப்பட்ட பழங் கிணறுகள் 3. குளிப்பறை ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. புதிதாக கட்டப்பட்ட மதகுகள் மூன்றும், வேறு வசதிகள் கருதி வாங்கப்பட்ட 8·17 ஏக்கர் நிலமும், இந்த ஆண்டில் சேரிகளின் வசதிக்காக மேலும் செய்யப்பட்டுள்ள சில பணிகளாகும்.

1953–54-ஆம் ஆண்டில் நான்கு புதிய குளங்கள் தோண்டப்பட்டுள்ளன. புதுப்பிக்கப்பட்ட பழைய கிணறுகள் மூன்று. கட்டப்பட்ட குளிப்பறைகள் இரண்டு. தடவசதி முதலியவை செய்து தருவதற்காக 6·35 ஏக்கர் நிலம் விலைக்கு வாங்கப் பட்டது.

திட்ட காலத்தின் நாலாவது ஆண்டில் நாலு புதுக் கிணறுகள் சேரிகளுக்குத் தீஞ்சுவை நீரைச் சுரந்தன. ஆறு கிணறுகள் செப்பனிடப்பட்டன. இரு பாலங்களும் ஒரு பழம் நடைப் பாலமும் (Foot bridge), ஒரு கழிவு நீர்க் கால்வாயும் இவ்வாண்டில் அமைக்கப்பட்டதோடு, தடவசதி செய்வதற் காக 10.61 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது.

திட்டத்தின் இறுதியாண்டில் 8 மதகுகளும், 1 பாலமும் இரண்டு குளிப்பறைகளும் கட்டப்பட்டது. மேலும் இந்த ஆண்டில் தடவசதி முதலியவற்றிற்காக வாங்கப்பட்ட நிலப்பரப்பு 6·51 ஏக்கராகும்.

குடிநீர், போக்குவரத்து இவைகளுக்குச் செய்யப்பட்டுள்ள வசதிகளைக் கண்டோம். அதற்கு அரசாங்கம் செலவிட்டுள்ள பணத்தின் விவரமும் ஆண்டு விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

		ரூ.	அ.	பை.
1951–52	.. ..	21,888	13	0
1952–53	.. ..	22,918	3	4
1953–54	.. ..	17,284	12	3
1954–55	.. ..	20,413	5	3
1955–56	.. ..	17,808	14	8

1953–54–ஆம் ஆண்டில், ஆறு குடிசைகள் போட்டுத் தருவதற்காக ரூ. 600 செலவாகியது. மற்றும் 6½ ஏக்கர் நிலம் பண்படுத்தப்பட்டு, வேளாண்மைக்காகத் தரப்பட்டுள்ளது. இதற்கு வேண்டிய மற்ற கருவிகளும் வாங்கித் தரப்பட்டுள்ளன. இதற்காக ரூபாய் 1,510 செலவழிந்தது. ஆடை விநியோகிக்க முந்நூற்று முப்பது ரூபாய் செலவிடப்பட்டது. தீண்டாமையைப் போக்க செய்யப்பட்ட செலவு ரூ. 16,500. 51 மேடைகள் இதற்காக நிறுவப்பட்டுள்ளன. மறவர் போன்ற குடியினருக்காக இரு மாணவர் இல்லங்கள், 5 பள்ளிகள், 10 நூலகங்கள், 4 இறைப்புக் குழாய்கள் ஆகிய வசதிகள் செய்துதர ரூ. 28,284 செலவழிந்துள்ளது.

1954–55–ஆம் ஆண்டிலும் இதைப்போலவே பல பணிகள் நடந்தேறி இருக்கின்றன. ஆறு குடிசைகளைச் செப்பனிட 140 ரூபாயும், வேளாண்மைத் தொழிலிலுள்ளோர் நலங்கருதி 2,180 ரூபாயும், தீண்டாமையைப் போக்க 518 ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது. இரண்டு துணை சேவக்குகளும் (Deputy sevaks), ஒரு உதவி சேவக்கும், தீண்டாமை ஒழிப்புக்காக நியமிக்கப்பட்டுள்ளதோடு, மூன்று நாட்டாண்மைக் காரர்களுக்கு, அவர்கள் செய்த சேவையைப் பாராட்டி, தலைக்கு ரூ. 50 மேனியில் பரிசளிக்கப்பட்டது. ஐந்து புதுப் பள்ளிகள், இரு மாணவரில்லங்கள், நான்கு இறைப்புக் குழாய்கள் இவற்றிற்காக 64,304 ரூபாய் செலவாகியுள்ளது. இது சிறப்பாக மறவருக்குச் செய்யப்பட்டதாகும்.

1955–56–ஆம் ஆண்டின் பணிகளைக் காணுவோம். ரூ. 3,000 செலவில் ஆறு நிலையான குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆறு குடும்பங்களுக்கு வேளாண்மை உதவி தரப்பட்டுள்ளது. இதற்காக ரூ.1,080–ம், உடைக்காக

ரூ. 200-ம் செலவாகியுள்ளது. ஒரு உதவி "சேவக்" குடன் மேலும் ஒருவர் இந்த ஆண்டு நியமிக்கப்பட்டார். இவர்கள் யாவருக்குமாக ஆகிய செலவு ரூ. 4,485-9-0. நான்கு மாணவரில்லங்கள், 10 நூலகங்கள், 10 பள்ளிகள், இவற்றின் நிர்வாகத்திற்கு ஆகிய செலவு ரூ. 76,014.

இதுவரையில், இந்த மாவட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் நடந்தேறிய வேலைகளையும், செலவாகியுள்ள பெரும் பொருளை யும் விளக்கமாகப் பார்த்தோம். கடந்த ஐந்தாண்டில் மட்டும் இந்த மாவட்டத்தில் இந்தத் துறை ஒன்றிலேயே செலவாகியுள்ள மொத்தத் தொகை சுமார் பதின்மூன்று லட்சம் ரூபாயாகும்.

இவ்வளவு பணத்தையும் உழைப்பையும் ஊற்றிவரும் அரசாங்கம், தாழ்வை வேரோடு களைந்து எறியத் தளராதத் பிரசாரமும் புரிந்து வருகின்றது. மக்களிடையே தீண்டாமையால் நேரும் கேடுகளைத் தெளிவாக எடுத்து விளக்கி, அவர்கள் மனங்கொள்ளும் வகையில் கருத்துக்களை விளக்கி வருகின்றது.

அமைதி...
நிலை!

" ஆற்ற நல்லறம் அல்லது இலாமையால்
ஏற்றம் அன்றி இழிந்தகவு இல்லையே"

—கம்பராமாயணம், பாலகாண்டம்—நாட்டுப் படலம் 37.

அமைதி . . .
நிலவ் !

"மக்கள் பிறவி எடுத்ததன் பயன் என்ன ? " என்ற ஆராய்ச்சியை உலகம் தோன்றிய காலந்தொடங்கி எத்தனையோ பேர் செய்துள்ளனர். பலரும் பலவிதமாக அதற்கு விடை கண்டும் இருக்கின்றனர். அதன் விளைவாக உள்நாட்டு மக்களுக்குள்ளேயே, கையடியும் வாயடியும் நிலவிய காலங்கள், அநேகமாக எல்லா நாடுகளின் வரலாற்றிலேயும் உண்டு. மறுமை எப்படிப் போனாலும் இம்மையில் மனிதன் வேண்டுவது அமைதியான இன்ப வாழ்வு. மக்கள் எப்பொழுதும் எங்கும் இத்தகைய வாழ்வுக்காகப் போராடுவதைத் தான் காணுகின்றோம்.

ஒரு நாட்டின் அமைதி, அந்த நாட்டின் வளப்பத்தையும் அதைப் பகிர்ந்துண்ண எல்லோருக்கும் தரப்படும் வாய்ப்பையும் பொறுத்தது எனலாம். எனவே ஒரு நாட்டில் அமைதி நிலவுவதற்கு அதன் ஒவ்வொரு துறையும் வளம் பெற்று ஓங்கவேண்டும். அந்த முன்னேற்றத்தில் மக்கள் யாவர்க்கும் சமபங்கு இருக்கவேண்டும். நிலம் கொழிக்க

வேண்டும் ; நீர் பெருகவேண்டும் ; நாடு சிறந்து நலம் உயர வேண்டும். இவை யாவற்றோடும் தொழில் வளம் மிகவேண்டும். தாழ்வு நீங்குதல் அதினினும் மிக முக்கிய மானது. இவையாவும் நிரம்பப் பெற்றால் அமைதி நம்மைத் தேடிவரும். அறிவு துளும்ப, மக்கள் அனைவரும்கூடி இன்புற்றிருக்க இயலும்.

எனவே அமைதிக்கு இன்னதுதான் வேண்டுமென்பதில்லை. யாவுமே வேண்டும். ஆனால் யாவும் போதிய அளவில் வளர்ந்திருக்க வேண்டும். கடந்த ஐந்தாண்டில் நம் மாநிலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் ஒவ்வொரு துறையும் கண்ட முன்னேற்றத்தைத் தனித்தனியே கண்டோம். விடப்பட்டவற்றையும், சிறப்பாக அமைதிக்குத் துணை புரிவனவற்றையும் குறித்து இங்கு சுருக்கமாகக் காணுவோம்.

போலீசார் பற்றி முதலில் கூறுவோம். நாகரிகம் வாய்ந்த எல்லா நாடுகளிலும், ஆரவாரத்தை அடக்கி ஒழுங்கையும் அமைதியையும் உண்டாக்கும் பணியாளர் போலீசார் ஆவர். அமைதியை நிலைநாட்டும் போலீசார் அமைதியுடன் வாழ்வதற்கு முதலில் வழி வகுக்கவேண்டுமல்லவா ? அதற்காக இம்மாவட்டத்தில் நடந்தேறியுள்ள சில வேலைகளைக் காணுவோம். சிறப்பாகக் கூறத்தக்கது குடியிருப்பு வசதி. பாளையங்கோட்டையிலும் கோவில்பட்டியிலும் சிறந்த குடியிருப்புகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன.

பாளையங்கோட்டையில் தலைமைப் போலீசாருக்கான மனைகள் ஆறும், போலீசாருக்கான மனைகள் இருபத்தொன்பதும் கட்டப்பட்டுள்ளன. மேலும் ஜமேதார்களுக்கான மனைகள் நான்கும் அங்கு கட்டப்படுகின்றன. கோயில் பட்டியிலும் இவ்வாறே பல வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இங்கு

புதிதாகக் கட்டியுள்ள தலைமைப் போலீசார் மனைகள் 4; போலீசார் மனைகள் 28.

படைக்காவலர் மறுகில் (Armed Reserve lines) 8,000 ரூபாய் செலவில் பள்ளிக்கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. பூங்கா ஒன்றும் இங்கு உள்ளது. செலவில் பாதி உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டதாகும்.

மேலும் போலீசார், படைக்காவலர் இவர்களின் வருவாயை உயர்த்துவதற்காகவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வருவாய்தரும் பல நல்ல தொழில் வாய்ப்புக்களை அவர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கம் ஏற்படுத்தித் தந்துள்ளது. கரிவலம்வந்தநல்லூர், புளியாங்குடி, பணவடலி ஆகிய ஊர்களிலுள்ள போலீசார் இல்லங்களில் இன்று ராட்டினம் சுழலுகின்றது. கோவில்பட்டி, கழுகுமலை, கடம்பூர்ஆகிய இடங்களில் உள்ள போலீசாரின் குடும்பங்கள், நெருப்புப் பொட்டிகள், குச்சிகள் ஆகியவை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அக்குடும்பங்களுக்கு நல்ல வருவாய் கிடைப்பதால், வாழ்க்கைப் போராட்டம் ஓரளவு தணிகின்றது. வேண்டிய மூலப்பொருள்களைத் தொழிற்சாலைகளிலிருந்து பெறுவதற்கான ஏற்பாடுகள் உள்ளன.

போலீசாருக்கு உறையுள் வசதிகள் செய்திருப்பதுபற்றி சுருக்கமாகக் கண்டோம். உறைவிடங்கள் அவர்களுக்கு மட்டுமின்றி மக்கள் யாவருக்குமே அவை வேண்டுவனவே அல்லவா ?

வீடுகளைப்பற்றித் திருவள்ளுவர் ஓரிடத்தில் கூறுகிறார். ஒரு காதலனும் காதலியும் தழுவிக் கொள்ளுவதற்கு உவமை கூற வருகின்ற வள்ளுவர், ஒருவன் தன் உழைப்பால் ஈட்டிய பொருளைப் பிறரோடு பகிர்ந்து, தன்னுடைய வீட்டிலே இருந்து உண்பதால் பெறுகின்ற இன்பத்தைப்போலே

அது இருக்கும் என்கிறார். காதலால் பெறும் உவகைக்குக் கூறும் இந்த உவமையில் அவர் குறிப்பிடும் வீடுதான் நமக்கு வேண்டியது. தன்னுடைய வீடு என்று அழுத்தமாகக் கூறுகிறார். " தம்மில் இருந்து" என்பது அவருடைய வாய்மொழி.

இதிலும் நமது அரசாங்கம் போதிய கவனம் செலுத்தியிருப்பது, மக்கள் நல்வாழ்வுக்கு வேண்டிய ஒவ்வொரு துறையையும் முன்னேற்ற வேண்டும் என்ற அதன் ஆர்வத்தையே குறிக்கின்றது.

மனையெழுப்பும் வேலை பெரும்பாலும் கூட்டுறவுகளாலேயே மேற்கொள்ளப்பட்டது. மனையமைக்கும் கூட்டுறவுச் சங்கங்களில் பலவகையுண்டு. திட்டத்தின் தொடக்க காலத்தில் இந்த மாவட்டத்தில் இருந்த இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் 7. திட்டத்தின் முடிவில் இச்சங்கங்கள் பத்து ஆயின. இப்பொழுது இவற்றில் இருக்கும் உறுப்பினர் 470 பேர். அவர்களின் பங்குத் தொகை ரூ. 2,16,249. ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்ட காலத்திலோ உறுப்பினர் 405 பேராகவும், பங்குத்தொகை 2,02,665 ரூபாயாகவும் இருந்தது. அரசாங்கம் இச்சங்கஙளுக்குத் தாராளமாகக் கடனுதவி அளித்தது. இவைகளால் சென்ற ஐந்தாண்டுகளில் கட்டப்பட்டுள்ள மனைகள் 98. சுமார் நூறு குடும்பங்கள் ' தம்மில் இருந்து ' உண்ணும் பேறு பெற்றுள்ளன என்னலாம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நடந்த மற்றொரு பணி மிகவும் குறிப்பிடத்தக்கது. வீரத்தமிழர் உறைவிடம் என்பதற் கேற்ப, உலகப்போர் நடைபெற்ற காலத்தில் இம் மாவட்டத்து மக்கள் மிகுதியாகப் படையில் சேர்ந்தனர். தற் காப்புக்காக அப்பொழுது அமைக்கப்பட்ட படையில், சென்னை

மாநிலத்தில், மூன்ருவது இடத்தைப்பெற்றது இந்த மாவட்டமே. போரின் முடிவு வெற்றி ஆயினும், வெற்றியும் துன்பம் தருவதே அல்லவா ? தனக்கு உரிய பலியைப் பெற்ற பிறகல்லவா கொற்றவை அருள்பாலிப்பாள் ?

உயிரிழந்தோரின் குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பையும், உடல் ஊனமுற்றவர்களுக்கு மருத்துவம் நல்கும் பணியையும், வேலையிழந்தவர்களுக்கு உழைக்கும் வாய்ப்பு அளிக்கவேண்டிய கடமையும் நமது அரசாங்கம் மேற்கொண்டது. வீரப்பரம்பரையை மிகுதியாகப் பெற்றுத் தந்த நெல்லை மாவட்டத்திற்கே இத்துறையில் அதிக நோக்கம் செலுத்த வேண்டியதாயிற்று. 1,144 பேர், உழைக்கும் திறனற்று உதவித்தொகை பெற்று வாழ்கின்றனர். இவ்வாறு மாத உதவி பெறும் குடும்பங்கள் 628 ஆகும். மேலும் 491 ஆட்களிடமிருந்து பண உதவி வேண்டி விண்ணப்பங்கள் வந்தன. அவ் விண்ணப்பங்கள் உடனே நேரடியாகச் சென்று கவனிக்கப் பட்டன. அதன் விளைவாக 388 பேர் இன்று பணஉதவி பெறுகின்றனர். பாளையங்கோட்டையிலுள்ள மருத்துவ விடுதியில் 523 வீரர்கள் மருத்துவம் பெற்றுள்ளனர்.

சென்னை மாநிலப் பழைய வீரர் உதவி நிதி, மத்தியப்படை நல நிதி, சர் விக்டர் ஸஸோான் நிதி, கொடி நாள் நிதி (Flag Day Fund), இந்தியன் பாங்கு உதவி நிதி ஆகிய நிதிகளிலிருந்து மேற்குறித்த ஏற்பாடுகளுக்கான செலவுகள் செய்யப்படுகின்றன. மேலும் மத்திய அரசும் இதற்காக அவ்வப்போது பொருளுதவி அளிக்கின்றது.

• ஊனமடைந்த 41 போர்வீரர்க்கு, மருத்துவத்திற்கும், சத்துள்ள உணவிற்குமாக மத்திய அரசு 7,500 ரூபாய்

உதவியுள்ளது. கண்ணிழந்த ஒருவர் செயற்கைக்கண் பெற்றமை குறிப்பிடத் தக்கது. 14 முடவர்களுக்கு ஊன்றுகோல்கள் தரப்பட்டன. காலிழந்த இருவரின் திருமணச் செலவிற்கு 575 ரூபாய் வழங்கப்பட்டது. சர். விக்டர் ஸஸோன் நிதியிலிருந்து இப்பொருள் தரப்பட்டது.

உழைக்கும் திறன் உடையவர்களுக்கு வேலை தேடித்தரும் பணியில், வேலை தேடித்தரும் அலுவலகம் பெருந்துணை புரிந்துள்ளது. 761 பேர் இதன்மூலம் வேலை பெற்றுள்ளனர். முதியோர் நீங்கலாகப் பழைய படைவீரர் யாவருக்குமே திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் வேலை கிடைத்து விட்ட தெனலாம். தையல் பொறி, கறவை பசு இவற்றைக் கொண்டு பெண்கள் தம் வாழ்வை நடத்தலாம். அவற்றை வாங்கத் தேவையான அவர்களுக்கு உதவப்பட்டது.


நலம்...
சிறக்க!

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

—திருக்குறள்.

நலம் சிறக்க!

ஊனைப்பெருக்க உறுதுணை புரியும் உண்டியில் ஏதேனும் கோளாறு இருக்குமாகில் அது ஊனைப் பெருக்குவதற்குப் பதிலாக அதைக் கெடுத்து விடும். பதமற்ற உண்டியோ, உடல்தன்மைக்கு ஒவ்வாத உண்டியோ, உண்ணுவதற்கு ஏற்றவையல்ல. நீர், உணவைவிட முக்கியமாகக் கவனித்து பயன்படுத்த வேண்டிய ஒன்றாகும். நச்சுக் கிருமிகள் பரவு வதே பெரும்பாலும் நீரினால்தான். உடலை ஓம்ப வேண்டிய உண்டிக்கும் நீருக்குமே இந்தப் பிண்டத்தைப் பாதிக்கும் தன்மைகளும் உண்டு என்பதை நாம் மறந்து விடலாகாது.

தூய நீரும் உணவும் போலவே தூயகாற்றும் மக்களின் நல்வாழ்வுக்கு இன்றியமையாதது. தூயகாற்றைப் பெறுவ தற்கு நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிகள் பலவாகும். வீடு காற்றோட்டமாக அமைந்தால் மட்டும் போதாது. சுற்றுப் புறமும் தூய்மையாக இருந்தால்தான் காற்றுத் தூய்மையாக இருக்கமுடியும். நீர் தேங்கி அழுகிப்போன குட்டைகள் கிருமி களின் பிறப்பிடம். அவை இல்லாமல் தக்க கழிவு நீர்க்

கால்கள் அமையப்பெற்றும், மலக்கழிவிடங்கள் அமையப் பெற்றும் உள்ள ஊர்களில்தான் சுற்றுப்புறம் தூய்மையாக இருக்கும். எனவே நலஞ்சிறப்பதற்கு அடிப்படையா உள்ளது சுகாதாரமே.

சுகாதாரம்

நோயற்ற வாழ்வினுல் உண்டாகின்ற இன்பம் மக்கள் எல்லோருக்கும் ஏற்படுகின்ற அனுபவமே. யாவரும் பன்னெடுங்காலமாக நன்ருக உணர்ந்து வந்த ஒன்றைத்தான் ' நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் ' என நமது முன்ஞேர்கள் அழகாகச் சொல்லி வைத்தார்கள். ஆனுலும் நாகரிகம் பெருகப்பெருக மருத்துவ நிலையங்களும் மிகுந்துவரக் காண்கின்ருேம்.

சுகாதார முறையில் அமைந்துள்ள ஊருணி.



வந்த பின் தணிப்பதைவிட வருமுன் காப்பதே சாலச் சிறந்தது. அதற்கான வழிகள் நமக்குத் தெரிந்திருந்தும் அவைகளைச் சரியாகக் கடைப்பிடிக்காமல் நோய்வாய்ப் படு கின்றோம். எனவே நாம் கண்ணுங் கருத்துமாக இருந்து சுகாதாரத்தைப் பேணவேண்டும். அதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுவதில் சோம்பலுக்கு இடமளிக்கக் கூடாது.

அரசாங்கம் இத்துறையில் இரண்டு வகையான வேலை களைச் செய்கின்றது. ஒன்று, மக்களின் அறியாமையைப் போக்குவது. சுகாதாரத்தைப்பற்றிய பல புதிய உண்மை களையே மக்கள் அறியாத நிலையில், அவர்கள் சுகாதாரத்தைப் போற்றுவதில்லை எனப் பேசுவதில் பயனில்லை. மற்றொன்று, சுகாதாரத்திற்கான பலவற்றையும் செய்துகொள்ள மக்களைத் தூண்டி, தாமும் முன்னின்று அவர்களுக்கு உதவி செய்வது. இவ்வகையில் சென்ற ஐந்தாண்டுகளில் பல நல்ல செயல்கள் நடந்தேறியுள்ளன. மக்கள் தம் குடி யிருப்புக்களைத் துப்புரவாக வைத்திருக்கச் செய்வது, நீரா லும் காற்றாலும் எத்தகைய நோயும் பரவாமலிருக்க ஆவன செய்வது, தடுப்பு ஊசிகளைப் போடுவது ஆகிய பல செயல்களை அரசாங்கம் மேற்கொண்டு, நிறைவேற்றி யுள்ளது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசாங்கம் இதற்காக ஒதுக்கிய தொகை ரூ. 518 லட்சமாகும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 722·70 லட்சம் ரூபாயை இத்துறையில் செலவிட இருக்கின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் முதல் திட்டகாலத்தில் இத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைச் சுருக்கமாக இங்கு காணு வோம்.

சுகாதாரத்தில் முதல் கவனம் பெறத்தக்கது குடிநீர். காயல்பட்டினம் குடிநீர்த் திட்டத்தைச் சேர்ந்த திருச்

செந்தூர், வீரபாண்டியன்பட்டினம், காயல்பட்டினம், ஆறுமுகனேரி ஆகிய நாலு ஊர்களின் தெருக்களில் 9 குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. பாளையங்கோட்டை நகராட்சி மன்றத்தில் குடிநீர்த் திட்டம் ஒன்று உருவாகிச் செயல்பட்டு வருகின்றது. அது முடியும் தருவாயில் இருக்கின்றது. 23 இடங்களில் தொட்டி தாங்கிகள் எழுப்பப்பட்டு அவற்றின் மீது குடிநீர்த் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்காகவும், மற்றும் பல நீருணிகளுக்காகவும் ஆகிய மொத்தச் செலவு ரூ. 16·6 லட்சமாகும். 984 நீருணிகள் புதிதாகத் தோண்டப்பட்டுள்ளன. 113 குளங்களில் பழுது பார்க்கும் வேலை நடைபெற்றுள்ளது. இவையாவும் சென்ற ஐந்து ஆண்டுகளில் மட்டும் நடந்தேறிய பணிகள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். திருநெல்வேலி, நாங்குனேரி, ஸ்ரீவைகுண்டம், கோயில்பட்டி, சங்கரன் கோயில், திருச்செந்தூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஊர்களில் மேற்குறித்த குடிநீர்த் திட்டங்கள் யாவும் நடந்திருக்கின்றன.

கடையநல்லூரில் ஒரு மருத்துவ மனையும், நாரணம்மாள்புரத்தில் ஒரு மருத்துவ மனையும், தாய்சேய் நல விடுதியும் அமைக்கப் பட்டுள்ளன. மிகவும் பின்தங்கிய பகுதியாகிய பனகுடியில் நான்கு குழந்தைபேறு நிலையங்கள் (Maternity centres) நிறுவப் பட்டுள்ளன. திருச்செந்தூரிலும் களங்குடியிருப்பிலும் உள்ள மருத்துவ விடுதிகளில், குழந்தைப்பேற்றுக்கெனத் தனிப்பகுதிகள் சேர்க்கப்பட்டன. இன்னும் மருத்துவத்திற்காகச் செய்யப் பட்டுள்ள பணிகள், மருத்துவம் என்னும் தலைப்பின்கீழ் விளக்கமாகக் கூறப்படும். உடங்குடிப் பகுதியிலும் நான்கு குழந்தைப்பேறு நிலையங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

தொத்துநோய்த் தடுப்பு சம்பந்தமாகப் பல வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அம்பாசமுத்திரம் பகுதியில் 1953-

54-ஆம் ஆண்டில் காலரா மிகுதியாக விருந்தது. அங்கு நிலவிய பஞ்சக் கொடுமையும் அதற்கொரு காரணம். அந்தச் சமயத்தில் உணவும் அரிசியும் போதிய அளவு ஊரார் களுக்கு அளிக்கப் பட்டதுடன், தக்க பாதுகாப்பு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இப்பகுதிகளின் பொதுச்சுகாதார நிலை இப்பொழுது மிகவும் உயர்ந்திருக்கிறது.

அம்பாசமுத்திரம் மலைப்பகுதிகளிலுள்ள ஊர்களில் செய்யப்பட்ட வேலைகளின் விவரம் கீழே தரப்படுகிறது :—

ஆண்டு.	அம்மை ஊசிகள்.	காலரா ஊசிகள்.
1951	11,558	30,581
1952	8,773	14,069
1953	6,391	18,023
1954	10,015	29,531
1955	10,003	21,199

குடிநீர், குழந்தைப்பேறு இல்லங்கள், தொத்து நோய்த் தடுப்பு ஆகிய முயற்சிகளோடு, மலக்கழி விடங்கள் அமைத்த லாகிய மற்ருெரு பணியும் நாட்டுப்புறத்தில் குறிப்பிடத் தக்கதாகும்.

கண்ட இடத்தில் மலங் கழித்து வீட்டையும் நாட்டையும் பாழ்படுத்தும் கெட்ட பழக்கம் இன்னும் நம்மைவிட்டு முற்ற நீங்கிய பாடில்லை. இதற்குக் காரணம் மக்களின் அறியா மையே. அத்தோடு அவர்களுக்குப் போதிய வசதியின்மையும் ஒரு முக்கியமான காரணம் என்பதை நாம் மறந்து விடலாகாது. எனவே நாட்டுப்புறத்தில் மலக்கழிவிடங்கள் கட்டித்தரும் வேலை முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில்

சிறப்பாக மேற்கொள்ளப் பட்டது. இந்த மாவட்டத்தில் மட்டும் சென்ற ஐந்து ஆண்டுகளில் 339 மலக்கழிவிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

மருத்துவம்

நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

— திருக்குறள்.

குடிநீர், உணவு இவற்றில் தூய்மையும் சுற்றுப்புறத்தில் தூய்மையும் இருந்தும் நலமின்மை நாட்டில் நலிந்திருக்கலாம். பொருந்தா உணவு, அதிக உணவு, போதிய ஓய்வின்மை முதலிய எத்தனையோ காரணங்களால் மனிதனின் உடல் நலத்துக்கு ஊறு நேரலாம். குழந்தைப்பேறு மற்றொரு பேரிடர். அதனால் இறக்கும் பெண்டிர் தொகை நமது நாட்டில் அதிகம். எனவே பலவகை மருத்துவமும் யாவருக்கும் எளிதில் கிடைக்கும்படி செய்யப் பட்டால்தான் நாடு நலம்பெற முடியும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், நமது மாநிலத்தில் மருத்துவத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 248 லட்சம். இத்தொகை முழுவதும் சென்ற ஐந்து ஆண்டுகளில் செலவிடப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைப் போல மூன்று மடங்குக்குமேல் செலவழிக்கப்பட இருக்கின்றது. ரூ. 879·40 லட்சம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்காகச் செலவிடப்படும். முதல் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டம் இத்துறையில் அடைந்துள்ள முன்னேற்றங்களைக் காணுவோம்.

100 படுக்கைகள் கொண்ட மகப்பேறு நிலையம் ஒன்று தூத்துக்குடியில் திறக்கப்பட்டது. 1955-ம் ஆண்டு ஆகஸ்ட்டுமீ 15உ- லிருந்து இது வேலை செய்யத் தொடங்கியது.

உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், எல்லா மருத்துவ வசதியோடும் கூடிய நோயாளிகள் தங்குமிடம் இரண்டு கட்டப் பட்டன. ஒன்று திருச்செந்தூரிலும் மற்றொன்று பேட்டை யிலும் கட்டப்பட்டுள்ளது. அப்பகுதி ஒவ்வொன்றும் பன் னிரண்டு படுக்கைகள் கொண்டது.

உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மூன்று இடங்களில் மருத்துவ விடுதிக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஏழு மருத்துவ மனைகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. இவை களில் பெரும்பகுதி உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் திறக்கப்பட்டனவாகும். ஒன்பது தாய்சேய் நல நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவற்றை விரிவாகக் காணுவோம்.

நோயாளியின் வீடு தேடி...



சங்கரன்கோயிலிலும், நாங்குனேரியிலும் இருந்த மருத்துவ மனைகளில், முன், நன்னான்கு படுக்கைகளே இருந்தன. ஒவ்வொன்றிலும் மேலும் நான்கு படுக்கைகள் இப்பொழுது சேர்க்கப்பட்டுள்ளன.

தென்காசியிலுள்ள அரசாங்க மருத்துவ நிலையத்தில் மருத்துவ மனை ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது. அங்கு ஆறு படுக்கைகள் அமைக்கப்படும். கட்டிட வேலைகள் விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாவட்டத் தலைமை மருத்துவ நிலையங்களில் கம்பவுண்டர் பயிற்சிதரும் திட்டமொன்று செயல்பட்டு வருகின்றது. அதன் கீழ் பாளையங்கோட்டையில் 1951-ஆம் ஆண்டிலிருந்து பத்து பேர் பயிற்சிபெற்று வருகின்றனர். இவர்களுள் ஐவருக்குப் பொருளுதவி தரப்படுகின்றது.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சேரன்மாதேவியிலுள்ள, உள்ளூர் நிதியால் நடத்தப்பெறும் மருத்துவ விடுதிக்கு, நான்கு படுக்கைகள் கூடுதலாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு அரியநாயகிபுரத்தில் உள்ள நாட்டுப்புற மருத்துவ விடுதிக்கான கட்டிடம் ஒன்று அங்கு கட்டப்பட்டு வருகிறது. அதற்காக ரூ. 4,000 ஒதுக்கப் பட்டுள்ளது.

ஸ்ரீவைகுண்டம், ஓட்டப்பிடாரம், சாத்தான்குளம், கடையநல்லூர், களங்குடியிருப்பு, ஏரல் ஆகிய இடங்களில் நன்னான்கு படுக்கைகளோடு கூடிய மருத்துவ மனைகள் கட்டப் பட்டுள்ளன.

விக்ரமசிங்கபுரத்திலும், ஆறுமுகனேரியிலும் மருத்துவ விடுதிக்கான கட்டிடங்கள் கட்டப் பட்டுள்ளன.

மருத்துவ மனைகள் இந்த மாவட்டத்தில் நிரம்ப எழுப்பப் பட்டிருக்கின்றன. அதற் கேற்றுற்போல பயிற்சி பெற்ற செவிலியரும் நிறையவேண்டும். எனவே 1953-ஆம் ஆண்டிலிருந்து வண்ணாரப்பேட்டைத் தாய்சேய் நல விடுதியில் பன்னிருவருக்குப் பயிற்சி தீரப்பட்டு வருகின்றது. அவர்களில் இருவர் பண் உதவி பெறுகின்றனர்.

கோயில்பட்டி தேசியப்பணி வட்டாரத்தில் ஒரு தலைமை சுகாதார நிலயத்தை நிறுவ 1955-ல் அனுமதி அளிக்கப் பட்டது. அந்த நிலயத்தை எந்த ஊரில் நிறுவுவது என்பது குறித்து இன்னும் ஒரு முடிவும் ஏற்படாமையால் அது தொடங்கப் பெறுமலே இருக்கின்றது.

எல்லோரும் கூடி...
இன்புற்றிருக்

" திங்கள்மும் மாரி பெய்க! திருவளம் வளர்க! செங்கோல்
நன்கினி தரச னாள்க! நாடெலாம் விளைக!—மற்றும்
எங்குள அறத்தினோரும் இனிதூழி வாழ்க....! "

எல்லோரும்கூடி . . .
இன்புற்றிருக்க !

கூட்டுறவு

" ஒன்றுபட் டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே "

என்று பாரதியார் அறிவுறுத்தினர். நாம் " நெல்லிக்காய் மூட்டை " என்பதை நன்கு உணர்ந்துதான் இவ்வாறு அறிவுறுத்தி யுள்ளார். ஒற்றுமை இல்லாத காரணத்தால் நாம் எல்லாத் துறைகளிலும் தாழ்வுற்று பிற்போக்கில் நிற்கும் நிலை கண்டார்; அதனல் நெஞ்சம் நொந்தார். எனவே உளங்கசிந்து அவர் தந்த இந்த உரைவழி நின்று பணியாற்றினல் நாம் மேன்மையுறலாம். மனித இனமாக மாண்போடு வாழலாம்.

பழங்கால மக்களுக்குக்கூட ஒற்றுமையின் மேன்மை ஓரளவு தெரிந்துதான் இருந்தது. பல வணிகர்கள் ஒன்று கூடி வாணிபம் செய்ததை பழங்காலத் தமிழ்ப்பாடல்களிலும் கல்வெட்டுக்களிலும் காணலாம். அந்தக் காலத்தில்

இருந்த ஊராட்சி முறையும் மக்கள் ஒருமையின் பெரு மையை ஒருவாறு உணர்ந்திருந்தனர் என்பதைக் காட்டு கின்றது.

வியக்கத்தக்க வகையில் இன்று நாடெங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றி வருகின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 17 லட்சம் ரூபாய் இவற்றின் வளர்ச்சிக்காக சென்னை மாநிலத்தில் ஒதுக்கப்பட்டது. நெல்லை மாவட்டத்தில் சென்ற ஐந்து ஆண்டுகளிலும் நடந்தேறியுள்ள வேலைகள் பலவாகும்.

கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் நூறும், நெச வாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நாற்பத்தி நான்கும், பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கங்கள் இருபத்திஎழும் திட்ட காலத்தில் புதிதாக இந்த மாவட்டத்தில் அமைக்கப்பட்டன. நாட்டுப்புற வங்கிகள் பலவும் புதிதாகத் தோற்றுவிக்கப் பட் டுள்ளன.

கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொரு தொழிலுக்கும் ஏற்பட் டன. கூட்டுறவின் மூலம் தொழில்கள் வளம் பெற்றன. தொழிலாளர்களின் வாழ்வு உயர்ந்தது.

ஐந்து ஆண்டுகளிலும் தோன்றிய சங்கங்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

	1951–52	1952–53	1953–54	1954–55	1955–56
பல்பணி நாணயச் சங்கங்கள் (Multipurpose Credit Societies)	17	16	7	..	4
நாணயச் சங்கங்கள் ..	..	2	..	1	..
நில அடமான வங்கிகள் ..	1	..	..	..	..
நாட்டுப்புற வங்கிகள் ..	..	..	..	1	..
கருப்புக்கட்டி உற்பத்திக் கூட்டுறவுகள்	..	..		.	1

	1951-52	1952-53	1953-54	1954-55	1955-56
நெசவாளர் கூட்டுறவுகள்	3	..	16	1	2
பாய் பின்னுவோர் கூட்டுறவுகள்	..	..	1	2	..
பால் விநியோகக் கூட்டுறவுகள்	1	..	4	4	1
மாணவர் பண்டக சாலைகள்.	..	2	1	1	..
வீடுகட்டும் சங்கங்கள் ..	..	..	..	1	1
நாட்டுப்புற வீடுகட்டும் சங்கங்கள்	..	1	..	1	..
ஆயக்குளப் பாசனச் சங்கங்கள்	1	..	..	..	..
வேளாண்மை முன்னேற்றம்	..	..	..	1	..
கைக்குத்தல் (Hand-pounding machine) ..	..	..	..	1	.
குயவர் சங்கங்கள்	..	..	..	..	1
கம்மாளர் சங்கங்கள்	..	1	..	1	1
செக்கார் சங்கங்கள்	..	..	1	..	1
மீனவர் சங்கங்கள் ..	..	2		1	..

திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவுத் தலைமை வங்கி, கிராம நாணயச் சங்கங்களுக்கு வேண்டிய பொருளை வழங்கும். இம்மாவட்டத் தலைமை கிராம நாணயச் சங்கம் மட்டுமல்லாது, ஏனைய சங்கங்களுக்கும் இது பொருளுதவி செய்கின்றது. இந்த உதவியைப் பெற்று அவைகள் தம் உறுப்பினர்களுக்கு வேண்டிய பொருளாதார வசதிகளைக் கவனிக்கின்றன.

தொழில் சம்பந்தமான கூட்டுறவுகள், மூலப்பொருள்களை வாங்கித் தம் உறுப்பினர்களுக்கு வழங்குவதும், பின்னர்

உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைச் சேகரித்து விற்பதும் ஆகிய வேலைகளில் ஈடுபடுகின்றன. தம் உறுப்பினரின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கான யாவற்றையும் இச்சங்கங்கள் கவனிக்கின்றன.

மேலச்சேவலில் தொடங்கப்பட்டுள்ள நாட்டுப்புற வங்கி சுற்றுப்புறத்தில் ஐந்து மைல் கட்டி, இடையேயுள்ள 12 கிராமங்களுக்குப் பயன்படுகின்றது.

பல்பணி நாணயச் சங்கங்கள், சிறப்பாக வேளாண்மை வளர்ச்சியில் நல்ல பணிபுரிந்து வருகின்றன. இதன் உறுப் பினராகவுள்ள உழவர், 17,177 எருக்குழிகளை வெட்டித் தம் எருத் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டுள்ளனர்.

சங்கரன்கோயில், திருநெல்வேலி, வீரவாநெல்லூர் ஆகிய பகுதிகளிலுள்ள விற்பனைச் சங்கங்கள் தம் உறுப்பி னர்களுக்கு விளைச்சலை ஈடாகக்கொண்டு கடன் அளிக்கின்றன. மிளகு, வெங்காயம், பருத்தி ஆகியவற்றிற்கு சங்கரன்கோயில் ஒரு பெரு நிலையமாகும்.

1954-55-ஆம் ஆண்டில் இந்தச் சங்கங்கள் 87,106 ரூபாய் பெறுமான பொருள்களை ஏற்றுமதி செய்தன. அதைப் போலவே 1955–56-ஆம் ஆண்டிலும் 1,19,508 ரூபாய்க்கு விளை பண்டங்களை ஏற்றுமதி செய்துள்ளன. இதன் மூலம் இச்சங்கங்களுக்கு நல்ல வருவாய் கிடைக்கிறது. கூட்டுறவு முறையில், இறுதியாகப் பயனடைவோர் அதன் உறுப்பினர் களே என்பதை நாம் மறந்துவிடலாகாது. கூட்டுறவின் சிறப்பே அதுதான். வெங்காயம், மிளகு ஆகியவை இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. 1955–56-ஆம் ஆண்டில் ஏற்று மதிக்கு அனுமதிக்கப்பட்ட வெங்காயம் 190 டன்களாகும். இதில் 109 டன்களை சங்கரன்கோயில் விற்பனைச் சங்கமே ஏற்றுமதி செய்துவிட்டது. 1955-ஆம் ஆண்டில்,

திருநெல்வேலி விற்பனைச் சங்கம், அவ்வாண்டிற்கு அனுமதிக் கப்பட்ட 95 டன்களையும் தானே ஏற்றுமதி செய்துவிட்டது. இத்தகைய விற்பனைச் சங்கங்களின் தொண்டு மிகவும் பாராட்டத்தக்கது. தொழில் வளருவதற்கு இத்தகைய விற் பனைச்சங்கங்கள் மிகமிக இன்றியமையாதன வாகும்.

சிந்தாமணி, ராதாபுரம் ஆகிய இடங்களிலுள்ள கருப்பட்டி காய்ச்சுவோர் சங்கங்கள், மதுவிலக்கால் வேலையிழந்த மரமேறிகளுக்குக் கிடைத்த அருட் கொடைகளாக இருந்து வருகின்றன. வேலையில்லாமை என்னும் கொடிய அரக்கன் கைப்படாமல் அவர்களைக் காப்பாற்றி வருவது இந்தச் சங்கங் களே. மதுவின் கேடுகளை எடுத்துக்கூறி மதுவிலக்கை வெற்றிகரமாக அமுல் நடத்த அச்சங்கங்கள் தீவிரமாக உழைக்கின்றன. பால் விநியோகிப்பதும் இச்சங்கங்களின் பணிகளுள் ஒன்று. பழைய மரமேறிகளுக்கு அதன்மூலம் வேலையளிப்பதே இதன் நோக்கம்.

புதிய முறையில் பனைவெல்லம் காய்ச்சுதல் எப்படி யென்பதை அத்தொழிலில் உள்ளவர்களுக்கு அறிவுறுத்து வோர் (Instructors) இருவர் உள்ளனர். அவர்கள் இச்சங்கங் களுக்கு நேரில் சென்று எளிய புதிய லாபகரமான முறைகளை யாவருக்கும் செய்து காட்டுகின்றனர்.

பனைவெல்லம் விற்பனைச் சங்கம், ஒன்று திசையான்வில்லை யில் முன்னர் இருந்தது. இப்பொழுது அதனை விரிவுபடுத்தக் கருதி மாவட்டத் தலைமை நகருக்கு மாற்றியுள்ளனர். உற்பத்திச் சங்கங்கள் யாவும் இந்த விற்பனைச் சங்கத்தோடு தொடர்பு கொண்டுள்ளன. உறுப்பினரின் நலனைக் கருத்தில் கொண்டு இவை விற்பனையில் ஈடுபடுகின்றன. திசையான் வில்லை, வள்ளியூர், உடங்குடி ஆகிய இடங்களில் இதற்குக் கிளைகள் இருக்கின்றன. பனைநாருக்கு அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் இன்று தேவை அதிகரித்திருக்கிறது.

அங்கு நேராக இப்பொருள்களை அனுப்புவது குறித்து அந்த நாடுகளோடு இந்த விற்பனைச் சங்கம் கடிதப்போக்கு வரத்து நடத்தி வருகின்றது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுகள் இன்று மிகவும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எய்தியுள்ளன. சென்ற ஐந்தாண்டுகளில் இச்சங்கங்கள் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது. கைத்தறி நெசவாளரின் வாழ்க்கை ஓடங்கள் புயலில் சிக்கியதும், அரசாங்கத்தின் அரிய முயற்சியால் காப்பாற்றப்பட்டதும் நமது மாநிலத்தில் முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் நேர்ந்த ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியென்பதை எல்லோரும் அறிவர். மொத்தம் 57 கைத்தறி நெசவாளர் சங்கங்கள் இந்த மாவட்டத்தில் இருக்கின்றன. இச்சங்க உறுப்பினர்களுக்கு வட்டியின்றிக் கடன் தருவதற்காக அரசாங்கம் ரூ. 1,12,937–8–0 அளித்தது. விற்பனையில் தள்ளுபடி தரும் முறையை அரசாங்கம் கைத்தறிக்கு அளித்து, அதன் மூலம் விற்பனையை அதிகப்படுத்தி யுள்ளதால் நெசவாளர் வாழ்வு பெருகவும், தொழில் உயரவும் வழி ஏற்பட்டுள்ளது.

பொருட்காட்சிகளில் தங்கள் கடைகளை நிறுவி, கைத்தறிக்கு நல்ல விளம்பரம் தரும் பணியையும் இச் சங்கங்கள் மேற்கொண்டன. திருநெல்வேலியில் நடைபெற்ற மூன்றாவது அகில இந்தியக் கைத்தறிக் கண்காட்சியில், சுமார் 50,000 ரூபாய்க்கு, ஒரு வாரகாலத்தில், கைத்தறித் துணி விற்பனையாகியுள்ளது என்றால் அவர்களின் சிறந்த பணிக்கு வேறு எடுத்துக்காட்டு வேண்டுவதில்லை.

பலவேறு சங்கங்கள் மூலம் செலவிடப்பட்ட தொகையின் விவரம் கீழே தரப்படுகிறது :—

	ரூ.	அ.	ப.
பால் விநியோகச் சங்கங்கள் (கடன்) ..	31,925	15	0
நகரச் சுற்றுப்புற வீடுகள் கட்டும் சங்கம்	49,600	0	0

	ரூ.	அ.	பை
நாட்டுப்புற வீடுகள் கட்டும் சங்கம் ..	4,000	0	0
பனைவெல்லத் தொழில் வளர்ப்பு ..	750	0	0
கறவைகள் வாங்க	40,000	0	0
விற்பனைச் சங்கங்களுக்கும் கிராம நாணயச் சங்கங்களுக்கும் இருப்பிடங்கள் ..	4,450	0	0
நெசவாளர் சங்கங்கள் (வட்டியில்லாக்கடன்)	31,718	0	0
பங்குத் தொகையைப் பொறுத்து நெசவாளருக்கு அளித்த கடன்	2,318	12	0
நெசவாளர் சங்கங்களுக்குத் தரப்பட்ட உதவி	19,731	14	0
கைத்தறி விற்பனைச் சங்கங்களுக்கு உதவி.	19,071	4	0
கூட்டுறவு உறுப்பினருக்கு வட்டியில்லாக் கடன்	7,332	0	0
கடன்	10,400	0	0

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்ககாலத்தில் இந்த மாவட்டத்தில் இருந்த கூட்டுறவுகளின் எண்ணிக்கை, உறுப்பினர் தொகை முதலியவற்றையும், திட்டத்தின் முடிவில் அவற்றின் நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால்தான் அவை எந்த அளவுக்கு முன்னேற்ற மடைந்திருக்கின்றன என்பதை நன்கு உணர முடியும்.

	1951	1956
கிராம நாணயச் சங்கங்கள் ..	268	310
இச் சங்கங்களுக்குள் அடங்கிய கிராமங்கள்	356	400
உறுப்பினர்	16,190	32,800
பங்குத் தொகை	ரூ. 1,97,770	ரூ. 2,94,748

	1951	1956
விற்பனைச் சங்கங்கள்	3	3
உறுப்பினர்	1,667	1,811
பங்குத் தொகை	ரூ. 20,243	ரூ. 20,246
பால் விநியோகச் சங்கங்கள்	14	24
உறுப்பினர்	2,777	4,903
பங்குத் தொகை	ரூ. 53,619	ரூ. 73,013
சங்கங்களிலுள்ள கறவைகளின் எண்ணிக்கை	1,960	2,802
பனைவெல்லங்காய்ச்சும்		
கூட்டுறவுகள்	217	218
உறுப்பினர்	26,815	32,106
பங்குத் தொகை	ரூ. 34,170	ரூ. 45,286
பனங்கற்கண்டு காய்ச்சும் பாண்டங்கள்	90	234
வீடுகட்டும் கூட்டுறவுகள் ..	4	7
உறுப்பினர்	344	400
பங்குத் தொகை	ரூ. 2,73,829	ரூ. 3,11,699
கட்டி முடிக்கப்பட்ட மனைகள்.	186	210
நெசவாளர் கூட்டுறவுகள் ..	35	57
உறுப்பினர்	8,209	11,751
பங்குத் தொகை	ரூ. 4,14,910	ரூ. 5,44,462
மொத்தமுள்ள தறிகள் ..	7,570	11,637

—:o:—





முன்னேற்றப் பாதையிலே!

இரண்டாவது திட்டம்

உழவும், தொழிலும் ஒன்றிவளர்ந்தால் தான் நாடும் நன்னிலை அடையமுடியும். மக்களின் வாழ்வும், மடிமையும் பிணியும் இன்றி மாண்புடன் திகழும். எனவேதான் வேளாண்மையோடு, ஆலைகள் பலவற்றையும் நிறுவித் தொழிலை வளர்க்க வேண்டும் என்னும் பெரு நோக்கத்துடன் இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டம் மேற் கொள்ளப்பட்டது.

பெருந் தொழில்களை நாம் வளர்க்க எண்ணும்பொழுது அதனால் அடையும் பயன் பொதுமக்கள் அனைவரையும் சாரவேண்டும். இல்லெனில் பெரும் தொழிலால் ஒரு சிலர் ஆடம்பரமாக வாழவும், பலர் வறுமையால் நலிந்து வாடவும் நேரிடும். இப்பேருண்மையை உணர்ந்த நம் அரசாங்கம், சோஷியலிஸ் முறையில் அரசாங்கத்தை நடத்தத் தீர்மானித்தது. அந் நெறியிலேயே செயல்களையும் ஆற்றி வருகிறது.

பொது மக்களின் வளமான வாழ்வை எண்ணியே இரண்டாவது திட்டத்தின் பொது நோக்கங்கள் வகுக்கப்பட்டன. கணிசமான அளவுக்குத் தேசிய வருமானத்தைப் பெருக்கி அதன் மூலம், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழி காணப்பட்டுள்ளது. அடிப்படையான பெருந் தொழிலுக்கு ஆக்கங் கொடுத்து நாட்டை விரைவில் தொழில் மயமாக்க வேண்டும். இவ்வாறு செய்வதால், நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம், பெரும் அளவுக்குக் குறையும். வேலை செய்வோருக்கும் எண்ணரிய புதிய புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பொருளாதாரத் துறையிலே தற்சமயம் இருக்கும் மலைக்கும், மடுவுக்குமிடையே உள்ள வேற்றுமையும் குறையும்.

இவையெல்லாம் நம்முடைய குறிக்கோளை அடைவதற்குரிய சில வழிகளாகும். சோஷியலிஸ சமுதாயத்தை உருவாக்குவதிலே, இந்த வழிகள் நம்மை நீண்ட தூரம் அழைத்துச் செல்லுமென்பதிலே ஐயம் இல்லை. ஆனால் நம்முடைய இறுதி லட்சியம் அது தான். அந்த அமைப்பு முறையை நாம் அமைத்தால் ஒழிய ஏழைகளுக்கு இனிய வாழ்வில்லை என்பதையும் அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது. எனவே அத்துறையில் முழுவெற்றி அடையும் வரை அமைதியின்றிப் பல ஆக்கப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். தளர்வின்றித் திட்டங்களை வெற்றியோடு முடிக்கவேண்டும்.

நாட்டின் செல்வ வளம் ஓர் இடத்திலேயே குவிந்துவிடாமல் எல்லாப் பகுதிகளிலும் பரவலாக இருக்கும் வண்ணம் நாட்டின் பொருளாதார நிலை அமைக்கப்படும். அதற்கேற்ற வண்ணம் தொழில்களைப் பரவலாக அமைக்கும்படித் திட்டக் குழுவும் வற்புறுத்தி உள்ளது.

பின் தங்கிய பகுதிகளை முதலில் கவனித்து அவைகள் வளம் பெறும் வகையில் ஆவன செய்யப்படும்.

இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தின்படி நம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை 173 கோடி ரூபாய் ஆகும். இத்தொகையைக் கொண்டு நாம் கீழ்க்கண்டவாறு நம் மாநிலத்தை வளம்படுத்தத் திட்டங்கள் வகுத்துள்ளோம் :—

துறைகள்	ரூபாய் (லட்சக் கணக்கில்.)
மின்சாரம்	5,759.80
கிராம வளர்ச்சி	1,710·00
நீர்ப்பாசனம்	1,365·20
குடிசைத் தொழில்கள்	1,425·00
கல்வி (தொழிற் கல்வியும் சேர்த்து) ..	1,425·00
மருத்துவம்	879·40
வேளாண்மை	750·50
சுகாதாரம்	722·70
பாதைகள்	807·50
பின் தங்கிய வகுப்புக்களின் முன்னேற்றம்.	599·50
மனையிடங்கள்	341·70
கூட்டுறவு	292·90
கால்நடை வளர்ச்சி	236·00
காடுகள்	146·20
பால் பண்ணை	142·60
மீன்துறை	124·40
மண் வளம் பேணுதல் (Soil Conservation).	118·70
நகர் அமைப்புத் திட்டம்	95·00
நடுத்தரத் தொழில்கள் (Medium Industries)	95·00
உள்ளூர் ஆட்சி மன்றங்கள்	95·00
சமுதாய நலன்	86·25
ஒலி பரப்பு	28·50

துறைகள்	ரூபாய் (லட்சக் கணக்கில்)
புள்ளி விவரத் திட்டம்	19·30
விளம்பரம்	14·30
உழைப்பாளர் நலன்	11·40
இதர வகைகள்	14·20
மொத்தம் ..	17,306·05

இரண்டாவது ஐந்தாண்டின் திட்டத்தின் முடிவிலே நம்முடைய நாடு மகத்தான, இனிய மாறுதலை அடையும். உழவும், தொழிலும் உன்னத நிலையிலே விளங்கும். நாட்டின் வருமானம் நூற்றுக்கு இருபத்தைந்து பங்கு உயர்ந்திருக்கும். கோடிப் பேருக்கு மேல் புதிய துறையிலே பணியாற்றுவார்கள். அதனால் மக்களின் வாழ்வும் பன் மடங்கு வளம் பெறும்.

இந் நன்னிலையை அடைய மக்கள் அனைவரும் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பார்களாக! திட்டத்தின் வெற்றியே நாட்டின் வெற்றி. அதுவே மக்களின் வெற்றி. அதுவே வாழ்க்கையின் வெற்றி. இவ்வுண்மையை மறக்காமல் அனைவரும் ஒன்று பட்டு உழைப்போமாக! அப்பால் வெற்றிபெறுவோம் என்பதிலே தினையளவும் ஐயமில்லை.

ADRA
சென்னை அரசாங்க அச்சுக்கூட சூப்பரின்டெண்டென்டாரால் அச்சிடப்பெற்றது